Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 28 சுடர்: 28 கதிர்: 278 வள்ளுவர் ஆண்டு: 2044 ஆவணி 15, சனி 31.08.2013


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரும் முதன்மை வேட்பாளரும்

X 5

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மீறிய 7 பேருக்கு அபராதம் 03
கச்சதீவை மீளப்பெற முடியாது 08
களமிறங்குகின்றது ரஷ்யா 09
அதிர்ச்சித் தோல்வியுற்றார் செரீனா வில்லியம்ஸ் 27

# போர்க்குற்ற விசாரணை நடத்தியே தீர வேண்டும்

## நவிப்பிள்ளையிடம் வலியுறுத்தியது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, ஒகஸ்ட் 31
"இறுதிப்போரின் போது தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் இழைத்த போர்க்குற்றங்கள் மற்றும் படைத் தரப்பினர் நடத்திய - நடத்திக்கொண்டிருக்கின்ற மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப்பட்டே ஆக வேண்டும்."

இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வலியுறுத்தியுள்ளது.

உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நேற்று ஒரு மணிநேரம் கொழும்பு - சினமன் லேக்சைட் ஹோட்டலில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே கூட்டமைப்பு இவ்வாறு வேண்டுகோளை விடுத்துள்ளது.

காலை 8.15 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கூட்டமைப்பின் வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளரும் ஓய்வுபெற்ற நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில், "இலங்கை அரசின் அசமந்தப்போக்கு குறித்தும், தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் நவநீதம்பிள்ளையிடம் நாம் எடுத்துரைத்தோம்" என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நேற்று 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர். இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வரு

தொடர்ச்சி: பக்கம் 25

### முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை முறையிட்ட கூட்டமைப்புக்கு பாராட்டு

கொழும்பு, ஒக. 31
இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக அரசின் அனுமதியுடன் பௌத்த மத தீவிரவாத அமைப்புகளால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தாக்குதல்கள், நடவடிக்கைகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முறையிட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 25

## சுட்டார் சர்வானந்தா

தென்மராட்சி, ஒக. 31
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான சர்வானந்தா துப்பாக்கிச்சூடு நடத்தியதால் சக வேட்பாளரான அங்கஜன் இராமநாதனின் பாதுகாவலர் ஒருவர் காயமடைந்தார் என்று இராமநாதன் தரப்புச் சட்டத்தரணிகள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு விசாரணையின் போது தெரிவித்தனர்.

இதனையடுத்து இது தொடர்பாக சர்வானந்தாவிடம் விசாரணை நடத்தி அது தொடர்பான அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார் நீதிவான்.

சாவகச்சேரியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களின் ஆதாரவாளர்களுக்கு இடையிலான துப்பாக்கிச்சூடு தொடர்பான விசாரணை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்றது. இதன்போது கொலை முயற்சி குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட

தொடர்ச்சி: பக்கம் 25

## இராமநாதன் வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஒக. 31
கொலை முயற்சி குற்றச்சாட்டின் கீழ் கைதாகி விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இராமநாதன் நேற்று மாலை யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் நேற்றிரவே தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு மாற்றப்பட்டார்.

நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட அவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனை அடுத்து நேற்று மாலை திடீர் நெஞ்சுவலி காரணமாக அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும் அங்கு அவருக்கு தனியறையில் வைத்து சிகிச்சை அளிக்கும் வசதி இல்லை என்பதால் நேற்றிரவே தனியார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

(கு-4-8-400)

## காணாமற்போனோர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்ட உதவுவேன்

### உறவுகளிடம் நவநீதம்பிள்ளை உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், ஒக.31
காணாமற்போனவர்கள் தொடர்பான பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு, எனக்குள்ள சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்வேன்.

இவ்வாறு காணாமற் போனவர்களின் உறவினர்களிடம் நேற்று உறுதியளித்தார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்தவால் நியமிக்கப்பட்டுள்ள காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழு நடுநிலைமையுடன் சர்வதேச தரத்திலான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவரிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் ஆணையாளர் அங்கு குறிப்பிட்டார்.

நேற்று கொழும்பில் தன்னை சந்தித்து தமது கண்ணீர்க் கதைகளை கொட்டித் தீர்த்த காணாமற்போனோரின் உறவினர்களை கட்டியணைத்து அவர்களுக்கு ஆறுதல் அளித்தார் நவநீதம்பிள்ளை.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, சர்வதேச காணாமற்போனோர் தினமான நேற்று, காணாமற்போனோரின் உறவுகளை கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பவுண்டேசனில் மாலை 6 மணியிலிருந்த 7 மணி வரை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை முழுவதிலிருந்தும் காணமல் போனோரின் உறவுகள் 350 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

ஆரம்பத்தில் காணாமற்போனரின் தாய்மார் 9 பேர் தமது பிள்ளைகள் காணாமற் போன சம்பவங்களை விவரித்தனர். இதன்போது சோகம் தாங்காமல் அவர்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். இந்தச்

தொடர்ச்சி: பக்கம் 25

## காணாமற்போனோர் விசாரணை ஐ.நா. குழுவை அனுமதியுங்கள்

### இலங்கையிடம் கோருகிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, ஒக.31
காணாமற்போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க ஜனாதிபதி மஹிந்தவினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு சர்வதேச உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும், காணாமற்போதல்கள் மீதான ஐ.நா. செயற்குழுவை இலங்கைக்குள் அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச காணாமற்போனவர்களுக்கான தினமான நேற்று வெள்ளிக்கிழமை ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: . போரின் போதும் போரின்

தொடர்ச்சி: பக்கம் 25

## நவநீதம்பிள்ளையுடன் பேசியவர்களுக்கு மிரட்டல்

### சுட்டிக்காட்டியது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஒக.31
வடக்கு - கிழக்குக்குப் பயணம் செய்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்துத் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறியவர்கள் புலனாய்வாளர்களால் தொடர்ந்து மிரட்டப்பட்டு வருவதாக நேற்று அவருடனான சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை முதன்மை வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன் மேற்படி விடயத்தை

தொடர்ச்சி: பக்கம் 25

## காணாமற்போனோர் தொடர்பில் விசாரணையைத் துரிதப்படுத்தி விரைவில் எட்டுங்கள் முடிவை

### ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார் நவிப்பிள்ளை

கொழும்பு, ஒக.31
நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் படி உடனடியாக காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்தி தீர்வைக் காண முன்வர வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தி உள்ளார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்றுமாலை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் ஐ.நா. அதிகாரிகள், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். இதன்போது நவநீதம்பிள்ளை ஜனாதிபதியிடம் மேலும் தெரிவித்ததாவது:

போர் நடைபெற்ற இடங்களில் மீளக்குடியேற்றப் பணிகளில் அரசு சில இலக்குகளை எட்டியுள்ளதை அவதானிக்க முடிந்தது. எனினும் இலங்கையில் மத நல்லிணக்கத்துக்கு எதிரான செயற்பாடுகள் தோன்றியிருப்பதையும் அறிய முடிந்தது. நாட்டின் அமைதிக்கு இன, மத நல்லிணக்கம் அவசியமானது. இதேவேளை இலங்கையில் காணாமற்போனோர் பிரச்சினை நீண்ட காலமாக தீர்க்கப்படாமலே உள்ளது. எனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின்படி விசாரணையை துரிதப்படுத்தி காணாமற்போனோர் பிரச்சினைக்கு விரைந்து முடிவு காண வேண்டும் - என்றார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "அண்மையில் இடம்பெற்ற மத ரீதியான தாக்குதல் சம்பவங்கள் தனிப்பட்ட இரு குழுக்களுக்கிடையேயான மோதல் மட்டுமே. இதேவேளை, நாட்டுக்கு நாடு ஐ.நா. சபை வெவ்வேறான அணுகுமுறைகளை கையாள்வதாக இலங்கை மக்கள் கருதுகின்றனர்." என்றார். (ங)

## சட்ட விரோத ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளனவா?

### பொலிஸ் விசாரணை ஆரம்பமாம்

யாழ்ப்பாணம், ஒக.31
யாழ்ப்பாணத்தில் சட்டவிரோத ஆயுதங்களின் பயன்பாடு உள்ளதா என்பது தொடர்பில் தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். பத்திநாயக்க தெரிவித்தார்.

வேட்பாளர் அங்கஜனின் தந்தையான இராமநாதன் சாவகச்சேரியில் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை தொடர்பில் கேட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

நேற்று நடத்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அத்தியட்

தொடர்ச்சி: பக்கம் 25

# வடக்கு–கிழக்கு காணிப் பிரச்சினைக்கு அடுத்த ஆண்டு டிசெம்பருக்குள் தீர்வு

மட்டக்களப்பு.ஓக 31

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவான காணிப்பிரச்சினைகள் உள்ளன. அடுத்த 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குள் நாங்கள் தீர்த்து வைப்போம் என்று காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி. ஆர்.ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புளுகுனாவ மற்றும் கெவிலியா மடு பிரதேசங்களில் நிலவி வரும் காணிப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான காணிக் சச்சேரி நடமாடும் சேவையொன்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் நடை பெற்றபோது அதை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் போர்ச்சூழல் நிலவியதால் இந்தக் காணிப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாமல் இருந்தன. இவ்வளவு நீண்ட காலமாக உள்ள காணிப்பிரச்சினைகளை ஓரிரு மாதங்களுக்குள் தீர்த்து வைக்க முடியாது.

தற்போது வட மாகாணத்திலுள்ள காணிப் பிரச்சினைகளை நாங்கள் படிப்படியாகத் தீர்த்து வைத்து வருகின்றோம். இனி கிழக்கு மாகாணத்திலுள்ள காணிப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைவாகக் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக் கையை எடுத்து வருகின்றோம். அதற்கான நிதிகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டையும், அடுத்த ஆண்டையும் காணிப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் ஆண்டாக நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம். காணிப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்காகக் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் காணிக் கச்சேரி நடமாடும் சேவைகளை நடத்தி அங்குள்ள பிரச்சினைகளை தீர்த்து வைக்க பிரதேச செயலாளர் மட்டத்தில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தமிழர்கள், சிங்களவர்கள் என்று இனம், மதம், மொழி பார்த்து வேலை செய்வதில்லை. சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு காணிச் சட்டத்திற்குபட்ட வகையில் இந்த காணிப் பிரச்சினைகளை தீர்த்து வைப்போம்-என்றார். (த)

# பாடசாலை வளவில் நேற்று இளைஞன் சடலமாக மீட்பு

## கொலை எனச் சந்தேகம்



வவுனியா.ஓக 31

வவுனியா, சுந்தரபுரம் பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றின் வளாகத்தில் இருந்து இளைஞனொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுந்தரபுரத்தைச் சேர்ந்த சாந்த குமார் சதீஸ்வரன் (வயது-30) என்ற இளைஞனே இவ்வாறு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்து கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் இவர் நாடு திரும்பியிருந்தார்.

இவர் நேற்றுமுன்தினம் மாலை தனது மோட்டார் சைக் கிளில் சென்ற இவர் இரவா கியும் வீடு திரும்பவில்லை. நேற்றுக் காலை அவரை உறவினர்கள் தேடிய போதே பாடசாலை வளாகத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரது சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு அருகில் இருந்து மது போத்தல்கள் காணப்பட்டதாகவும், இவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை காணவில்லை எனவும் கூறப்படுகிறது. சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (த-402)

# பொலிஸ் திணைக்களம் ராணுவமயப்படுத்தப்படா

கொழும்பு.ஓக 31

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளராக தான் நியமிக்கப்பட்டமையால் பொலிஸ் திணைக்களம் இராணுவ மயப்படுத்தப்பட மாட்டாது என்று அமைச்சின் செயலாளர் இளைப்பாறிய மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ செய்த வேலைகளைத்தான் தொடரப்போவதாகவும் தேவை ஏற்படின் கொள்கைகளை அச்சமின்றி மாற்றிக் கொள்வேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள், பொலிஸாருடன் சுமுகமாகப் பழகும் வண்ணம் பொலிஸ் சேவை, மக்கள் நட்பானதாக இருக்க வேண்டும். அப்போது தான் பொலிஸார் தம்மைச்சுற்றி இடம்பெறும் தீய செயல்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். பொலிஸாரால் செய்யப்படும் நல்ல விடயங்களைப் பாராட்டும் வேளையில் பிழை செய்பவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும். பொலிஸாருக்கு வழங்கப்படும் சம்பளம்போதுமானதல்ல இந்த பிரச்சினையை தீர்க்க நான் முயற்சியெடுப்பேன் என்றும் செயலாளர் தெரிவித்தார். (த)

# வெலிவேரிய சம்பவம் குறித்து ஐ.நாவுக்கு பௌத்ததேரர் மனு

கொழும்பு.ஓக 31

வெலிவேரிய சம்பவம் குறித்து முறையான விசாரணை இடம்பெறாவிட்டால் சர்வதேச மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டிவரும் என வெலிவேரிய கல்ஒழுவ சம்புத்த ஜயந்தி விகாராதிபதி தெரிபஹே சிறிதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளில் திருப்தி இல்லை எனத் தெரிவித்து கொழும்பில் உள்ள ஐ.நா அலுவலகத்தில் தெரிபஹே சிறிதம்ம தேரர் நேற்று மனுவொன்றைக் கையளித்தார்.

வெலிவேரிய சம்பவம் தொடர்பில் முறையான விசாரணை இடம்பெற வேண்டும் என மனுவைக் கையளித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேரர் குறிப்பிட்டார். (த)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.




ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003

ஈழத்து நவீன நாடக அரங்கில் ஓர் புதிய முயற்சி...
பிரமாண்ட படிமங்களாக கதை பேசும்
செயல் திறன் அரங்க இயக்கத்தின்
இளையோர் நாடக விழா 2013







அனுமதி இலவசம்

(C/11683)

செப்ரெம்பர் 1ம் திகதி மாலை 3.00 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்,

USAID
FROM THE AMERICAN PEOPLE

நாடக ஆர்வலர்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

ACTIVE THEATRE MOVEMENT

மீனவர் பிரச்சினைகள்

# கடற்றொழில் சங்கங்களூடாகவே கையாளப்படல் வேண்டும்

**அமைச்சர் ராஜித தெரிவிப்பு**



யாழ்ப்பாணம், ஓக. 31
கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகவே மீனவர்களது பிரச்சினைகள் இனிவரும் காலங்களில் கையாளப்பட வேண்டும் என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடற்றொழில் கிராமிய அமைப்பின் ஊடாகவே இதுவரை மீனவர்களது பிரச்சினைகள் கையாளப்பட்டு வந்தன. எனினும் தற்போது கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அந்த உரிமை வழங்கப்பட்டுள்ளது.
அந்தந்தக் கிராமங்களைச் சேர்ந்த கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக மீனவர்கள் தமது பிரச்சினைகளை முன் வைப்பதன் ஊடாக அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். (வ-14)

# மாநகர சபை டிராக்டர்களில் களவாக மண் ஏற்றிய கும்பல்

**அரியாலையில் நேற்று அதிகாலை சிக்கியது**

யாழ்ப்பாணம், ஓக. 31
அரியாலை கிழக்குப் பகுதியில் சட்டவிரோமாக மண் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான டிராக்டர்களை நேற்றுப் பொதுமக்கள் மடக்கிப்பிடித்துள்ளனர்.
யாழ்.மாநகர சபை உறுப்பினரான எஸ்.விஜயகாந்த் தலைமையிலான குழுவினரே இந்தச் சட்டவிரோத செயலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
திட்டியாக உள்ள மண்ணை திருநகர் வாசிகசாலையில் விளையாட்டு மைதானத்துக்குக் கொண்டுசென்று பறிக்கப்போவதாக யாழ்.மாநகர ஆணையாளரிடம் கூறி எடுத்துச் சென்ற டிராக்டர்கள் மூலமாகவே இந்தச் சட்டவிரோத மண் ஏற்றும் நடவடிக்கை நடைபெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
அரியாலை கிழக்கு நாவலடியை அண்டிய பகுதியில் டிராக்டர் சில அதிகாலை மணல் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. அந்த டிராக்டர்களில் மூன்று காற்றுப்போன நிலையில் நின்றுவிட்டன.
அதையடுத்தே டிராக்டர்கள் அப்பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டன.
இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிடப்பட்டது. இதேவேளை இப்பகுதியில் மணல் ஏற்றுவதற்கு ஏற்கனவே தடைவிதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ஒ-14-7-400)

# 2 கிலோகிராம் கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 31
மன்னாரில் 2 கிலோகிராம் கஞ்சாவுடன் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னார் பனங்கட்டிக்கொட்டு பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகிறோம். சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

# பார்த்துப் போங்கோ....காலை வைத்தால் ஆபத்து....!




யாழ்.நகரில் முக்கிய சந்தியான வின்சர் சந்தி-கஸ்தூரியார் வீதியில்-ஆபத்து காத்திருக்கிறது. அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு போனால் சாக்கடைக்குள் விழுந்து எழும்ப வேண்டி வரும். கால்வாய் உடைந்து கழிவுநீர் தேங்கி நிற்பதால், நுளம்பு பெருகிக் காணப்படுகிறது. சகிக்க முடியாத துர்நாற்றம் வேறு. மழை காலமும் நெருங்கி வருகிறது. வெள்ளம் தேங்கி நின்றால்.... வீதியில் செல்வோர் பாடு அதோ கதிதான்....! (ஒ-21)

## இதுவரை நடைபெற்ற

# நடமாடும் சேவைகளில் 34, 705 பேர் பயன்

யாழ்ப்பாணம், ஓக. 31
மனித உரிமைகள் இல்லம், கபே அமைப்பு, ஆள்பதிவுத் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்திய நடமாடும் சேவையில் கடந்த 41 நாள்களில் 34 ஆயிரத்து 705 பேர் பயன் பெற்றுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் கபே அமைப்பு மேலும் தெரிவித்ததாவது:
வடமாகாண பிரதேச மற்றும் மாவட்டச் செயலகங்களின் கோரிக்கைக்கு அமைய இந்த நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 12 ஆயிரம் பேருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. பின்னர் அது விரிவுபடுத்தப்பட்டது.
இதுவரை தேசிய அடையாள அட்டைக்காக 20 ஆயிரத்து 341 பேரும், பிறப்புச் சான்றிதழுக்கு 14 ஆயிரம் பேரும், திருமணப் பதிவுக்கு 300 இற்கும் மேற்பட்டோரும் விண்ணப்பித்துள்ளனர்.
தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 9 ஆயிரம் பேருக்கு அடையாள அட்டை பெற்றுக் கொடுக்க ஆள் பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இவற்றுக்கு விண்ணப்பித்தவர்கள் 11 தொடக்கம் 16 நாள்களுக்குள் அவற்றைப் பெற முடியும்.
வடக்கில் 85 ஆயிரம் பேர்களிடம் தேசிய அடையாள அட்டை இல்லாதுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறும் மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கக் கூடியதாக அவர்கள் ஏதாவது ஓர் அடையாள அட்டையைப் பெற்றிருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு வாக்களிக்க அனுமதி கிடைக்காது. அவ்வாறானவர்கள் கிராம சேவகர் ஊடாக தற்காலிக அடையாள அட்டை பெற முடியும் என்று மேலும் அவ்வமைப்புத் தெரிவித்தது. (வ-4)

# மாவட்ட செயலக உள்ளக வீதிகளுக்கு “காப்பெற்”

யாழ்ப்பாணம்.ஓக. 31
யாழ்.குடாநாட்டில் எத்தனையோ வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ள நிலையில், யாழ்.மாவட்ட செயலகத்தின் உள்ளக வீதிகள் காப்பெற் போடப்பட்டு புனரமைப்புச் செய்யப்படுகின்றன.
யாழ்.குடாநாட்டில் போர் முடிவடைந்த பின்னர் பிரதான வீதிகள் அகலிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. உள்ளூர் வீதிகள் சிலவும் உள்ளூராட்சி சபைகளால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.
இருப்பினும் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் பெரும்பாலான வீதிகள் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படாமலேயே உள்ளன.
இது தொடர்பில் மக்கள் பலமுறை மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குத் தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறானதொரு நிலையில் யாழ். மாவட்ட செயலகத்தின் உள்ளக வீதிகள் நேற்றையதினம் காப்பெற் போடப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. (வ-5)

# மானிய உரத்துக்கு வரி அறவீடு

தென்மராட்சி, ஓக. 31
காலபோகம் மேற்கொள்ளும் வயல்களுக்கு மானிய உர வகைகள் பெறுவதற்கு வரி அறவிடப்படளது.
நெற்செய்கை மேற்கொள்ளப் படும் வயல்களுக்கு பரப்புக்கு ஒரு ரூபா 50 சதம் வீதம் வரி செலுத்துமாறும் வரி செலுத்தாதவர்களுக்கு மானிய உர வகைகள் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற் செய்கையாளர்கள் தாம் செய்கை மேற்கொள்ளவுள்ள வயல்களின் உறுதிகளை செப்ரெம்பர் 8 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் சமர்ப்பித்து உரிய வரியைச் செலுத்துமாறும் .
உறுதி இல்லாதவர்கள் உரிமையாளர்களிடம் பெற்றகுத் தகைப் பத்திரத்தை கமக்கார அமைப்பின் பரிந்துரையுடன் எடுத்துச்சென்று வரியைச் செலுத்துமாறும் அமைப்பின் செயலர் கா.வேதநாயகம் அறிவித்துள்ளார். (வ-9)

# பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் மீறிய 7 பேருக்கு அபராதம்



தென்மராட்சி, ஓக. 31
பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட தென்மராட்சி பிரதேச வர்த்தகர்கள் 7 பேருக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
யாழ்.செயலக பாவனையாளர் அதிகார சபையினர் பிரதேசத்தின் பல இடங்களில் நடத்திய திடீர் பரிசோதனைகளின் போது திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை, அதிகரித்த விலைக்கு பொருள்களை விற்றமை, விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை போன்ற பாவனையாளர் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட 7 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.
வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
இதேவேளை அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் மற்றும் பியர் விற்பனைக்கு வைத்திருந்த நான்கு நபர்களுக்கு நேற்று தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

**”அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் மற்றும் பியர் விற்பனைக்கு வைத்திருந்த நான்கு நபர்களுக்கு நேற்று தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.**

# உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வீட்டு உரிமையாளருக்கு அழைப்பு

பருத்தித்துறை நகரில் உயர் பாதுகாப்பு வலயமாக முன்னர் இருந்த பகுதிகளில் இருக்கும் வீடுகள் மற்றும் ஆதனங்கள் விரைவில் விடுவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.
குறித்த பகுதியில் இருக்கும் வீடுகள் மற்றும் ஆதனங்களின் உரிமையாளர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பருத்தித்துறை நகரப்பகுதி ஜே/401 பிரிவு கிராம சேவையாளர் சந்திக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார்.
குறித்த பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் தமக்கு மாற்றிடம் கிடைத்ததும் அந்தப் பகுதியில் இருந்து விரைவாக வெளியேறுவார்கள் என படைத்தரப்பு சார்பில் பருத்தித்துறை பிரதேச சபை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. (வ-8)

# நெடுந்தீவில் குளங்கள் புனரமைப்புக்கு இராட்சத இயந்திரங்கள்

நெடுந்தீவில் குளங்கள் புனரமைப்புக்கென இராட்சத இயந்திரங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.
நாயன்மார்குளம், குருவிலிக்குளம் ராமன் விளாப்பு வடகரைக்குளம், எருவிலிக்குளம் சிலுகரை, வெட்டுக்கழி ஆகிய குளங்கள் அணைகள் கட்டி ஆழப்படுத்தும் நடவடிக்கைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாணசபையின் நிதி ஒதுக்கீட்டில் குறித்த பணிகள் இடம்பெறவுள்ளன.
இதேவேளை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கென டிரக்டர்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளன. (வ-7)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி உ ரோமிளா விமலேந்திரன்

(யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி A/L 2013 - விஞ்ஞானம்)



கல்லூரி வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும கொண்ட செல்வி உரோமிளா விமலேந்திரன் நேற்று (30.08. 2013) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாரீசன்கூடல், மட்டிவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கணபதி கிருஸ்ணன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி கிருஸ்னன் கடந்த (29.08.2013) வியாழக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி- பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முருகன்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் கந்தையா, காலஞ்சென்ற அண்ணாமலை, செல்லையா, காலஞ்சென்ற சாம்பசிவம், நாகரத்தினம், செல்வபாக்கியம், பாலசந்திரன் (லண்டன்), ருக்குமணிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இரத்தினசிங்கம், நாகராசா, சடாசிவம், கண்ணுத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், அழகம்மா மற்றும் சிவபாக்கியம், தங்கம்மா, மனோகரதேவி, சறோ, இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயராணி, கனகாம்பிகை, கேதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவானந்தனின் அன்பு மாமனும் அனுஜன், யதுஷன், ஜிதுஷன், லதுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப. 11 மணிக்கு இடம்பெற்று பின்னர் தகனக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில். (8./11687) (23-16-14)

தகவல்:
அண்ணாமலை குடும்பத்தினர்.

## வடக்கு மாகாணத்தில் 83 இடங்கள் புராதன சின்னங்களாக பிரகடனம்

கொழும்பு.ஓக 31

வடக்கு மாகாணத்தில் 83 இடங்கள் புராதன சின்னங்களாக இலங்கை அரசினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கையில் மொத்தம் 170 புராதன சின்னங்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் தொல்பொருள் ஆய்வுக்குரிய இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 83 சின்னங்கள் வடக்கு மாகாணத்தில் உள்ள மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களில் அமைந்துள்ளன.

தாதுகோபங்கள், தூண்கள், செங்கற் சுவர்கள், அடிக்கற்கள், கல்வெட்டுகள், பட வீடுகள் உள்ளிட்டவை அமைந்துள்ள இடங்களே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் தொல்பொருள் சின்னங்களைக் கண்டறிய மேலும் பல இடங்களில் ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்று தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சேனாரத் திசநாயக்க தெரிவித்துள்ளார். (த)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் 0779086737
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.
Laptops,Desktop Computers Repair!
COMPUTER REPAIR
On the Spot Solution! On your Home! Call me! 0779086737 GUNAA BEST PC

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் பஸ்தியாம்பிள்ளை பிலிப்

(சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற மீன்பிடி பரிசோதகர்)

தோற்றம்
10
08
1931



மறைவு
01
08
2013

நாள்கள் மூன்றொன்று கடந்தாலும்
புன்னகை பூத்த உங்கள் முகமும்
மனிதர்களை நேசிக்கும் உங்கள் குணமும்
ஏழைகளின் பால் கொண்ட பரிவும்
வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இறைவனோடு ஒன்றித்து விட்ட
எங்கள் அன்பு டடியின் இனிய நினைவுளை
மனதில் சுமந்து வாழ்கின்றோம்.

இமைமூடும் நொடி தனிலும் விலகாது உம் உருவம்
உடலால் பிரிந்தாலும் நினைவாலும்
வாழ்வாலும் எம்மினிலே வாழ்கின்றீர்.

எங்கள் டடியின் மறைவுச் செய்தியை அறிந்து
நேரில் வந்து ஆறுதல் தந்தவர்களுக்கும் தொலைபேசி
ஊடாக ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும்
மற்றும் அருட்தந்தையர்கட்கும்,
அருட்சகோதரிகட்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்

ஆறாத்துயரில்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

பாஷையூர்

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா சபாநாயகம்



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சபாநாயகம் கடந்த 29.08.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை சபாநாயகத்தின் அன்பு மனைவியும் புஷ்பராணி, பிரேமராணி, குணரட்ணம் (பிரான்ஸ்), ராசரத்தினம் (பிரான்ஸ்), தவரத்தினம் (சுவிஸ்), பாலராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் கணேசானந்தன், இமானுவேல் ஜெயராசா, கோமதி (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்), வசந்தா (சுவிஸ்), ஜெகன் மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் உதயகுமார்- ஹம்ஷா, தினேஷ்- ஷாலினி, சோபனா- மதிவதனன், தனுஷா, தீபன், நிருஷன், நிமல், தீபிகா, அஜித், தாருஷன், குருஷரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ருத்ரேஷ், ஈதன் ஆகியோரின் அன்புமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''ராசா சபா''
சூராவத்தை, சுன்னாகம்.
021 205 9422

(39359)
(23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.

## தசாகக்கிருஹயக்ஞ அழைப்பு

விஜய வருஷம் ஆவணி மாதம் (23.08.2013) வெள்ளிக்கிழமை திருதியை திதியில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்
மஹாராஜஸ்ரீ ஷண்முகநாதக்குருக்கள்
நகுலேஸ்வரி அம்பாள்



அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள்
பின்வரும் தினங்களில் நடைபெறும்.

01.09.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணிக்கு தசாகம்
02.09.2013 திங்கட்கிழமை ஏகோதிட்டம் மாசியம்
03.09.2013 செவ்வாய்க்கிழமை சபிண்டீகரணம்
04.09.2013 புதன்கிழமை கிருகயக்ஞம்

மேற்படி தினங்களில் வருகைதந்து அன்னாரின்
ஆத்ம சாந்திக்கான
பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன்
வேண்டுகின்றோம்.

பிள்ளைகள்,மருமக்கள்
சகோதரர்கள், மைத்துனர்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாவையாதீனம்,
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்,
தெல்லிப்பழை.
தொ.பே.: 021 321 0349, 077 830 2573 (சி/11676)(5.6)

# மரண அறிவித்தல்

## கந்தையா விஜயகுமார்



பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால், வன்னியசிங்கம் வீதியை தற்போதைய முகவரியாகவும் தற்போது லண்டன் WEMBLYயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா விஜயகுமார் கடந்த 25.08.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா-தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் வேலாயுதர்- கண்மணி (கைதடி) தம்பதியரின் மருமகனும் சுதர்சினியின் அன்புக் கணவரும் விகாஷ், வரணியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணராசா (லண்டன்), இரவீந்திரன் (கனடா), புஸ்பராசா (குழந்தை- பிரான்ஸ்), செல்வகுமார் (லண்டன்), மதி, மதிசுதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயராணி, வனிதா, கோமதி, ஆஷா, தசீலன், தயாழினி, விஜயரூபன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் பொன்னம்பலம், கௌசியா ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் தாரகி, தனுஜா, இந்துஜா, நிதுஜா ஆகியோரின் சித்தப்பாவும் ஆகாஷ், லதுஷன், அபிலாஷ், நிஷான் ஆகியோரின் பெரியப்பாவும் சந்தோஷ், விஷாகா, லைஷாணி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரி பூதவுடல் லண்டன் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 12.30 மணியளவில் ஈமச்சாலையில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சு.கந்தையா (பலாலி),
வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

(39358)
(23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.
கந்தையா- 0771196752
குணராசா 00447976409760




வடமாகாண சபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் கிளிநொச்சி செல்வாநகர் பகுதியில் கடந்த புதன்கிழமை

# மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு வெற்றி நிச்சயம்

## கிளிநொச்சியில் யோகேஸ்வரன் எம்.பி.



வட மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டுவதன் மூலம் நாம் பெரிதாக எதனையும் சாதிக்கப் போவதில்லை. ஆனாலும் ஆட்சியை நாம் கைப்பற்ற வேண்டும். இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மாத்திரம் தான் தமிழர்கள் முதல மைச்சர்களாக வர முடியும்.

அதில் ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் எமது தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்து விட்டோம். வடக்கில் அந்த நிலை ஏற்படாது.

வட மாகாண சபைக்கான தேர்தல் பரப்புரைக் கூட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரால், கிளிநொச்சி செல்வாநகர் கிராமத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய யோகேஸ்வரன் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்கள் தனி மாகாணத்தில் ஆட்சி புரியப் போகும் முதலாவது சந்தர்ப்பம் இது தான்.

இதனை மக்களாகிய நீங்கள் ஏற்படுத்த வேண்டும். சர்வ தேசம் இத்தேர்தலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது.

நடந்து முடிந்துபோன போரில் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டுபோயினர், அங்கவீனமாக்கப்பட்டனர், விதவைகளாக்கப்பட்டுள்ளனர், காணாமற் போயுள்ளனர், சிறைகளில் வாடுகின்றனர். இவை எல்லாவற்றுக்கும் காரணமான அரசுக்கு, வேட்பாளர்களாகிய நீங்கள் பதிலடி கொடுக்க வேண்டும்.

எதிர்வரும் 21 திகதிக்கு முன்னர் பல வசந்தங்கள் உங்களைத் தேடி வரும். பல நியமனங்கள் சுயலாபம் கருதி வழங்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும் வீடு உங்கள் சொத்து. நாம் சொந்த வீட்டில் வாழ வேண்டுமாயின் அந்த வீடு இருக்கும் நிலத்தை நாம் எம் வசமாக்கிக் கொள்ள வேண்டும்.

மாகாண சபையை வெல்வதன் மூலம் அதனை நாம் சாத்தியமாக்கிக்கொள்ள முடியும். எனவே வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நாம் வெல்வது உறுதி. அதில் எந்த மாற்றமும் இல்லை - என்றார்.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் ப. அரியரட்ணம், த. குருகுலராஜா, சு.பசுபதிப்பிள்ளை, கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் நா.வை. குகராசா, உப தவிசாளர் வ.நகுலேஸ்வரன், கரைச்சிப் பிரதேச சபை உறுப் பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஜ-18)









# கிராம சபைக்கான அதிகாரங்களைக் கூட தமிழர்களுக்கு தர அரசு விரும்பவில்லை

## கூட்டமைப்பு வேட்பாளர் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

நேர்காணல் : ஔரீஷ்

இலங்கை அரசு ஒரு கிராம சபைக்குரிய அதிகாரங்களைக் கூட தமிழர்களுக்கு தர விரும்பவில்லை என்பதை நிரூபிக்க வடமாகாண சபை உதவும் என்று நம்புகிறேன். வெளிநாடுகளில் சிறிய உள்ளூராட்சி அமைப்புகள் கூட தனியாக பொலிஸை வைத்திருக்கும் அதிகாரம் இருக்கையில் இங்கு மாகாண சபையில் இருந்து காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது பேரினவாதத்தின் அடக்கு முறையையே வெளிப்படுத்துகிறது என்று கர்ஜிக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் எம்.கே. சிவாஜிலிங்கம். அவருடனான நேர்காணல் வருமாறு:

கே: மாகாண சபை எந்தவித அதிகாரங்களும் அற்ற அமைப்பு என்றும் அது தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு போதும் தீர்வாக மாட்டாது என்ற கருத்தை வலியுறுத்தி வந்த நீங்கள் எப்படி மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் முடிவை எடுத்தீர்கள்?

ப: இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் காலம் காலமாக தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். இனப் பிரச்சினைக்குத் தீர்வாக கைச்சாத்திடப்பட்ட பண்டா - செல்வா, டட்லி - செல்வா போன்ற ஒப்பந்தங்கள் பேரினவாதத்தால் கிழித்தெறியப்பட்டன. அதன் பின்னர் 83 கலவரம் தமிழர்களின் இருப்பையே இலங்கையில் கேள்விக்குறியாக்கியது. இந்த நிலையில் தான் ஆயிரமாயிரம் இளைஞர்களும் யுவதிகளும் ஆயுதப்போரில் குதித்தார்கள். இந்தக் கட்டத்தில் தமிழ்ப் போராளி குழுக்களுக்கு இந்தியா ஆயுதம் மற்றும் பயிற்சி என்பவற்றை வழங்கியது. பின்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவானது. ஆயினும் இந்த ஒப்பந் தத்தில் இலங்கை அரசு பல மோசடிகளை செய்ததால் இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்பட முடியாமல் போனது. இப்போது வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிட்டு தனித்தனியாக நிர்வகிக்க முயல் கிறது அரசு. இந்தநிலையில் தமிழர்களுக்கு எந்த வித தீர்வையும் தர இலங்கை அரசு தயாராக இல்லை.

தமிழர்கள் தீர்வு முயற்சிக்கு ஒத்துழைப்ப தில்லை என்ற பேரினத்தின் குற்றச்சாட்டை பொய்யாக்க வேண்டிய கட்டாயம் எமக்குண்டு. எந்தவித அதிகாரங்களுமற்ற அலகே மாகாண சபை என்பதை நிரூபிப்பதற்கு நாங்கள் இதில் போட்டியிடுகிறோம். அதன் பின்னர் மாகாண சபையின் அதிகாரம் அற்ற தன்மையை வெளிப்படுத்த நிரந் தர தீர்வுக்காக ஜனநாயக ரீதியில் போராடுவோம். நாங்கள் வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடாவிட்டால், அரசின் கைப்பொம்மைகள் அற்பசொற்ப வாக்குகளோடு மாகாண சபையை அலங்கரித்து விடும் அபாயமும் உண்டு. அப்படி கைப்பொம்மைகள் மாகாண சபையை கைப்பற்றினால் அவர்கள் "இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டது" என்று அரசுக்குச் சார்பான பிரசாரத்துக்காகவே பயன்படுத்தப்படுவார்கள். எனவே இதைத் தடுக்கவும் நாங்கள் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மற்றும்படி இனப்பிரச்சினைக்கான ஒரு சர்வரோக நிவாரணியாக மாகாண சபையை கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டு களம் இறங்கவில்லை.

கே: வடமாகாண சபைத் தேர்தல் பற்றிய கதைகள் எழத் தொடங்கிய பின்னர் தான் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபையில் இருந்து பிடுங்க வேண்டும் என்ற கருத்து இலங்கையில் வலுப்பெற்றுள்ளதே?

ப: மாகாண சபையில் எஞ்சியிருப்பதே அந்த இரு அதிகாரங்களும் தான். தமிழர்கள் இருப்புக்கு தாயக பூமி தேவை. ஆனால் இன்னமும் அரசு இராணுவம் மூலம் தமிழர் நிலங்களை அபகரித்தே வருகிறது. அத்தோடு வெளிநாடுகள் பலவற்றின் மாகாண அரசுகள் பொலிஸை தனியாகவே தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. அவ்வளவு ஏன் பிரிட்டனில் உள்ளூராட்சி அமைப்பான நகர சபை கூட தனியாக பொலிஸ் வைத்திருக் கும் அதிகாரம் இருக்கிறது. ஆனால் இங்கு தமிழினம் ஒரு மாகாண சபையின் தனக்கென பொலிஸை வைத்திருக்க தடை போடுகிறது அரசு. ஆனால் எமக்கு நிச்சயம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவை. அதில் எந்த மாற்றமும் இல்லை. ஒரு வேளை தேர்தலின் பின்னர் மாகாண சபை யின் காணி, பொலிஸ் அதிகாரங்களை பிடுங்கி னால் அரசுக்கு எதிராகவும் அதிகாரங்களைப் பெறவும் ஜனநாயக ரீதியில் தொடர்ந்து போராடுவோம்.



கே: தேர்தல் பிரசாரங்களின் போது இராணுவத் தலையீடு இருப்பதாகவும் அரசு மோசடித்தனமான தேர்தலை நடத்த உள்ளதாகவும் குற்றம் சாட்டப்படுகிறதே. இத்தகைய நிலையில் கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பு எப்படி?

ப: அண்மையில் அரச அமைச்சர் ஒருவர் கூட்டமைப்பு வடமாகாணத்தில் உள்ள 14 தொகுதிகளில் 5 இல் மாத்தி ரமே வெற்றி பெறும் என்று கூறியிருந்தார். ஆனால் 14 தொகுதிகளிலும் எல்லா மோசடிகளையும் மீறி கூட்டமைப்பு மகத்தான வெற்றி பெற்று மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெறத்தான் போகிறது. கடந்த காலங்களைப் போல வாக்களிப்பில் அக்கறை இன்றி இருக்காமல் மக்கள் திரண்டு வந்து வாக்களிப்பதன் மூலம் கூட்டமைப்பின் வெற்றியை உறுதி செய்ய முடியும்.

கே: தற்போது கூட்டமைப்பின் வசம் உள்ள உள்ளூராட்சி அமைப்புகள் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்படுவது போன்று மாகாண சபையில் புறக்கணிக்கப்பட்டால் ...?

ப: ஆளுநர் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி மாகாண சபை அபிவிருத்தியை தடுக்க முனைந்தால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை யைக் கொண்டு வருவதோடு அவரது உத்தியோகபூர்வ இருப்பிடத்தை முற்றுகை யிட்டு அகிம்சைப் போர் நடத்தியாவது எமது மாகாணத்துக்கான அபிவிருத்திகளை மேற் கொண்டே தீருவோம். போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், முன்னாள் போராளிகள் ஆகியோரின் வாழ்வை புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பையும் பெற்று மேம்படுத்துவோம். அதன் பின்னர் இனப்பிரச் சினைக்கான நிரந்தர தீர்வு பற்றிய நடவடிக்கைகளை காத்திரமாக முன்னெடுப்போம்.























நல்லூரில் திருவிழா வேளையில்

# வாகனங்கள் ஓடித்திரிவதால் ஆலய வீதியில் மக்கள் சிரமம்

வலி.வடக்கு. ஓக. 31

நல்லூர் ஆலய சுற்றாடலில் பாதுகாப்பு ஒழுங்கு நடவடிக்கைகளுக்காக நூற்றுக் கணக்கில் பொலிஸார் மற்றும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள், சாரணர்கள், யாழ். மாநகர சபை ஊழியர்கள் கடமையாற்றுகின்ற போதிலும் கூட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் ஆலய உற்சவ நேரத்தில் வீதிகளில் ஓடித் திரிவதை கட்டுப் படுத்தாது வேடிக்கை பார்த்து நிற்கின்றனர் என ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆலயச் சுற்றாடலில் அடியவர்களுக்கு வழிபாட்டுக்கோ, அன்றி பூசை நேரத்திலோ, சுவாமி வெளிவீதி வரும் நேரத்திலோ எந்த வகையான இடையூறும் ஏற்படக்கூடாது என்ற பாதுகாப்பு அடிப்படையிலேயே பொலிஸாரும் ஏனையவர்களும் கடமையாற்றுகின்றனர்.

ஆனால் இவை எதனையும் கருத்தில் கொள்ளாது குறிப்பிட்ட நேரங்களிலும் கூட வெளிவீதியில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களில் ஒரு சிலர் நடமாடுகின்றனர்.

ஆலயத்துக்கு வரும் சிறுபிள்ளைகள் சுதந்திரமாக உலாவுகின்றனர்.

இத்தகைய நிலையில் மோட்டார்சைக்கிள், சைக்கிள் கள் என ஆலய வீதிகளில் பயணிக்கும் வாகனங்களுடன் இச் சிறுபிள்ளைகள் மோதுண்டு விபத்துக் குள்ளாகும் நிலையும் ஏற்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டும் யாழ்ப் பாணம் மாநகர சபையால் வழங் கப்பட்டுள்ள குறித்த நேரத்தில் மட்டும் பயணிப்பதற்கான அனுமதி அட்டைக்கு மதிப்பளித்து குறிப்பிட்ட நேரம் தவிர்ந்த வேளைகளில் ஆலய வீதிகளில் வாகனங் கள் பயணிப்பதை தடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-86)

## உபதபாலதிபருக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.31

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள உபதபாலதிபர் களுக்கான தடைதாண்டல் பரீட்சையை முன்னிட்டு வடமாகாண உபதபாலதிபர் களுக்கான விசேட பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்ப்பாணம் பட்டப்பின் படிப்புகள் கல்லூரியில் நடைபெறும் என்று உபதபாலதிபர்கள் சங்கச் செயலாளர் என்.ரி.நந்தகுமார் அறிவித்துள்ளார். (வ-5)

## முதியோர் வார நிகழ்வுகள் கைதடி முதியோர் இல்லத்தில்

கைதடி அரச முதியோர் இல்லத்தில் வழமை போல் நாளை முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதிவரை முதியோர் வார நிகழ்வுகள் நடைபெறும் என கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் அறியத் தந்துள்ளார்.

உளமேம்பாட்டுடன் சுமையில்லாத முதுமை என்பது இவ்வருடத்துக்கான முதியோர் வாரத்தின் தொனிப்பொருள். முதியோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் இன்றைய சூழலில் முதுமையை இயல்பான சூழலில் எதிர்கொள்வதற்கு அவர்களைத் தயார்படுத்தும் நோக்கில் பல்வேறு கலை நிகழ்வுகளும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. (வ-51)

## பொலிஸாரிடம் இலகுவாக தொடர்புகொள்ள விசேட இலக்கம்




அச்சுவேலி, ஓக.31

பொலிஸ் நிலையத்துடன் தொலை பேசி மூலம் தொடர்பு கொள்வதில் தடங்கல் ஏற்படும் இடத்து '119' என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தெரிவியுங்கள். பொலிஸார் குறித்த நேரத்துக்குள்ளே அந்த இடத்துக்கு வருவர்.

குறித்த இலக்கத்துக்கு தகவல் தெரிவிக்கப்படும்போது பொலிஸார் விரைந்து செயற்படுவதோடு அது தொடர்பான செயற்பாட்டு அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டி இருப்பதால் விரைவான செயற்பாட்டுக்கு இடமுண்டு என்று வலி.கிழக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் கூட்டத்தில் பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு பொலிஸாரால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிப்பதில் உள்ள தடங்கல்கள், தகவல் தெரிவித்தாலும் பொலிஸார் அந்த இடத்தில் வருவதில் தடங்கல், பொலிஸாரின் பக்கச் சார்பான நடவடிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் பிரதிநிதிகளால் ஆதாரங்களுடன் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

பொதுமக்கள் கருத்துக்களைச் செவிமடுத்த பொலிஸ் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்ட ஆலோசனையில் 119 இலக்கத்துக்கு அறிவிப்பதில் உள்ள வசதி வாய்ப்பு தொடர்பாக விளக்கம் தெரிவிக்கப்பட்டதோடு.

வாகன விபத்துக்கள் நடைபெறும் இடங்களில் காயப்பட்டவர்களின் உயிரைக் காப்பதற்கு விரைந்து செயற்படுமாறும் பொலிஸ் அந்த இடத்துக்கு வரும் வரை காத்திருக்க வேண்டாம் என்றும் பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டது.

பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு கலந்துரையாடலில் அச்சுவேலி மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு பொதுமக்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தனர். (வ-11)

# நல்லூரில் திரளும் தென்னிலங்கையர்

யாழ்ப்பாணம், ஓக.31

நல்லூர் கந்தசுவாமிகோயில் உற்சவத்தில் தென் பகுதியைச் சேர்ந்தவர்கள் தினமும் பெரும் எண்ணிக்கையில் கலந்துகொள்கின்றார்கள்.

பகல் திருவிழாவிலும் இரவு நேரத்திலும் தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் ஆலயத்தில் கூடுகின்றார்கள்.

சுவாமி வீதிவலம் முடிந்த பின் பலர் ஆலயச் சுற்றாடலில் நிகழும் இசை நிகழ்வுகளையும் ஆர்வத்துடன் பார்த்து ரசிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

தற்போது பாடசாலை விடுமுறைகாலம் என்பதால் நயினாதீவுக்கு வருகை தரும் தென்பகுதி மாணவர்களும் நல்லூரைத் தரிசித்துத் திரும்புகின்றனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் நல்லூரில் கூடுவதை அவதானிக்க முடிகிறது. (ஒ-7)





நேற்றைய பத்தொன்பதாம் திருவிழாவின்போது நல்லைக் கந்தன் வள்ளி-தெய்வானை சமேதரராக வெளிவீதியுலா வந்து காட்சிதந்த வேளை....

## விடிவொன்று தமிழருக்குத் தா!

ஐங்கரனார் தம்பியரே! அழகு மிளிர் நல்லூரா!
திங்களணி வேணியனார் திருக்குமரா!-சங்கமதில்
முடிமன்ன ரால் வளர்ந்த முத்தமிழின் காவலனே!
விடிவொன்று தமிழருக்குத் தா!

ஆறுபடை வீடுகந்தாய்! அயில்வேற் கரங்கொண்டாய்!
மாறுபடு சூரர்தமை வதைத்திட்டாய்!-ஏறுமயில்
வாகனனே! வளமார்நல் லூரானே! வண்டமிழர்
சோகமது நீக்கியருள் செய்!

நா.நல்லதம்பி
மட்டுவில் வடக்கு

## அழகுறு நல்லை உறைவோனே

அணி கிளர் மாடம் அணி செய்யும்
அழகுறு நல்லை உறைவோனே
மணி கிளர் நாதம் ஒலிசெய்ய மக்கள்
மனங்களில் நாளும் வருவோனே
தனிநெடு வேலோய் எழில் வீரா
மயிலினில் ஏறும் மால் மருகோனே
கனி இளம் வள்ளி துணையோடு
மணல் வீதி வலம் வரு பெருமாளே....

வேலணையூர்-தாஸ்

## அருள் பொழிய மயில் மீது ஓடி வா

சரவணப் பொய்கையிலே ஷண்முகனாய் மலர்ந்தவா!
பழத்திற்காய் மலையமர்ந்து தண்டாயுதம் ஏந்தியவா!
தந்தைக்கே குருவாகி பிரணவப்பொருள் உணர்த்தியவா!
மும்மலமறுக்க அன்னையிடம் ஞானவேல் பெற்றவா!
தேவர் துயர் துடைத்திடவே சூரனை சங்கரித்தவா!
குஞ்சரியை மணம் புரிந்து குன்றத்திலே அமர்ந்தவா!
குறவள்ளி தனைச் சேர வேங்கைமரமாக நின்றவா!
குன்று தோறாடி வந்து உள்ளமெல்லாம் நிறைந்தவா!
கார்த்திகைப் பெண்களின் அன்பினில் திளைத்தவா!
தமிழ் அன்னை ஔவைக்கு நாவற்பழம் அளித்தவா!
அலங்காரக் கந்தனாகி நல்லைநகர் காப்பவா!
உன் அன்பர்க்கு அருள்புரிய மயில்மீது ஓடி வா!

ஜெகலோஜினி. இணுவை

## பாராயோ நல்லூர் அரசே

அலங்காரக் கந்தனே அழகிய வேலவா
தங்கமயில் வாகனனே கார்த்திகை பாலா
நல்லை அமர்ந்த முருகேசா தமிழ் குலம் காக்கவருவாய்
சரவணபவனே நாடும் அடியார் குறைதீர்ப்பவனே
சிவசக்தி பாலகனே கலியுகவரதா
நம்மவர் படும் துயர் பாராயோ நல்லூர் அரசே

வட்டூர் ராயூ



உதயன்
31/08/2013

## வெற்றிகரமாக செலுத்தப்பட்டது ஜிசாட் 7 செயற்கைக்கோள்

புதுடில்லி, ஓக.31
இந்திய கப்பற்படைக்காக பிரத்தியேகமாக தயாரிக்கபபட்ட ஜிசாட்-7 செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
இந்திய விண்வெளி ஆய்வுக் கழகம்(இஸ்ரோ) தயாரித்துள்ள இந்த செயற்கைக்கோள், தென் அமெரிக்காவின் பிரெஞ்ச் கயானா பகுதியில் அமைந்துள்ள கௌரூ விண்வெளித் தளத்தில் இருந்து வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் ஏரியான்-5 ரொக்கெட் மூலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
ரூ.185 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ள ஜிசாட்-7 செயற்கைக்கோள், 2625 கிலோ எடை கொண்டது. இந்திய கப்பற்படைக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோள், இந்திய நிலப் பகுதி தவிர, அதைச் சுற்றி அமைந்துள்ள கடல்பகுதியின் நடமாட்டத்தை எளிதில் கண்காணிக்க உதவும். கடல்பகுதியில் இருந்து தகவல் பரிமாற்றத்துக்கும், உளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் செயற்கைக்கோள் உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# கச்சதீவை மீளப்பெற முடியாது

## நீதிமன்றில் இந்திய மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஓக.31
இலங்கையிடம் இருந்து கச்சதீவை திரும்பப் பெற முடியாது. அங்கு மீன் பிடிப்பதற்கு தமிழக மீனவர்களுக்கு உரிமை இல்லை என்று இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.
இலங்கையிடம் இருந்து கச்சதீவை திரும்பப் பெற வேண்டும் என்று கோரி தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.
அந்த வழக்குத் தொடர்பான விசாரணைகளின் போதே இந்திய மத்திய அரசு இவ்வாறு தெரிவித்துள்ளது.
இந்த வழக்கு விசாரணைகள் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது கச்சதீவு விவகாரம் குறித்த ஆவணாங்களை எதிர்வரும் 3 வாரத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.
இந்நிலையில், இலங்கையிடம் இருந்து கச்சதீவை திரும்பப் பெற முடியாது என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு பதிலளித்துள்ளது.
"1974ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது. கச்சதீவுஇலங்கை எல்லைக்கு உட்பட்டது என்பதால் திரும்பப் பெற முடியாது. கச்சதீவில் தமிழக மீனவர்கள் பிடிக்க உரிமை இல்லை. எனவே தமிழக அரசின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்" என்று நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளதுள்ளது இந்திய மத்திய அரசு. (ற)



## திரைப்படமாகவுள்ள பிரபாகரன் வாழ்க்கை

சென்னை, ஓக.31
விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரலாறு தமிழில் திரைப்படமாக எடுக்கப்படவிருக்கின்றது. இந்தப் படத்தை 'மகிழ்ச்சி' திரைப்படத்தை இயக்கிய கௌதமன் இயக்குகிறார்.
இது குறித்து இயக்குநர் கௌதமன் கூறுகையில்,
"ராஜாராஜ சோழனுக்கு பிறகு தமிழனின் வீரத்தையும், மானத்தையும் தலைநிமிர செய்த பெருமை பிரபாகரனையே சேரும். பிரபாகரனின் வாழ்க்கையை நெடுமாறன் எழுதிய ஆவண புத்தகத்தை அடிப்படையாக வைத்து திரைப்படமாக எடுக்க உள்ளேன்.
பிரபாகரனின் தியாகம், இலங்கையில் மூன்றரை லட்சம் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டமை, முள்ளிவாய்க்கால் கடல் பகுதியில் படைகள் சுற்றி வளைத்ததும், பிரபாகரன் என்ன முடிவு எடுத்தார் என்பன போன்ற விவரங்கள் படத்தில் இருக்கும். பிரபாகரன் கேரக்டரில் தமிழர் ஒருவரே நடிப்பார். பிரேவ் ஹார்ட், உமர்முக்தார் போன்ற ஹொலிவுட் படங்களுக்குஇணையாக இப்படம் உருவாகும்" என்றார். (ற)

## 13 மொழிகளில் ருவிட்டர் பதிவுகள் வலைத்தளத்தில் கலக்கும் மோடி

புதுடில்லி, ஓக.31
குஜராத் முதல்வர் நரேந்திர மோடி பிரதமர் வேட்பாளராக கட்சியினர் மத்தியில் பேசப்பட்டாலும் பேசப்பட்டார், அவருடைய கருத்துகளை நாடு முழுவதுக்கும் கொண்டு செல்லும் முயற்சியில் அவருடைய ஆதரவாளர்கள் ஈடுபடத் தொடங்கி விட்டனர்.
இப்போது மோடிக்கு மொழி ஒரு தடையில்லை எனும் அளவுக்கு அவருடைய ருவிட்டர் செய்திகள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகின்றன.
தற்போது மோடியின் ருவிட்டர் தகவல்கள் 13 மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகின்றன. நேற்றுவரை 2,206,260 பேர் மோடியை ருவிட்டரில் தொடர்பவர்களாக உள்ளனர். இதனுடன் நின்றுவிடாமல், அவருடைய சமூக வலைத்தள ஆதரவாளர்கள், குஜராத் உட்பட 50 மொழிகளில் இணையதளங்களில் கருத்துகளைச் சென்று சேர்க்க தயாராகி வருகின்றனராம். (ற)

# மரண அறிவித்தல்

## பாண்டியபிள்ளை சிவசங்கு

[நல்லூர் கோயில் கணக்குப்பிள்ளை]



கண்டியைப் பிறப்பிடமாகவும் 55, மருதடி வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட பாண்டியபிள்ளை சிவசங்கு 29.08.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவரான வாலாம்பிகை(தேவி)யின் அன்புக் கணவரும், சிவானந்தன் (லண்டன்), சித்திரகலா (பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சிமித்திராதேவி (யாழ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைச்செல்வி (லண்டன்), திருச்செல்வம் (பிரான்ஸ்), விமலராணி (பிரான்ஸ்), சுதாகரன் (வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷனா, கனுஷனா, விதுஷன், லக்ஷனா, சிமியோன், லக்சன், சிந்துஜா, சிபானுஜன், சாரண்யா, ஷர்மிளா, தனேந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 55, மருதடி வீதி, நல்லூர்.
(39330) (7.6.3)
தகவல்: குடும்பத்தினர்.

## பிரதமரைத் திருடன் என்று வேறெங்குதான் கூறுகிறார்கள்

### மன்மோகன் சிங் கவலை

புதுடில்லி, ஓக.31
ஒரு நாட்டின் பிரதமரை திருடன் என்று கூறுவது எந்த நாட்டிலாவது நடப்பதுண்டா? என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வேதனையுடன் கூறினார்.
இந்தியப் பணப் பெறுமதி தொடர்ந்து சரிவை அடைந்து வரும் நிலையில் இது தொடர்பாக பிரதமர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. அதனையடுத்து, பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்ற மேல்சபையில் நேற்று விளக்கம் அளித்தார்.
அப்போது அவர் கூறியதாவது:
"இந்திய பண மதிப்பு சரிவடைவதை மத்திய அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. பண மதிப்பின் வீழ்ச்சிக்கு பல்வேறு உள்நாட்டுக் காரணிகளும் காரணங்களாக உள்ளன. சர்வதேச பொருளாதார வீழ்ச்சியும்,ரூபாயின் மதிப்பு சரிவுக்கு மற்றொரு காரணமாக அமைந்துள்ளது. சிரியாவில் தற்போது நிலவி வரும் பதற்றம் உட்பட, எதிர்பாராத வகையில் வெளியில் இருந்து வரும் அழுத்தமும் ரூபாயின் மதிப்புச் சரிவுக்கு காரணமாகி விடுகிறது. பெற்றோலியப் பொருள்களின் பயன்பாடும் பொருளாதாரத்தில் எதிரொலிக்கின்றன. இந்த நிலையில், இந்திய ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டியதும், தங்கத்தின் இறக்குமதியைக் குறைக்க வேண்டியதும் அவசியமாகிறது.
ஏற்றுமதியை உயர்த்தும் வகையில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. முதலீடுகளை அதிகரிக்கும் வகையில், முதலீட்டாளர்களுக்கு ஏற்ற எளிதான கொள்கைகளை மத்திய அரசு உருவாக்கி வருகிறது" என்று தெரிவித்தார்.
அத்துடன் "இது குறித்துக் கேள்விகேட்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒழுங்கை மீறிய வகையில் நாடாளுமன்றத்தின் மையப் பகுதியை நோக்கி பாய்கின்றனர். பிரதமரை திருடன் என்று கூறுகின்றனர். இவ்வாறு வேறு எந்த நாட்டிலாவது நடப்ப துண்டா?" என்று வேதனையுடன் குறிப்பிட்டார். (ற)

# கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்



## சண்முகம் தணிகாசலம் (J.P)

[ஓய்வுபெற்ற மேற்பார்வை உத்தியோகத்தர்]

எமது முன்பள்ளியை ஆரம்பித்து ஆலோசனை வழங்கி, ஆதரவு நல்கி வந்த பெருமனிதர் இறைவனடி சேர்ந்ததையிட்டு எம் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

சிறுவர் பூங்கா முன்பள்ளியும்
குழந்தைகள் காப்பகமும்
528, பலாலி வீதி, திருநெல்வேலி.

பணிப்பாளர்,
ஆசிரியர்கள், சிறார்கள்,
பெற்றோர்கள்
(39328) (7.6.3)

# கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் Dr.(Mrs) சியாமா துரைரட்ணம் அவர்களின் மாமன்

## வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்,
சுதேச மருத்துவ திணைக்களம், வ.மா.
யாழ்ப்பாணம்.
(39331)(10.6)

# மரண அறிவித்தல்

## மென்டெல்ஸ் மேர்வினா (கோமதி)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மென்டெல்ஸ் மேர்வினா (கோமதி) 29.08.2013 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் யேசுதாசன் - காலஞ்சென்ற யோசப்பின் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற யோண் மற்றும் மேரிபுஷ்பம் தம்பதியரின் அன்பு மருமகளும் யோண் மென்டெல்ஸின் அன்பு மனைவியும், ஸ்ரெபான், வினுஷா ஆகியோரின் அன்புத்தாயும், குமரன், பனிஸ்ரர், கனிஸ்ரர், யஸ்மின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், றொணிக்கேட்ஸ், ஸ்ரீன் பேக், முத்தழகி, டார்வின் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (31.08.2013) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனிதயாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34, புதிய பூங்காவீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
(39329)(3.8.4)
தகவல்: குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 21.05.1948
மறைவு 01.08.2013

அமரர்
## ஆனந்தன் செல்வநாதன்

(உரிமையாளர்,அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)

திதி: தசமி

01.08.2013 அன்று அமரத்துவம் அடைந்த ஆனந்தன் செல்வநாதன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகள் கடந்த 29.08.2013 வியாழக்கிழமை காலை கீரிமலையில் நடைபெற்றன.
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(31.08.2013) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இல.22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
021 300 1266
(39351(5.6)

# களமிறங்குகின்றது ரஷ்யா

## சிரியாவுக்கு ஆதரவாக போர்க்கப்பல்கள் நகர்கின்றன



மொஸ்கோ, ஒக.31
சிரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட்டால் அந்நாட்டு உதவும் நோக்குடன் ரஷ்யாவின் போர்க்கப்பல்கள் சிரியாவை அண்மித்த பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியா மீதான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைக்கு பிரிட்டன், பிரான்ஸ், இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஆதரவளித்துள்ளன. இந்தநிலையில் சிரியாவின் நட்பு நாடு என்ற ரீதியில் அந்நாட்டுக்கு இராணுவஉதவிகளைவழங்க ரஷ்யா தீர்மானித்துள்ளது.

அதையடுத்து ரஷ்யாவின் நீர்மூழ்கிப் கப்பல்களும், போர்க்கப்பல்களும் சிரியாவை அண்மித்த பகுதிகளுக்கு நகர்த்தப்பட்டு வருகின்றன. அத்துடன் சிரியாவில் உள்ள ரஷ்யப் பிரஜைகளை சிறப்பு விமானங்கள் மூலம் வெளியேற்றும் நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளது.

### வாக்குவாதம்

சிரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை தொடர்பாக பிரிட்டன் நாடாளுமன்றில் கடும் வாக்குவாதம் நடந்துள்ளது. சிரியாவில் இராணுவ தலையீட்டுக்கான அடிப்படைகளுக்கு நாடாளுமன்றத்தின் ஆதரவைக் கோரியதுடன், ஐநா பாதுகாப்புச் சபையில் தன்னால் தாக்கல் செய்யப்படும் தீர்மானமானது சிரியா விடயத்தில் ஒரு பக்கசார்பு நிலைப்பாட்டை எடுப்பதற்கோ அல்லது சிரியாவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி அங்கு ஆக்கிரமிப்பை மேற்கொள்வதற்காகவோ அல்ல என்று அந்நாட்டுப் பிரதமர் டேவிட் கமரூன் நாடாளுமன்றில் தெரிவித்தார்.



ஆனால், பிரிட்டனின் எதிர்க்கட்சியான தொழில்கட்சியின் தலைவர் எட் மிலிபாண்ட், "இராணுவ தலையீட்டை கொள்கை அடிப்படையில் நான் எதிர்க்கமாட்டேன். எந்த ஒரு முடிவுக்கும் முன்பாக ஆதாரம் முன்வைக்கப்பட வேண்டும். இரசாயன தாக்குதலுக்கு ஜனாதிபதி அசாத்தின் அரசே பொறுப்பு என்பதற்கான உறுதியான ஆதாரம் தேவை" என்று வலியுறுத்தினார். அதையடுத்து நாடாளுமன்றத்தில் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது.

### இஸ்ரேல் எச்சரிக்கை

எமது நாட்டின் மீது சிரியா தாக்குதல்களை நடத்துமானால் முழுப் பலத்துடன் பதிலடி நடத்தப்படும் என்று இஸ்ரேல் எச்சரித்துள்ளது. எனினும் சிரியாமீது தாக்குதல் ஆரம்பமானால் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு, பாலஸ்தீனத்தில்உள்ளஹமாஸ் அமைப்பு ஆகியவை தம்மீது தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் இஸ்ரேல் மக்களிடம் காணப்படுகின்றது. அவர்கள் இரசாயன ஆயுதத் தாக்குதல்களில் இருந்து தப்பிக் கொள்வதற்காக சுவாசக் கவசங்களைப் பெருமளவில் வாங்குவதைக் காணக் கூடியாதாக இருக்கின்றது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## சிரிய தற்கொலை விமானிகள் தாக்குதலுக்கு தயார் நிலையில்

டமாஸ்கஸ், ஒக.31
மேற்கு நாடுகளின் தாக்குதலை சமாளிக்க தற்கொலைப் படை விமானிகளை ஈடுபடுத்த சிரியா திட்டமிட்டுள்ளது என்று தகவல் வெளியாகி உள்ளது.

சிரிய இராணுவ அதிகாரி ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்குத் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து அந்த இராணுவ அதிகாரி தெரிவித்ததாவது:
"சுமார் 8,000 தற்கொலைப் படை விமானிகள் இராணுவத்தில் உள்ளனர், அவர்கள் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் நாடுகளின் தாக்குதலை சமாளிக்கப் பயன்படுத்தப்படுவர். அமெரிக்க மற்றும் பிரிட்டன் படைகள் குறிப்பிட்ட சில இலக்குகளை நோக்கியே ஏவுகணைகளை வீசும். சிரிய இராணுவம் அதை எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளது" என்று அந்த இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

அதேவேளை கடந்த இரண்டு நாள்களில் மட்டும் 4,000 பேர் புதிதாக இராணுவத்தில் இணைவதற்காகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்றும், அங்கிருந்து வரும் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (ற)

## கென்ய பஸ் விபத்தில் 41 பேர் பரிதாபச் சாவு

நரோக், ஒக.31
கென்யாவின் நரோக் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர்களில் நான்கு குழந்தைகளும் அடங்குகின்றனர் என்றும் அந்நாட்டு செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

மலைப்பாங்கான பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதை அடுத்து மீட்புப் பணிகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது என்றும் அந்த அமைப்பு மேலும் கூறியுள்ளதுடன், விபத்துக்கான காரணங்கள் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது. (ற)

## அமெரிக்க சிப்பாய்க்கு தூக்குத் தண்டனை



நியூயோர்க், ஒக.31
அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் உள்ள இராணுவ மருத்துமனையில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய அமெரிக்க இராணுவச் சிப்பாய் மேஜர் நிடால் ஹாசனுக்கு தூக்குத் தண்டனை விதித்தது தீர்ப்புவழங்கியுள்ளது அமெரிக்க இராணுவ நீதிமன்றம்.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மேஜர் நிடால் ஹாசன் மருத்துவமனைக்குள் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டார். அதில் 13 பேர் உயிரிழந்ததுடன் 31 பேர் படுகாயமடைந்தனர். அதையடுத்து ஹாசன் கைது செய்யப்பட்டு அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

குறித்த வழக்கை 13 நீதிபதிகளைக் கொண்ட இராணுவ நீதிமன்றம் விசாரித்து வந்தது. விசாரணைகளின் முடிவில்இராணுவநீதிமன்றம்ஹாசனுக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இஸ்லாமியரான ஹாசன் அமெரிக்காவில் பிறந்தவர். அமெரிக்க இராணுவ நீதிமன்றம் சுமார் 52 ஆண்டுகளுக்கு பின்னர் இந்த வழக்கில் தூக்குத் தண்டனை விதித்துள்ளது. அமெரிக்க இராணுவ நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை பெறும் 6 ஆவது நபர் இவராவார். (ற)



ஸ்பெயினில் தக்காளித் திருவிழா இந்தாண்டு கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ஸ்பெயினில் 1945ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் தக்காளித் திருவிழா கொண்டாடப்படுவது வழக்கம். இந்த ஆண்டும் வெலன்சியாவின் புனோல் நகரில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. சுமார் 20,000 பேர் பங்கேற்ற இந்த விழாவில், 130,000 கிலோ கிராம் எடை கொண்ட தக்காளிப் பழங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு முதன்முறையாக விழாவில் பங்கேற்றவர்களிடமிருந்து 10 யூரோக்கள் கட்டணமாக அறவிடப்பட்டுள்ளது.

## 12 பேருக்கு வடகொரியாவில் மரண தண்டனை

பியாங்யாங், ஒக.31
வடகொரியாவில் ஆபாச நடனமாடி அதனை இறுவட்டுகளாக விற்பனை செய்த பாடகி மற்றும் அவரது குழுவில் இடம்பெற்ற 11 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

'உன்னாஸ் ஆர்கெஸ்ட்ரா' என்ற இசைக் குழுவை நடத்தி வரும் ஹயான் சாங்-வோல் என்பவர் ஆபாசமாக நடனமாடி அதை பல்வேறு நாடுகளில் விற்பனை செய்துள்ளார். இது வடகொரிய நாட்டு சட்டப்படி குற்றமாகும்.

அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்ட ஹையான் சாங் வோல் உட்பட இசைக் குழுவைச் சேர்ந்த 12 பேர் கைது செய்யப்பட்டு விசாரணையின் முடிவில் அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதையடுத்து இயந்திர துப்பாக்கியால் சுட்டு அவர்கள் 12 பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. உயிரிழந்த ஹையான் சாங்- வோல் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் முன்னாள் காதலியாவார். (ற)

## பிரிட்டன் பங்கெடுக்காவிட்டாலும் சிரியா மீது தாக்குதல் நிச்சயம்

### பிரான்ஸ் ஜனாதிபதி திட்டவட்டம்

பாரிஸ், ஒக.31
பிரிட்டனின் துணை இல்லாமல் போனாலும் சிரியா மீது தாக்குதல் நடத்தத் தயாராக இருக்கின்றோம் என்று பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோயிஸ் ஹொலண்டே அறிவித்துள்ளார்.



இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள ஹொலண்டே, "சிரிய மக்களின் மீது கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட இரசாயனத் தாக்குதல் ஏற்றுக்கொள்ள முடியாத மற்றும் மீண்டும் சரிப்படுத்த முடியாத தீங்கான நடவடிக்கை ஆகும். சிரிய மக்களுக்கு இந்த மிகப் பெரிய கொடுமையை இழைத்தவர்கள் தண்டனையில் அசாத் அரசு மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன்.

இங்கிலாந்து பங்கேற்காவிட்டாலும் இது தொடர்பாக நட்பு நாடுகளுடன் இணைந்துசெயற்பட பிரான்ஸ் தயாராக உள்ளது. சிரியா மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பான அனைத்து சாத்தியக்கூறுகளும் தயாராக உள்ளபோதிலும் எங்களது தலையீட்டை நியாயப்படுத்துவதற்குத் தேவையான சூழ்நிலை உருவாகும் வரை பிரான்ஸ் காத்திருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்கா வும் இதேகருத்தைப் பிரதிபலித்துள்ளது. சிரியா மீதான இராணுவ நடவடிக்கையை தனியாகவேனும் எடுக்க அமெரிக்கா தயாராக இருப்பதை குறிப்புணர்த்தும் விதமாக மற்ற நாடுகளின் அயலுறவுக்கொள்கைக்கு அமெரிக்கா பொறுப்பாக முடியாது என்று அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி கருத்துத் தெரிவித்துள்ளார். (ற)

## ஒசாமாவை காட்டிக் கொடுத்த வைத்தியரின் தண்டனை ரத்து

### வழக்கு மீண்டும் விசாரணைக்கு

இஸ்லாமாபாத், ஒக.31
ஒசாமா பின் லேடனை பிடிக்க அமெரிக்க உளவு அமைப்பினருக்கு உதவிய வைத்தியர் ஷ கீல் அப்ரிடிக்கு வழங்கப்பட்ட சிறைத் தண்டனையை பாகிஸ்தான் நீதிமன்றம் நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதுடன் அவர் மீதான வழக்கை மறுவிசாரணை செய்யவும் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

வைத்தியர் ஷகீல் அப்ரிடிக்கு இந்த வழக்கில் 33 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவுக்கு உதவியதற்காக அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது என்று கூறப்பட்ட நிலையில், அவர் லஷ்கர்- ஈ-இஸ்லாம் என்ற அமைப்போடு தொடர்புடைய காரணத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டார் என்று நீதிமன்ற ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் அப்ரிடி தன் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். இந்நிலையில் நீதவான் ஒருவர் முன்னிலையில் குறித்த வழக்கு மறுவிசாரணை செய்யப்படவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த மறுவிசாரணையை விரைவில் நடத்த வேண்டும் என்று மனுத்தாக்கல் செய்யவுள்ளதாக அப்ரிடியின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (ற)

# After A/Levels...

சர்லதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே IT டிப்ளோமா



JOIN
IT & English
DIPLOMA

ESOFT
*Shaping Lives, Creating Futures.*

edexcel Assured

DiTEC INTERNATIONAL
Diploma in Information Technology

Duration : 4 months
Pendrives & T- Shirt

பெறுபேறுகளுக்கு முன்னர் இரு டிப்ளோமாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்

* *Payable in Installments*

**Other Diplomas**

- DiWE — Diploma in Web Engineering — காலம் 5 மாதங்கள்
- DiBM — Diploma in Business Management — காலம் 4 மாதங்கள்
- DiE — Diploma in English — காலம் 4 மாதங்கள்
- DiSE — Diploma in Software Engineering — காலம் 5 மாதங்கள்
- DiHN — Diploma in Hardware & Networking — காலம் 4 மாதங்கள்
- DiGD — Diploma in Graphic Designing — காலம் 4 மாதங்கள்

புதிய பிரிவுகள்
2013.09.06
காலை 9:00 மணி



FREE
Pendrives & T- Shirt

ESOFT
*Shaping Lives, Creating Futures.*

**ESOFT METRO CAMPUS**
**No 137,K.K.S Road, Jaffna**
**Tel: 021 222 4142 Hotline: 077 309 9 308**
(c/11670)(6.3)


# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக. 31

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். கல்லூரி முதல்வர் எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி எஸ்.சிறிசற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பீ. நாகரத்தினம், ஆர்.பொன்குமார் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஓ-9)

★ ★ ★

நீர்வேலி கரந்தன் சந்தி ஸ்ரீ துர்க்கா முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று சனிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு துர்க்கா முன் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. க.வயிரவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ். மாநகர சபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் கலந்துகொள்வர். (ந-14)


**வீடு காணிகள் விற்பனைக்கு**

மீசாலை வடக்கு APC இற்கு அருகில் வசதிகளுடன் கூடிய வீடு, காணி 4¼ பரப்பு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 899 2028
077 620 4728
(சி 11637)(7.6.3)



**ஏழாலை களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த லட்சார்ச்சனை விஞ்ஞாபனம் (இரு நாள்கள்)**

02.09.2013 திங்கள் 8.30-10.30 வரை
03.09.2013 செவ்வாய் 8.30-10.30 வரை
04.09.2013 புதன் காலை 8.00 மணிக்கு

**சங்காபிஷேகம்**

பிரதம குரு- **தியாககெங்காதரக்குருக்கள்**
லட்சார்ச்சனை சிறப்புற ஆசி வழங்குபவர்
**சிவஸ்ரீ மகாதேவக்குருக்கள்**

தேவஸ்தானம்.
(39287)(11.6.3)

**கடை வாடகைக்கு**

கொழும்புத்துறை 3ஆம் குறுக்கு வீதியில் கடை தளபாடங்களுடன் வாடகைக்கும், வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்கும் உண்டு. (39290)
தொடர்பு: 0776497120 (4.6.3)

**கடைத் தொகுதியுடன் உள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு**

சாவகச்சேரி வர்த்தக மையப் பகுதியில் கண்டி வீதியில் புதிய வர்த்தக வங்கிக் கிளைக்கு அருகில் டச்சு வீதி டிறிபேக் கல்லூரிக்கு முன்பாகவும் (நகரசபை கடைத் தொகுதிக்கு முன்பாக) உள்ள மூன்று கடைத் தொகுதியும் மற்றும் மேல் வீட்டுடன் உள்ளடங்கிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 173 8050 (39294) (7.6.3)

**திருமண சேவை**

டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், விதேசிகள் பாவம் கூடிய, குறைந்த அரச உத்தியோகத்தர்கள், வெளிநாட்டில் பிரஜாவுரிமை பெற்ற மணமக்களும் சைவவேளாள முள்ள மணமக்களும், வர்த்தகர்களும், செவ்வாய் பாவம் கூடிய மணமக்களும் எம்மிடம் உள்ளனர்.
★83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 15½ பாவம் உடைய அமெரிக்க பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு பட்டதாரி மணமகள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ தேவை.
தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர்.
T.P:077 607 0862
(39314)(11.6.3)

**விற்பனைக்கு**

Dozer D4E
CAT Company
தொடர்பு: 077 1068822, 0771068821
(35836)(6.4)

www.wisdombusiness.com

# 16 வயது நிரம்பிய அனைவருக்கும்

**CIMA**
Chartered Institute of Management Accountants

நீங்கள் O/L அல்லது A/L இல் கற்ற பாடங்களோ அல்லது அதன் பெறுபேறுகளோ இப்பாடநெறிக்கு அவசியமில்லை

புதிய வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி

வாரநாட்களுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி — 2013 செப்டெம்பர் 25
(செவ்வாய், புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இடம்பெறும்)

வார இறுதி நாட்களுக்கான வகுப்புகள் ஆரம்பிக்கும் திகதி — 2013 செப்டெம்பர் 14
(சனி, ஞாயிறு மற்றும் விடுமுறைநாட்களில் இடம்பெறும்)

முதலில் பதிவுசெய்கின்ற 150 மாணவர்களுக்கு மட்டுமே ஒவ்வொரு பிரிவிலும் அனுமதி வழங்கப்படும்

Wisdom Business Academy - Jaffna
The Specialist in CIMA Education

154A/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுன் வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்தில்)
E : info@wisdombusiness.com

021 2 220 727
021 7 200 777
(c/11668)(6.3)

Sagittarius Aim

Free Books | Free CDs | A/C Classrooms | Practice Exams | Approved Exam Centre

## விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி, ஓக. 31

ஏ-9 வீதியோரமாக நடந்து சென்ற மாடு திடீரென வீதியின் குறுக்காக ஓடி அந்த வழியே வந்த மோட்டார் சைக்கிளு டன் மோதியதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நுணாவில் மத்தியைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவகுருநாதன் (வயது-40) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நாவற்குழிச் சந்தியில் தாக்குதலுக்கு இலக்கான இருவர் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

அதே இடத்தைச் சேர்ந்த அழகன் சிவலிங்கம் (வயது-56) அன்ரனி என்ரிக்கோல் (வயது-33) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (வ-9)

## சிறுவர் தினத்தை முன்னிட்டு சித்திரப் போட்டி

அச்சுவேலி, ஓக.31

உலக சிறுவர் தினம் 2013 ஐ முன்னிட்டு 'பரிகல்பன' சிறுவர் சித்திரப் போட்டி நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளது.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைத் திணைக்களம் உலகச் சிறுவர் தினத்தை முன்னிட்டு 'பரிகல்பன' சிறுவர் சித்திரப் போட்டியை ஏற்பாடு செய்து பாடசாலை மட்டத்தில் நடத்துகின்றது.

சிறுவர் சித்திரப் போட்டி பாலர் பிரிவு (தரம்- 1-5 வகுப்பு) 'சிறுவனான நானும் எனது தேசமும்' என்ற தலைப்பிலும் கனிஷ்ட பிரிவு (தரம்- 6 - 10 வகுப்பு) 'நாம் காணும் நாளைய இலங்கை' என்ற தலைப்பிலும்,

சிரேஷ்ட பிரிவு (தரம்- 11-13 வகுப்பு) 'சிறுவர்களே எமது வலு; நாளைய உலகின் அபிவிருத்தி' என்ற தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

### சாவகச்சேரி வைத்தியசாலை விடுதிகளுக்கு அப்பால் மின்ஒளி இல்லை

தென்மராட்சி, ஓக.31

சாவக்சேரி ஆதார வைத்தியசாலைவிடுதிகளுக்குஅப்பால்மின் வெளிச்சம் இல்லாமல் இருள் சூழ்ந்த நிலையில் உள்ளதாக அந்தப் பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. சமையலறை, பிரேத அறை, இரண்டு விடுதிகள், கிளினிக் அறைகள் போன்றவை உள்ள போதிலும் அவை வெளிச்சமின்றி இருளாக இருப்பதைக் காண முடிகின்றது. அந்தப் பகுதியில் தூண்களில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அவை பழுதடைந்துள்ள நிலையில் உள்ளன. (வ-9)

நல்லூர் திருவிழா காலத்தில்

# பனை உற்பத்தி பொருள் சிறப்புக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஓக. 31

பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு பனைசார் உற்பத்திப் பொருள்களுக்கான சிறப்புக் கண்காட்சி மற்றும் விற்பனைக்கூடம் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பனைசார் உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்பட்ட நவீன முறையிலான உற்பத்திப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், பனைசார் உணவுப் பொருள்கள் என்பன விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆலயத் திருவிழாக் காலங்களில் பனைசார் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தி அதனூடாக உற்பத்தியாளர்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெற்று கொடுப்பதுடன் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டமாக ஆலயத் திருவிழாக் காலங்களில் விசேட காட்சிக் கூடங்களை பனை அபிவிருத்தி சபை மேற்கொண்டு வருகிறது.

அதனடிப்படையில் நல்லூர் திருவிழாக் காலத்தில் தென்னிலங்கை மற்றும் வெளிமாவட்டங்கள் உட்பட உள்ளூரில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் வருகை தந்தவண்ணம் இருப்பதால் ஆலய சூழலில் இந்த சிறப்புக் காட்சிக் கூடத்தை அமைத்துள்ளது.

பனை அபிவிருத்திச் சபையின் இந்த முயற்சியால் உள்ளூர் பனைசார் உற்பத்தியாளர்கள் நன்மையடைந்துள்ளனர். (வ-14)



சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமையற்ற குடும்பங்களை உருவாக்கும் நோக்குடன் நடைபெற்ற ஆன்மிகக் கருத்தரங்கு நேற்று நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. (ஒ-7)

# நீர்வேலி, சிறுப்பிட்டி பகுதிகளில் வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு


அச்சுவேலி, ஓக. 31

நிர்வேலி, சிறுப்பிட்டி பகுதி வாழைத் தோட்டங்களில் இருந்து பெருமளவில் வாழைக்குலைகள் திருடப்படுகின்றன. வாழைக்குலைத் திருட்டைத் தடுத்து நிறுத்த முடியாமல் உள்ள விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். நீர்வேலிப் பகுதி வாழைத் தோட்டமொன்றிலிருந்து ஒரே இரவில் 27 வாழைக் குலைகள் திருடப்பட்டுள்ளன.

வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரித்திருப்பது திருடர்களை வாழைக் குலையின் பக்கம் திசை திருப்பியுள்ளது. பகல் வேளையில் வாழைத் தோட்டத்தின் நிலவரம் மற்றும் முற்றிய வாழைக்குலைகளின் தரம் என்பவற்றை அவதானித்துவிட்டு இரவில் கச்சிதமாக காரியத்தை முடித்துவிடுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாழைக்குலைத் திருட்டு பின் இரவு வேளையில் நடைபெறுவதுடன் சிறிய ரக "படி" வாகனங்களில் வரும் குழுவினரே திட்டமிட்ட முறை யில் வாழைக்குலை திருட்டில் ஈடுபடுகின்றனர். திருட்டுத்தனமாக வெட்டப்படும் வாழைக்குலைகளை உள்ளூர்ச் சந்தைகளில் விற்பனை செய்யாமல் வெளியிடங்களுக்கு கொண்டு சென்று விற்பதாகவும் கூறப்படு கின்றது.

உள்ளூர் சந்தைகளில் திருட்டு வாழைக் குலைகளை விற்பனை செய்வதில் நடைமுறைச் சிக்கல் உள்ளது. வெட் டப்பட்டு வியாபாரத்துக்கு எடுத்து வரப்படும் வாழைக்குலைத் தண்டு பொருத்தமான அளவுக்கு நீளமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் சந்தேகத்தை ஏற்படுத்திவிடும்.



தனது தோட்டத்தில் விளைந்த வாழைக் குலையை வாழைத் தோட்ட உரிமையாளரால் இலகுவாக இனம்காட்ட முடியும். இந்த நிலையில் உள்ளூர்ச் சந்தையில் விற்பனை செய்யாமல் வெளியிடங்களுக்கு அல்லது வெளி மாவட்டங்களுக்கு வாழைக் குலைகள் எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகின்றது.

வாழைக்குலைத் திருட்டைக் கட்டுப்படுத்த வாழைத் தோட்டத்தில் காவல் இருப்பதும் முடியாத காரியம் எனக் கூறப்படுகின்றது. வாழைக்குலை வெட்டி எடுப்பதற்கு கத்தியுடன் வரும் திருடர் என்ன செய்வார்களோ என்ற அச்சமும் இதற்கு ஒரு காரணம்.

இதேவேளை வாழைக்குலைத் திருட்டுத் தொடர்பாக பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டவரப்பட்டுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (வ-11)

## மோட்டார் சைக்கிள் மறைத்து வைத்துவிட்டு தகராறு செய்த நபர்கள்

தென்மராட்சி, ஓக. 31

வைத்தியசாலை பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்ட மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றவர்கள் அதனை வேறொரு இடத்தில் நிறுத்திவிட்டு வந்து பாதுகாப்பு நிலையத்தை நடத்துபவரிடம் தமது மோட்டார் சைக்கிளைக் காணவில்லையென முறையிட்டு குழப்பம் விளைவித்தனர்.

அந்த வழியே வந்த மோட்டார் போக்குவரத்துப் பொலிஸார் அங்கு வந்து இரு பகுதியினரையும் கடுமையான விதத்தில் விசாரணை செய்தபோது மோட்டார் சைக்கிள் விட்ட இடத்தை மறந்துபோய் விட்டதாகக் கூறி சமாளிக்க முயன்றனர்.

இந்த நிலையில் பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு அவர்களிடம் குழப்பம் விளைவித்த இருவரும் கையளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றது. (வ-9)

## 'கேற்வே' வழங்கும் புலமைப்பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஓக.31

கல்வி அமைச்சின் ஈ.கே.எஸ்.பி. செயற்றிட்டத்தின் கீழ் நிதியியல் முதலீடு மற்றும் நிதிப் பாதுகாப்பு பற்றிய சர்வதேச அங்கீகாரமுடைய பிரிட்டன் தராதர கற்கை நெறிக்கான இலவச புலமைப்பரிசில்கள் 'கேற்வே'யினால் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியாவில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிவரக் கோவை, ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பிரதிகளோடு விண்ணப்பங்களை 'கேற்வே', 347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஈ.கே.எஸ்.பி. செயற்றிட்டத்தின் வடமாகாணத்துக்கான திட்டமிடல் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி பல்வைத்தியப் பிரிவில் நோயாளர் அதிகரிப்பு

தென்மராட்சி, ஓக.31

சாவகச்சேரி வைத்தியசாலையில் இயங்கும் பல் வைத்தியப் பிரிவுக்கு வரும் பல் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, வடமராட்சி கிழக்கு, பூநகரி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவு பல் நோயாளர்கள் சிகிச்சைக்காக இங்கு வருகின்றனர்.

பற்சிகிச்சைப் பிரிவு காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இயங்குவதால் பல் பிடுங்குதல், அடைத்தல், சுத்தம் செய்தல் உட்பட பல்வேறு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தினமும் முப்பதுக்கு மேற்பட்டோருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)



# தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமையகத்துக்கு காவலாளியை நியமிக்குக

### பாதுகாப்பு முக்கியம் என்கிறார் உபதவிசாளர்

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தின் பாதுகாப்புக் கருதி இரவு நேரக் காவலாளியை நியமிக்குமாறு தவிசாளரைக் கோரியுள்ள உபதவிசாளர், ஆளணிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி தலைமைக் காரியாலயப் பாதுகாப்பை அலட்சியப்படுத்த முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வலி.தென் மேற்குப் பிரதேச சபையின் கீழ் மானிப்பாய் பட்டினம், ஆனைக்கோட்டை கிராமம், பண்டத்தரிப்புப் பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய நான்கு உப அலுவலகங்கள் இருக்கின்றன. இந்த உப அலுவலகங்களில் நான்கு இரவு நேரக் காவலாளிகள் கடமையாற்றுகிறார்கள்.

இந்த நிலையில் மானிப்பாய் பட்டின உபஅலுவலகத்துக்கு அருகில் புதிதாகக் கட்டப்பட்டு இயங்கிவரும் தலைமை அலுவலகத்துக்கு இரவு நேரக் காவலாளி நியமிக்கப்பட வில்லை. இதனால் இந்தக் காரியாலயத்தின் பாதுகாப்பு கேள்விக் குறியாகவுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயமாக இயங்கி வந்த, தற்பொழுது மானிப்பாய் பட்டின உபஅலுவலகமாக இயங்கி வரும் பகுதியில் பிரதேச சபைக்குச் சொந்தமான பத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. இங்கு கடமையாற்றும் காவலாளி ஒரே சமயத்தில் அருகிலுள்ள தலைமைக் காரியாலயத் திற்கு காவலாக இருக்க முடி யாது.

இதேவேளை, தலைமைக் காரியாலயத்துக்கு சுற்றுமதில் கட்டப்படாததினால் சிலர் இரவு நேரங்களில் உட்சென்று அங்கு பொருத்தப்பட்டுள்ள குழாய் நீரில் குளிப்பதிலும், படுத்துறங்குவதிலும் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டிய உப தவிசாளர், இந்த செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இரவு நேரக் காவலாளிகளை நியமிக்குமாறும் கோரியுள்ளார். அதே நேரம், காவலாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் குறித்து தவிசாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக பிரதம செயலருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்த போதிலும், அவர் அங்கீகரிக்கப்பட்ட காவலாளிகளின் எண்ணிக்கைக்கு மேல் நியமிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார். (ஓ-115)

# முஸ்லிம் சனத் தொகையை குறைத்துக்காட்ட அரசு சதி



### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் தெரிவிப்பு

அம்பாறை, ஒக.31
இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகையை குறைத்துக் காட்ட அரசு சதி செய்துள்ளது என கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.
சனத்தொகை புள்ளி விவரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ அறிக்கை மூலமே இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சனத்தொகை புள்ளிவிவரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள 2012ஆம் ஆண்டுக்கான அறிக்கையின்படி கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவின் சனத்தொகை 64,451. இதில் முஸ்லிம்கள் 58,447 பேர் எனவும், தமிழர் 2,522 பேர் எனவும், இந்தியத் தமிழர் 3,445 பேர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதேபோல சிங்களவர் 19 பேர் இருப்பதாகவும், இலங்கைச் செட்டிகள் 2 பேர் இருப்பதாகவும் எந்த இனம் என அடையாளம் காண முடியாதோர் 13 பேர் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உண்மையில் இந்தியத் தமிழர் எவரும் கிண்ணியாவில் இல்லை. எனினும் 3,445 பேர் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
அவ்வாறே சிங்களவர் 19 பேரும் இல்லை. செட்டிமார் என யாரும் இல்லை. எந்த இனம் என அடையாளம் காண முடியாதோரும் இல்லை. கிண்ணியாவில் நிரந்தரமாக வசிக்கின்ற, கிண்ணியாவைப் பற்றி நன்கு தெரிந்தோர் அனைவரும் இதனை ஏற்றுக் கொள்வர். இப்படியான நிலையில் சனத்தொகை புள்ளி விவரவியல்திணைக்களம்ஏன் இத்தகைய தவறான தகவலை வெளியிட வேண்டும்.
இங்கு இந்தியத் தமிழர், செட்டிமார், இனம் அடையாளம் காண முடியாதோர் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதெல்லாம் முஸ்லிம்கள் தான் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறு முஸ்லிம்களின் எண்ணிக்கையை வேறு இனமாகப் பிரித்துக் காட்டுவதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதே அரசின் நோக்கமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.
இது கிழக்கு மாகாண முஸ்லிம்களின் வீதத்திலும் இலங்கை முஸ்லிம்களின் வீதத்திலும் தாக்கம் செலுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. முஸ்லிம்களுக்கெதிராக இந்த அரசு செய்து வரும் அநியாயங்களில் மற்றுமொரு வடிவமே இதுவாகும்.
இந்தச் சதி கிண்ணியா பிரதேசத்தில் மட்டும் செய்யப்பட்டுள்ளதா? அல்லது வேறு பிரதேசங்களிலும் செய்யப்பட்டுள்ளதா என்பதை நான் தற்போது ஆராய்ந்து வருகின்றேன். இதனை ஒவ்வொரு பிரதேசத்திலுள்ளோரும் கவனத்தில் எடுக்க வேண்டும். இது தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.
இந்தப் புள்ளிவிவர அறிக்கை ஆளுங்கட்சியில் உள்ள சகலருக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. எனினும் இம் மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் யாரும் இது குறித்து வாய் திறக்காமலிருப்பதிலிருந்து அவர்களது அரச விசுவாசம் தெளிவாகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## புராதன கண்ணகி அம்மன் ஆலய புனர்நிர்மாணப் பணிகள் ஆரம்பிப்பு



மட்டக்களப்பு, ஒக.31
தேசத்துக்கு மகுடம் வேலைத் திட்டத்தின் கீழ் நாவிதன் வெளிப் பிரதேசத்தில் 50 வருடங்கள் பழைமைவாய்ந்ததும், கடந்த கால போர் சூழலில் பாதிக்கப்பட்டதுமாகக் காணப்படும் மத்தியமுகாம்- 1, ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தின் புனர் நிர்மாணப் பணிகளை ஆரம் பித்து வைக்கும் நிகழ்வு ஆலயத் தலைவர் எஸ். சிவபாலம் தலைமையில் புதன் கிழமை நடைபெற்றது.
இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன, மத்திய முகாம் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஜீ. உபசேகர உட்பட பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.
மத்தியமுகாம்-1 ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம் 5 இலட்சம் ரூபா நிதியுதவியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. (வ)

## சிங்கி இறால்கள் தொடர்பான சுவரொட்டிகள்




மட்டக்களப்பு, ஒக.31
மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிங்கி இறால்கள் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
பெப்ரவரி, செப்ரெம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் சிங்கி இறால்கள் பிடித்தல், விற்பனை செய்தல், ஏற்றிச் செல்லுதல், உடைமையாக வைத்திருத்தல், ஏற்றுமதி செய்தல், தொட்டியில் வைத்திருத்தல் ஆகியன தடை செய்யப்பட்டுள்ளன என ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிங்கி இறால்கள் பிடித்தல், விற்பனை செய்தல், தொட்டியில் வைத்திருத்தல் ஆகியன தடை செய்யப் பட்டுள்ளது.**

அந்தச் சுவரொட்டிகளில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## வலுவிழந்தோர்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவு



அம்பாறை, ஒக.31
அம்பாறை, ஆலையடி வேம்பு பிரதேசத்தில் வலுவிழந்தோர்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன், தையல் பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுநர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப் பட்டன.
'மஹிந்த சிந்தனை' வேலைத் திட்டத்தின் கீழ் 16 பேருக்கு வாழ்வாதார கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன், தையல் பயிற்சியை பூர்த்தி செய்த பயிலுநர்கள் 30 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.
ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் நவரெட்ணராஜா கலையரங்கில் புதன்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச். பியசேன, ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.எல்.ஏ. எம்.ரஹ்மத்துல்லா, சமுர்த்தி வங்கி சங்க முகாமையாளர் ரி.பரமானந்தம், சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.எம். மொகமட், நிகழ்சித்திட்ட உதவியாளர் கே.தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

## வாகரை தேவாலய திறப்பு விழாவில் ஜனாதிபதி

மட்டக்களப்பு, ஒக.31
மட்டக்களப்பு வாகரையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ள புனித பேதுருவானவரின் தேவாலயத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார்.
கடந்த 23 ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான ஆலயத்தின் வருடாந்த நவநாள் திருவிழா நாளை திருவிழாக் கூட்டுத்திருப்பலியுடன் நிறைவடையும்.
வாகரை பேதுருவானவரின் ஆலயம் 2004 ஆம் ஆண்டு சுனாமியில் முழுமையாக பாதிக்கப்பட்டு தற்போது புதிதாக அமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. (வ)

## முன்பள்ளி ஆசிரியர்களை வளப்படுத்தும் செயற்றிட்டங்கள்

மட்டக்களப்பு, ஒக.31
முதன்முறையாக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாலர் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை வளப்படுத்தும் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்தத் திட்டத்தின் கீழ் மாவட்டத்திலுள்ள 150 பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகள் நடைபெற்றன என்று அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் வி.முரளீதரன் தெரிவித்தார்.
இந்தச் செயலமர்வு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. (ச)

## மகளிர் கைவினைத்திறன் உற்பத்திப் பொருள்கண்காட்சி



ஏறாவூர், ஒக.31
கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களமும் ஏறாவூர் நகர பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மகளிர் கை வினைத்திறன் உற்பத்திப் பொருள்கண்காட்சி நேற்று முன்தினம் ஏறாவூர் நகர பிரதேச கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.
ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பி.எம். எம்.எஸ். சார்ள்ஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.
கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் கே.அருந்தவராஜா, ஏறாவூர் நகர உதவிப் பிரதேச் செயலாளர் எம்.ஏ.சி. றமீஸா கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. முஹம்மத் உள்ளிட்ட பல அதிகாரிகளும் ஏராளமான பொது மக்களும் இதில் கலந்து கொண்டனர்.
மகளிர் அமைப்புக்களால் தயாரிக்கப்பட்ட பல்வேறு அலங்கார கைவினைப் பொருள்களும், இன்னும் பல்வேறு வீட்டு உபயோகப் பொருள்களும் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. (வ)

**அலங்கார கைவினைப் பொருள்களும், இன்னும் பல்வேறு வீட்டு உபயோகப் பொருட்களும் கண்காட்சியில் காட்சிப்படுத் தப்பட்டிருந்தன.**

## மதுபோதையில் இருந்த பிரதேச சபை உறுப்பினர் கைது

கொழும்பு.ஓக.31
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கேகாலை பிரதேச சபை உறுப்பினர் நந்திக கமகே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
அதிகளவு மதுபோதையில் இருந்த நிலையில் அவர் கேகாலை நகரில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.
கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## கடையில் தீ விபத்து நால்வர் காயம்

கொழும்பு.ஓக.31
புத்தளம் பொலிஸ் பிரிவின் கீழுள்ள புத்தளம் கொழும்பு வீதியில் அமைந்துள்ள கடையொன்றில் நேற்று முன்தினம் அதி காலை 1.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.
மின் ஒழுக்கு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இதன் போது கடை முற்றாகச் சேதமடைந்துள்ளது.
புத்தளம் பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த விபத்தில் சிறு காயங்களுக்குள்ளான நால்வர் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

## தங்கம் கடத்த முயன்றவர் கைது

கொழும்பு, ஓக.31
தங்கக்கட்டிகளை இந்தியாவின் மும்பைக்கு கடத்த முயன்றதாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.
3.1 மில்லியன் ரூபா பெறுமதியான 621 கிராம் 3 தங்கக் கட்டிகளை இவர் கடத்த முயன்றுள்ளார்.
இந்தச் சந்தேக நபர் நீர் கொழும்பை சேர்ந்த 30 வயதான ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

## இரத்தினக்கல் அகழ்வில் 8 பேர் கைது

கொழும்பு, ஓக.31
பொகவந்தலாவ பொலிஸ் பிரிவின் மா எலிய வனப் பகுதியில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இரத்தினக்கல் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் இதன்போது கைப்பற்றப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (எ)

# தமிழருக்காக தொடர்ந்து பேசுபவர் வாசுதேவவே





**பிரதி அமைச்சர் முரளிதரன் பெருமிதம்**

கொழும்பு.ஓக.31
ஐம்பது வருடகால அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துவரும் ஓர் அரசியல்வாதி அமைச்சர் வாசு தேவவே என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.
தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் ஒற்றுமை மிக்க சகோதரத்துவத்துடன் இணைந்த இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற தலைப்பில் நடைபெற்ற பேரணி பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் அரசியல்வாதியாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார உள்ளார். இவர் நாடாளு மன்றத்திலும் சரி அதற்கு வெளியேயும் சரி தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்து வருகின்றார்.

**இலங்கையில் மனித உரிமையும் மக்களுக்கான சுதந்திரமான சூழலும் சிறப்பாகக் காணப் படுகின்றது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்துள்ளமையை வரவேற்கின்றேன்.
அவரது வருகையானது இங்குள்ள உண்மையான நிலவரத்தை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமையும். இலங்கையில் மனித உரிமையும் மக்களுக்கான சுதந்திரமான சூழலும் சிறப்பாக காணப்படுகின்றது.
வட மாகாண சபைத் தேர்தல் நடைபெறாது என்று கூறப்பட்ட போதும், இப்போது நடைபெறப் போகின்றது. சுதந்திரமாக இத் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.- என்றார். (எ)



கிழக்கு மாகாண சபையினால் 22 வருமான வரி மேற்பார்வையாளர்களுக்கான நியமன கடிதங்கள் புதன்கிழமை முதலமைச்சர் நஜீப் ஏ மஜீதினால் முதலமைச்சர் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. முதலமைச்சரின் செயலாளர் ஏ.அசீஸ் மற்றும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் க.உதயகுமார் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ)

# ஓட்டோக்களுக்கு புதிய ஒழுங்குவிதி




கொழும்பு. ஓக.31
செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ள ஓட்டோக்களுக்கான புதிய ஒழுங்கு விதிகளை போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம ஜுலை 31ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிட்டுள்ளார்.
சகல முச்சக்கர வண்டிகளிலும் மீற்றர் பொருத்தப்படல், கட்டண விவரத்தை ஓட்டோக்களின் வெளிப்புறத்தில் காட்சிப்படுத்தல், வலது புறத்தில் கதவு பொருத்தப்படல் ஆகியவற்றை இந்த ஒழுங்குவிதிகள் கட்டாயப்படுத்துவதுடன் ஓட்டோவின் வேகம் ஒருபோதும் மணிக்கு 40 கிலோமீற்றருக்கு மேல் அதிகரிக்கக்கூடாது எனவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
மேலும் ஒரேவேளையில் மூன்று பயணிகளுக்கு மேல் ஓட்டோவில் பயணிக்க முடியாது. ஆயினும் ஒரு பெரியவருக்குப் பதிலாக 12 வயதிற்கு குறைந்த இரண்டு பேரை ஏற்றிச் செல்ல முடியும்.
சாரதியின் இருக்கையின் பின்புறத்தில் சாரதியின் புகைப் படம், சாரதியின் அனுமதிப் பத்திரத்தின் பிரதி, தேசிய அடையாள அட்டையின் இலக்கம், அவசர தொடர்புக்கான தொலைபேசி இலக்கம் ஆகிய விவரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். இந்த ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஓட்டோ விபத்துக்களை பெருமளவில் குறைக்கலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (எ)

## சட்டவிரோதமான முறையில் மீன்பிடித்த 18 பேர் கைது




கொழும்பு, ஓக.31
யால - பட்டனங்கல்ல மீன்பிடித் துறையில் சட்டவிரோதமான முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மீன்பிடி மற்றும் நீரியல்வள திணைக்களத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்கள் திஸ்ஸமகாராம நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு அனைவருக்கும் தலா 3000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (எ)

## கொழும்பு நகரில் மீண்டும் டெங்கு



கொழும்பு, ஓக.31
கொழும்பு நகரில் மீண்டும் டெங்கு காய்ச்சல் பரவி வருவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.
நாளாந்தம் சுமார் 10 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.
இந்த மாதம் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 275 பேர் பதிவாகியுள்ளதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்தது.
இடைக்கிடை மழை பெய்தமை மற்றும் சூழலை சுத்தமாக வைத்திருக்காத காரணத்தினால் டெங்குக் காய்ச்சல் பரவுகிறது.
விசேடமாக, மட்டக்குளி, மோதரை, பொரளை, வனாத்தமுல்ல போன்ற பகுதிகளில் இவ்வாறான நிலைமை அதிகளவில் காணப்படுகிறது.
இதனை கட்டுப்படுத்துவதற்காக அடுத்த மாதம் முதல் விசேட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் வைத்திய அதிகாரி தெரிவித்தார். (எ)

## தாதிய நியமனத்தில் குறைபாடு வைத்தியசாலை பாதிப்பு



கொழும்பு, ஓக.31
தாதிய சேவைக்கு ஆள்சேர்ப்பு நடவடிக்கையில் குறைபாடு காணப்படுவதால் பல பிரச்சினைகள் எழுந்துள்ளதாக அரச தாதி அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதனால் வைத்தியசாலை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.
தாதி உத்தியோகத்தர் குறைப்பாட்டைத் தீர்க்க விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் இதுவரை எவரும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.
2400 பேர் தாதியர் பயிற்சிக்கு தகுதியானவர்கள் என்று அடையாளம் காணப்பட்ட போதும் அவர்கள் தாதிப் பயிற்சி கல்லூரிகளுக்கு சுகாதார அமைச்சால் இணைத்துக் கொள்ளப்படவில்லை .
தாதியர் பற்றாக்குறையால்

**விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒரு வருடம் ஆகியும் எவரும் சேவையில் இணைத் துக் கொள் ளப்படவில்லை.**

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சுவாச சத்திர சிகிச்சை பிரிவின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் இரண்டு மூடப்பட்டுள்ளன.
அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சிறு நீரக நோய்ப் பிரிவு உள்ளிட்ட சில பிரிவுகளை இயக்கிச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உள்நாட்டுப் போர்களை அனைத்துலக மட்டத்துக்கு விஸ்தரிக்கலாமா...?

மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு போருக்கான சமிக்ஞைகள் மேலெழுந்து வருகின்றன. 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சிரியாவில் ஆரம்பிக்கப்பட்ட அரபு வசந்தம். அங்கு மட்டுமன்றி அந்தப் பிராந்தியத்தின் நெருக்கடியாக மாறிவருகின்றது. அவ்வாறு மாறும் பட்சத்தில் வல்லரசுகள் வந்து தத்தமது மூக்கை நுழைத்து. ஒவ்வொன்றும் தமதுஇராணுவ வல்லமைகளைக் கட்டவிழ்த்து விடும் காட்சி அவிழும் என்று எதிர்பார்க்கலாம்.

உள்நாட்டுப் போரில் இரசாயன ஆயுதம் பாவிக்கப்பட்டதான குற்றச்சாட்டு உருவாக்கி உள்ள நெருக்கடி மத்திய கிழக்கை அபாயத்துக்குள் தள்ளிவிட்டுள்ளது.

அதற்கான ஆரம்பமாக. சிரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்க ஒபாமா நிர்வாகம் தயாராகி வருகிறது. அமெரிக்க போர்க் கப்பல்கள் மத்திய தரைக் கடலுக்கு நகர்த்தப்பட்டுள்ளன.

அதனையடுத்து சிரியாவின் ஆட்சியாளர்களுக்கு ஆதரவான நாடான ரஷ்யாவும் இரு போர்க் கப்பல்களை அனுப்பியுள்ளது. ரஷ்யாவுடன் ஈரான். வடகொரியா. சீனா ஆகிய நாடுகளும் ஜனாதிபதி அஸாத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

அமெரிக்கா தனது படைகளை சிரியாவுக்கு அனுப்புமானால் ரஷ்யா எவ்வாறு செயற்படப்போகிறது என்பதிலேயே நெருக்கடியின் மோசமான விளைவு தங்கியுள்ளது எனலாம்.

கடந்த 21ஆம் திகதி தலைநகர் டமாஸ்கஸின் வெளிப்புறத்தில் அஸாத்துக்கு எதிரான கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் குழந்தைகள். பெண்கள் உட்படப் பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டனர். அனைத்துலக உதவி அமைப்பான எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு இத்தாக்குதலில் 335 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கிறது. ஆனால் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகம் என்று சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சதாம் ஹுசேயினின் ஆட்சியின்போது ஈராக்கில் பேரழிவு தரக்கூடிய இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக அப்போதைய ஜோர்ஜ் புஷ் அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தது அமெரிக்க உளவு ஏஜென்சி. அதே ஏஜென்சியே சிரியாவின் ஆட்சியாளர்களிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக இப்போதும் ஒபாமா நிர்வாகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. 2003இல் ஈராக் மீது படையெடுத்த அமெரிக்கா எந்தவொரு இரசாயன ஆயுதத்தையும் கண்டுபிடிக்கவில்லை.

சிரியாப் பிரச்சினை குறித்து ஒபாமா நிர்வாகம் சிவப்புக் கோடு ஒன்றை வகுத்திருந்தது. இரசாயன ஆயுதப் பயன்பாடுதான் அது. சிரியாவின் ஆட்சியாளர்களிடம் இரசாயன ஆயுதம் இருப்பதற்கான போதுமான ஆவணங்கள் இருப்பதாக அமெரிக்க உளவு ஏஜென்சி அறிக்கை தயாரித்துவிட்டது. அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸின் முக்கிய உறுப்பினர்களுக்கு இது வழங்கப்பட்ட பின்பு பகிரங்கப்படுத்தப்படும். ஐ.நா. பரிசோதகர்கள் தற்பொழுது சிரியாவில் ஆய்வுகளை நடத்தி வருகின்றனர். ஒகஸ்ட் 21 தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகளைப் பரிசீலனை செய்து வருகின்றனர். இந்தப் பணி இன்று சனிக்கிழமை முடிவடைந்துவிடும். தாக்குதலுக்கு இரசாயன ஆயுதம் பயன்படுத்தப்பட்டதா என்ற விவரம் அடுத்த ஒருசில தினங்களில் வெளிவந்துவிடும்.

ஐ.நாவினால் இயற்றப்பட்ட அனைத்துலகச் சட்டத்தின் பிரகாரம் இரசாயன ஆயுதம் பயன்படுத்தப்படுவது சட்டவிரோதம் ஆகும். அதன் அடிப்படையில் பாதுகாப்புச்சபையின் அனுமதி இன்றியே சிரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கமுடியும் என்று ஒபாமா நிர்வாகம் கருதுகிறது. ஐ.நா.பாதுகாப்புச்சபையில் சிரியாவின் அஸாத் அரசுக்கு ஆதரவான ரஷ்யாவும். சீனாவும் அங்கம் வகிக்கின்றன. அதனால் சிரியா மீதான இராணுவ நடவடிக்கைக்கு பாதுகாப்புச்சபையில் ஒப்புதல் பெறுவது சாத்தியமற்றது.

1975ஆம் ஆண்டு முடிவடைந்த வியட்நாம் போரின்போது இரசாயன ஆயுதங் களைப் பயன்படுத்தியதாக அமெரிக்கா மீதும் குற்றச்சாட்டு உண்டு. 1962க்கும் 71க்கும் இடைப்பட்ட காலத்தில் வியட்கொங் போராளிகளுக்கு எதிரான சண்டையில் உணவுப் பயிர்களையும் காடுகளையும் அழிக்கக்கூடிய 2 கோடி கலன் இரசாயனம் கலந்த திரவங்களை தென்வியட்நாம். லாவோஸ். கம்போடியா ஆகிய நாடுகளில் அமெரிக்கா ஹெலிகள் மூலம் விசிறியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. அதனால் 4 லட்சம் பேர் மரணமடைந்திருக்கலாம் அல்லது நிரந்தர பாதிப்புக்குள்ளாகி யிருக்கலாம் என்றும் அப்பொழுது குற்றஞ்சாட்டப்பட்டது. சுமார் 5 லட்சம் குழந்தைகள் ஊனமுற்றுப் பிறந்தன என்றும் கூறப்பட்டது. வியட்நாம் போரில் தடைசெய்யப்பட்ட பேரழிவு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை உரிய சான்றுகளுடன் உறுதிப்படுத்தப்பட்டன.

அத்தகைய இரசாயன ஆயுதங்கள்தான் தற்பொழுது சிரியாவிலும் நெருக்கடி கொடுத்து வருகின்றன. சிரியாவில் உருவாகியுள்ள பிரச்சினைக்கு இராஜதந்திர அடிப்படையில் தீர்வுகாண ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ- மூன் ஆலோசனை தெரிவித்துள்ளார். ஈராக் மீதான தாக்குதலின் போதும் ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலின்போதும் அமெரிக்காவுக்கு கைகொடுத்த பிரிட்டன் இம்முறை அமெரிக்காவுக்கு உதவும் சாத்தியம் அறவே இல்லை. சிரியா மீதான இராணுவ நடவடிக்கைக்கு எதிராக பிரிட்டிஷ் நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் வாக்களித்துள்ளது. அமெரிக்காவின் மற்றொரு நட்பு நாடான கனடாவும் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சகல சந்தர்ப்பங்களிலும் தனது வட்டகையின் நட்பு நாடுகள் உதவும் என்று அமெரிக்கா எதிர்பார்க்க முடியாத நிலை அவ்வப்போது முகிழ்ந்து வருகிறது. அதனை அமெரிக்கா புரிந்து கொள்ளுமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

போர் என்ற வெளிப்பூச்சுடன் மக்களை அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயினும்-காவு கொள்ளல் மனித நேயத்துக்கு ஒவ்வாததாகும்.

# மஹிந்தவின் அரசியல் சதுரங்கமும் சர்வதேசத்தின் அவதானிப்பும்

சிங்கள மூலம் : - மவ்பிம
தமிழில்- வீ.எஸ். ரீ

தாமொரு சர்வாதிகாரப் போக்குடைய அரசுத் தலைவரல்ல என நிரூபிக்க வேண்டிய தேவை மஹிந்தவுக்கு உள்ளது என்பது அவரது அண்மைக் கால கருத்து வெளிப்பாடுகள் மூலம் புலனாகின்றது. பொதுநலவாய நாடுகளின் தலைமைத் துவத்தை ஏற்பதன் ஊடாக அதனை நிரூபிக்க இயலுமென அவர் நம்பக்கூடும்.

பெலாரஸ் நாட்டு மொழியில் 'பட்ஸ்கா' என்றால் தந்தை என்று அர்த்தம். பெலாரஸ் நாட்டு ஜனாதிபதி லூக்கசென்கோவை அந்த நாட்டு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஊடகங்கள் பட்ஸ்கா என்றே குறிப்பிடுவது வழக்கம். அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேளையில் அவரது ஆதரவாளர்களும் அவரை பட்ஸ்கா என்றே குறிப்பிட்டுக் கோஷம் எழுப்புவர்.

'மனிதர்கள் மத்தியில் மனிதரொருவர்' என்ற விதத்திலேயே பெலாரஸ் நாட்டு மக்கள் அவர் மீது கௌரவம் செலுத்தி வருகின்றனர். சோவியத் ரஷ்யா உடைவு கண்டதன் பின்னர் ஒரு சுதந்திரமான இராச்சியமாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட பெலாரஸ் நாட்டில் 1994 ஆம் ஆண்டு முதல் லூக்கசென்கோவே ஜனாதிபதியாக இருந்து வருகிறார்.

ஐரோப்பாவின் பிடியிலிருந்து தப்பிப் பிழைத்திருக்கும் கடைசியான ஜனாதிபதி லூக்கசென்கோவே என மேற்குலக நாடுகள் அவரைக் குறிப்பிடுவதுண்டு.

அதேவேளை துஷ்ட. கொடூரமான அரசுத் தலைவர்களின் ஆறு காவலரண்களில் பெலாரஸ்ஸும் ஒன்று என 2005 ஆம் ஆண்டில் அமெரிக்க ராஜாங்கச் செயலாளராகவிருந்த கொண்டலினா ரய்ஸ். பெலாரஸ்ஸின் ஜனாதிபதி அலெக்சாண்டர் லூக்கசென்கோவை அடையாளப்படுத்தியிருந்தார்.

"நான் இது போன்ற விமர்சனங்களை கடந்த பத்தாண்டுகள் காலமாகக் கேட்டு வருகிறேன். எனக்கு இவையெல்லாம் தற்போது பழக்கமாகிவிட்டன. இத்தகைய விமர்சனங்களுக்கெல்லாம் நாங்கள் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை. எமது பெலாரஸ் நாட்டில் மக்களுக்காகவே தேர்தல் நடத்தப்படுகிறது. எமது நாட்டின் தலைவர்கள் இந்த நாட்டின் பொதுமக்களே".

மேற்குலக நாடுகளின் விமர்சனங்களுக் கெல்லாம் மேற்குறிப்பிட்ட விதத்தில் பதிலடி வழங்கி வந்தார் ஜனாதிபதி லூக்கசென்கோ.

'எமது நாட்டின் தந்தையை விரட்டிவிட மேற்குலக நாடுகள் சதிசெய்கின்றன' என்று லூக்க சென்கோவின் எடுபிடிகள் அடிக்கடி குற்றம் சாட்டிவந்ததுண்டு. ஜனாதிபதி லூக்கசென்கோவோ. அவரது அரசின் அதிகாரிகளோ ஐரோப்பிய நாடுகள் எதற்குள்ளும் பிரவேசிக்க இயலாதவாறு அந்த நாடுகள் அவர்களுக்குத் தடை விதித்துள்ளன. அதேபோன்று ஐரோப்பிய நாடுகள் மட்டுமன்றி அமெரிக்காவும் கூட பெலாரஸ் நாட்டின் மீது பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

பொருளாதாரத் தடை காரணமாக சிரமங்களை அனுபவித்து வரும் அந்த நாட்டின் பொதுமக்களைச் சமாதானப்படுத்த "இவையெல்லாம் மேற்குலக ஆக்கிரமிப்பாளர்களின் சதி" என்று கூறி ஜனாதிபதி லூக்கசென்கோ அந்த நாட்டுப்பொதுமக்களைத்தாஜா'செய்துவருகிறார்.

பெனாரஸ் நாட்டின் அரசமைப்பின்படி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுமொருவர். இரு தடவைகள் மட்டுமே நாட்டின் ஜனாதிபதியாக நிர்வாகம் செய்ய இயலும். அந்த வகையில் 1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட லூக்கசென்கோ. இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகப் பதவி வகித்ததன் முடிவில் 2006 ஆம் ஆண்டில் அவரது பதவிக்காலம் முடிவுக்கு வரவிருந்தது. ஆயினும் ஏதாவது விதத்தில் அதனை மேலும் நீடித்து தொடர்ந்தும் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க அவர் அதி அக்கறை காட்டினார். அதற்காக தமது பதவிக் காலம் முடிவடைவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரேயே. 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் மேற்குலக நாடுகளின் சதியை முறியடிக்க வேண்டியுள்ளதெனத் தெரிவித்து. அரசமைப்பு விதிகளில் மாற்றம் மேற்கொண்டு தாம் தொடர்ந்தும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வழிவகை செய்யும் விதத்தில் பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின்மூலம்நாட்டுமக்களது ஆணையைக் கோரி நின்றார் லூக்கசென்கோ.

குறிப்பிட்ட அந்த பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பில் 79.42 வீத வாக்குகள் பெற்று தாம் நாட்டு மக்களது ஆணையை பெற்றுள்ளதாக அவர் பிரகடனப்படுத்திய போதிலும். அது ஊழலும் மோசடியும் மிக்கதொரு வாக்கெடுப்பு என அமெரிக்கா உட்பட ஐரோப்பிய யூனியன் அவரது அந்த வெற்றியை ஆட்சேபித்தன.

அரசமைப்பில் திருத்தம் மேற்கொண்டதன் மூலம் 2006 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்ட லூக்கசென்கோ மூன்றாவது தடவையாகவும் அந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவான வேளையிலும். அமெரிக்கா உட்பட ஐரோப்பிய யூனியன் அந்த ஜனாதிபதித் தேர்தலும் ஊழலும் மோசடியும் மிக்கதாய் அமைந்ததொன்றென விமர்சிக்கத் தவறவில்லை. ஆயினும் தாம் தற்போதும் இளைஞராகவே இருப்பதாக நாட்டு மக்களுக்கு கூறி அவர்களை தாஜா பண்ணி வந்த லூக்கசென்கோ 2010 ஆம் ஆண்டிலும் மீண்டுமொரு தடவை ஜனாதிபதித் தேர்தலைப் பிரகடனப்படுத்தினார். அந்த ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்கள் மீது பொலிஸாரை ஏவிவிட்டுத் தாக்குதல்களை மேற்கொண்டார் லூக்கசென்கோ. தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட 7 வேட்பாளர்களையும். ஊடகவியலாளர்களையும் கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பித்தார். லூக்கசென்கோ ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்த தினத்தன்று அந்த நிகழ்வில் கலந்து கொள்ளாது மேற்குலக நாடுகளின் தூதுவர்கள் புறக்கணித்தனர். அதன் பின்னரே அவருக்கும் அவரது அரசின் அதிகாரிகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்கான தடை விதிக்கப்பட்டது. அந்த வகையில் தற்போது ஜனாதிபதி லூக்கோசென்கோவால் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல இயலாது. அதே போன்று மேற்குலக நாடுகளதோ. பலம் வாய்ந்த ஏனைய நாடுகளின் அரசுத் தலைவர்களோ பெலாரஸ் நாட்டுக்கு பயணம்மேற்கொள்வதில்லை. வெளிநாடுகளின் அரசுத் தலைவர்களை பெலாரஸ் நாட்டுக்கு வரவழைக்கும் கடும் முனைப்பில். லூக்கோசென்கோ முயற்சித்து வந்த நிலையிலேயே எமது ஜனாதிபதி மஹிந்த அந்த நாட்டுக்கு பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளார்.

உண்மையில் இலங்கையில் மஹிந்தவுக்கோ. அவரது தலைமைத்துவத்தின் கீழான இந்த நாட்டுக்கோ. உலக அரங்கில் பெலாரஸ்ஸுக்கு நேர்ந்த கதி நேரவில்லை. லூக்கசென்கோ போன்று சர்வாதிகாரியென மஹிந்த விமர்சிக்கப்படவில்லை. மஹிந்தவை பொதுநலவாய நாடுகளின் தலைவராக ஏற்க 54 உலக நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. அமெரிக்காவுக்கோ ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கோ செல்ல மஹிந்தவுக்கு தடையேதும் கிடையாது. இலங்கை மீது இதுவரை எந்தவொரு வெளிநாடும் பொருளாதாரத்தடை விதித்ததில்லை.

அப்படியானால். ஜனாதிபதி மஹிந்த எதற்காக பெலாரஸ் போன்ற உலக நாடுகளால் புறமொதுக்கப்பட்ட நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறார்? எதற்காக லூக்கசென்கோ போன்ற உலகத்தால் வெறுத்தொதுக்கப்படும் துஷ்ட. பயங்கர அரச தலைவர்களுடன் நட்புறவு பாராட்டுகிறார்? என்ற கேள்விகள் எழுவது நியாயமானதே.

ஜனாதிபதி மஹிந்த பெலாரஸ் நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் எதிர்க் கட்சியைச் சேர்ந்த சிலர் என் னைச் சர்வாதிகாரியெனக் கூறுகிறார் கள். அது சரியானது தானா? எனப் பொது நிகழ்வொன்றில் உரையாற்றும் போது பௌத்த மதத் தலைவர்களிடம் கேட்டிருந்தார்.

ஒரே இனத்தைச் சேர்ந்த குருவிகள் கூட்டமாக ஒன்று சேர்ந்து ஒரே மரத்தில்தான் வசிப்பது வழக்கம் என்றொரு முது மொழி வழக்கில் உண்டு. மஹிந்த. பெலாரஸ் ஜனாதிபதி போன்றவர்களுடன் நெருங்கிச் செயற்படுவதை உலக நாடுகள் மரத்துக் குருவிகளை நோக்கிய கோணத்தில் வைத்தே நோக்குகின்றன. அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட உகண்டா ஜனாதிபதி கூட 1989 ஆம் ஆண்டில் புரட்சியொன்றின் மூலம் உகண்டா நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றி. எதிரணியினரை அடக்கி ஒடுக்கி நாட்டை நிர்வகித்து வருகிறார். அவர் கூட 2006 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர். இரு தடவைகளுக்கு மேல் ஒருவரால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இயலாதென்ற அந்த நாட்டின் அரசமைப்பு விதிக்கட்டுப்பாட்டை. அரசமைப்பில் மாற்றம் மேற்கொண்டதன் மூலம் நீக்கிக் கொண்டு. ஊழல் மிக்க ஜனாதிபதித் தேர்தலை நடத்திப் பதவியைத் தொடர்ந்து வகிக்கும் உலக சர்வாதிகாரியென்ற அவப்பெயரைப் பெற்றுக் கொண்டுள்ள ஒருவராவார். மஹிந்த அவருடனான நட்பை நெருக்கப்படுத்திக்கொள்ள ஒரு முறையல்ல. இரு தடவைகள் அந்த நாட்டுக்குப்பயணம்மேற்கொண்டிருந்தார். உகண்டாவின் ஜனாதிபதி கூட வெளிநாடுகளின் அரச தலைவர்களைத் தமது நாட்டுக்கு வரவழைத்து உபசரிப்பதைப் பெருமையாகக் கருதும் ஒருவராவார்.

இத்தகைய நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து நட்புறவை வலுப்படுத்த மஹிந்த அந்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது இந்த நாட்டுக்கு உலக அரங்கில் அவப்பெயரை ஏற்படுத்துவதாக அமையும். இலங்கை. ஒரு ஜனநாயக நாடு என்ற கௌரவத்தை உலக அரங்கில் ஈட்டிவைத்துள்ளது. அத்தகையதொரு நாட்டின் ஜனாதிபதி. உலக அரங்கில் குரூரமான. துஷ்ட அரசியல் தலைவர்களாக பெயர் ஈட்டிக்கொண்டுள்ள தலைவர்களின் பின்னால் செல்வது இந்த நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக் காரணமாகிறது.

தாமொரு சர்வாதிகாரப் போக்குடைய அரசுத் தலைவரல்ல என நிரூபிக்க வேண்டிய தேவை மஹிந்தவுக்கு உள்ளது என்பது அவரது அண்மைக்கால கருத்து வெளிப்பாடுகள் மூலம் புலனாகின்றது. பொதுநலவாய நாடுகளின் தலைமைத்துவத்தை ஏற்பதனூடாக அதனை நிரூபிக்க இயலுமென அவர் நம்பக்கூடும்.

ஆனால். ஜனாதிபதிப் பதவியென்ற கிரீடத்தைச் சூடிக்கொள்வது போன்று பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவியென்ற கிரீடத்தைச் சூடிக்கொள்வது அத்தனை இலகுவானதொரு காரியமல்ல. ஏனெனில் ஜனாதிபதிப் பதவியென்ற கிரீடத்தை அணிவதற்கு ஜனநாயகப் போக்கை வெறுமனே பெயரளவில் வெளிப்படுத்தினால் போதுமானது. ஆனால் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவியென்ற கிரீடத்தை அணிந்து கொள்ள வேண்டுமானால் ஜனநாயக வாதத்தை முறைப்படி. உரிய விதத்தில் பூரணமாக நிலை நிறுத்திக் காட்டியாக வேண்டியுள்ளது.

# விவசாயத்தில் புதுயுகம் தேடி...

வட்டக்கச்சியில் அமைந்துள்ள மாவட்டவிவசாயப் பயிற்சி நிலையத்தில் சூழலுடன் நட்புறவான விவசாயத்தில் புது யுகம் நோக்கி என்னும் தொனிப்பொருளில் கண்காட்சி ஒன்று நாளை மறுதினம் 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதிவரை நடத்தப்படவுள்ளது. இவ்விவசாயக் கண்காட்சிவளாகத்தில் பலகாட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் உலர்வலயப் பழங்களுக்கு இலங்கைக்குள் மட்டுமன்றி உலகம் முழுவதும் நல்ல கேள்வி உள்ளது. பழ உற்பத்தியாளர்கள் இப்பழங்களின் உற்பத்தியில் சரியான பயிராக்கவியல் தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பார்களேயானால் தரமான பழங்கள் உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும். இதன் அடிப்படையில் இக்கண்காட்சியில் வடமாகாணத்தில் உற்பத்தி செய்யப்படக்கூடிய அனைத்துப் பழங்களையும் தரமாக உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பழப்பயிர்ச்செய்கைக்கு கூடியளவு வாய்ப்புள்ள வடமாகாணத்தில் அன்னாசிச் செய்கை ஏறத்தாழ 55 ஏக்கர் விஸ்தீரணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பயிரை தனிப்பயிராகவும், இடைப்பயிராகவும் செய்கை பண்ண முடியும். வடமாகாணத்தில் பல்லாண்டுப் பழப்பயிர்கள் மற்றும் தெங்குச் செய்கையுடன் ஊடுபயிராக அன்னாசியை வெற்றிகரமாக செய்ய முடியும்.

ஏறத்தாழ 4600 ஏக்கர் விஸ்தீரணத்தில் மாமரச்செய்கையும் ஏறத்தாழ 22,000 ஏக்கர் தெங்குசெய்கையும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இப்பயிர்களின் விதானத்தின் கீழ் உள்ளபகுதியில் கிடைக்கும் பகுதி நிழலில் இப்பயிரை வெற்றிகரமாகச் செய்யமுடியும். இவ்வாய்ப்பினைப் பயன்படுத்தி அன்னாசிச் செய்கையை மேம்படுத்தவேண்டும் எனும் நோக்கில் வட்டக்கச்சி மாவட்ட விவசாயப் பயிற்சிநிலையத்தில் அன்னாசிச் செய்கை பெரிய விஸ்தீரணத்தில் செய்கைபண்ணப்பட்டுள்ளது.

கண்காட்சியில் நடுகைமுறை,, பசளை முகாமைத்துவம், பயிர்ப்பாதுகாப்பு முகாமைத்துவம், அறுவடைக்கு பின்னான தொழில்நுட்பம் என்பவற்றை காட்டக் கூடியவகையில் காட்சித் துண்டங்களும் காட்சிப்பொருள்களும் ஒழுங்கு செய்யப்பட்டுவருகின்றன.

கண்காட்சியைப் பார்வையிடவருபவர்கள் நடுகைப்பொருள்களான அன்னாசி உறிஞ்சிகளை கொள்வனவு செய்வ தற்கு வசதியாக அன்னாசி உறிஞ்சிகள் கம்பகா மாவட்டத்திலிருந்து கொண்டுவந்து விற்பனை செய்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாழைச்செய்கையில் வாழைவர்க்கங்கள், நடுகைதொழில்நுட்பம், நுண் நீர்பாசனத்துடனான செய்கை, தரமான வாழைக்குலைகளை உற்பத்தி செய்வதற்கான பயிராக்கவியல் தொழில் நுட்பங்கள், பீடைமுகாமைத்துவம் அறுவடையின் பின்னான தொழில் நுட்பங்கள், வாழைப்பழத்தின் பெறுமானம்சேர் அதிகரிப்பு உற்பத்திகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. அதே நேரத்தில் பெறுமானம்சேர் உற்பத்தி செய்து காட்டல்களும் உள்ளடக்கப்படவுள்ளன.

மாம்பழங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு வழிகாட்டுவதற்காக சரியான நடுகைத் தொழில் நுட்பம், மரங்களைகத்தறித்தலுக்கான பயிற்று வித்தல் தொழில் நுட்பங்கள், மாவி லைத்தத்தி பழ ஈமுகாமைத்துவம், பருவமற்ற காலங்களில் பூத்தலைத் தூண்டும் செயன் முறைகள் மற்றும் மாம்பழங்களின் அறுவடைக்குப் பின் னானதொழில் நுட்பங்கள், மாம் பழங்களிலிருந்தான பெறுமானம் சேர் அதிகரிப்பு உற்பத்திகள் காட்சிப்படுத்தப் படவுள்ளதுடன் செய்துகாட்டல்களும் மேற்கொள்ளப்படவுள்ளன. ரொம் ஈ ஜே.சி எனும் புதிய இனத்தைப் பார்வை யாளர்கள் கொள்வனவு செய்வதற் கேற்ற ஒழுங்குகளும் செய்யப்பட்டுள் ளன.

பப்பாசிச் செய்கையை மேம்படுத்தக் கூடியவகையில் பப்பாசிக் கன்றுகளை நடுகைசெய்யும் தொழில்நுட்பம், தரமான பழ உற்பத்திக்கான பயிராக்கவியல் தொழில் நுட்பங்கள் அறுவடை செய்யப்படும் பழங்களைச் சேதமின்றி கொண்டு செய்வதற்கான அறுவடைக்குப்பின்னான தொழில் நுட்பங்கள் பப்பாசியிலிருந்தான பெறுமானம் சேர் உற்பத்திகளின் உற்பத்திச் செயன் முறைகள் என்பனகாட்சிப்படுத்தப்படவுள்ளன.

விவசாயிகள், விவசாயச்செய்கையில் ஆர்வமுடையோர், விவசாய அமைப்புக்கள், மாணவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கண்காட்சியைப் பார்வையிட்டு தேவையான ஆலோ சனைகளைப் பெற்றுப்பயனடைய முடியும்.





சி.சிவகுமார்
மாகாண விவசாய பணிப்பாளர்
வடமாகாணம்.

---

ஜெயச்சந்திரன்

# மனிதர்கள் தோன்றியது எவ்வாறு?

சாதி, மத, மொழி, நாடு என்ற பேதமின்றி, இந்தப் பூமியில் உள்ள அனைத்து மனிதர்களும் ஒரு தாய் மக்களே.

அந்தத் தாய் யாரென்று அறிந்தால் மிகவும் ஆச்சரியமும், பெருமையும் கொள்வீர்கள். அந்தத் தாய் 'நட்சத்திரம்' தான். நம்மில் பலர் நட்சத்திரம் (ஸ்டார்) ஆக வேண்டும் என்று கனவு கண்டிருப்பார்கள். அவர்களுக்கு, தாங்கள் நட்சத்திரத்தின் குழந்தைகள் தான் என்ற செய்தி பெருமையாகத் தானே இருக்கும்.

நாம் அனைவரும் எப்படி நட்சத்திரத்தில்இருந்துவந்தோம்என்று பார்ப்போம். உயிர்கள் உருவாக பல தனிமங்கள் தேவை. மனிதர்களாகிய நமக்கு இரத்தம் சுத்தமாவதற்கு வேண்டிய ஒக்சிஜன், எலும்பின் உறுதிக்குத் தேவையான கல்சியம், ரத்தத்துக்கு வேண்டிய இரும்புச் சத்து, மற்றும் கார்பன், நைட்ரஜன், பொஸ்பரஸ் என்று தனிமங்களும், கூடவே உப்பில் உள்ள சோடியம் மற்றும் பொட்டாசியம், மக்னீசியம் போன்ற பல தனிமங்கள் தேவை. அவை இல்லை என்றால் உயிர் வாழ இயலாது என்பது அனைவருக்கும் தெரியும்.

மேலும் தங்கம், வெள்ளி, அலுமினியம் போன்ற பல தனிமங்கள் நம் வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தத் தனிமங்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசைப்படுத்தி அறிவியலாளர்கள் ஓர் அட்டவணையை ஏற்படுத்தியுள்ளனர். இந்தத் தனிமங்களைப்பற்றி ஆராய்ந்து அதன் அமைப்பு, குணங்கள், பயன்கள் போன்ற வற்றை அறிந்து, அவைகளைப் பயன்படுத்தி, நாம் வாழ்வை இனிதே நடத்த அறிவியலாளர்கள் வழி வகுத் திருக்கிறார்கள். மாரடைப்பு வந்தால் உயிருக்குப் போராடும் ஒருவருக்குத் தேவையான ஒக்சிஜன் மற்றும் பல மருந்துகளைக் கொடுத்து, பாசக்கயிறைப் போட்டு இழுத்துக் கொண்டிருக்கும் எமனுடன் போராடி, அந்த பாசக்கயிறை அறுத்து, போய்க்கொண்டிருந்த உயிரை மீண்டும் கொண்டு வர உதவுவார் மருத்துவர்.

ஒவ்வொரு தனிமங்களின் குணங்களையும் வெகு நாள்களாக ஆய்ந்து அறிந்த அறிவியலாளர்கள் பணி தான் அவர்களுக்கு உதவியாயிருக்கின்றது. இந்த தனிமங்கள் எல்லாம் பூமியில் கிடைக்கின்றன. சரி பூமிக்கு இவை எப்படி வந்தன?

நட்சத்திரங்களில் தான் முதலில் இவை எல்லாம் உருவாகின என்று அறிவியலாளர்கள் சொல்லுகிறார்கள். ஏன் பூமியில் நாம் காணும் அனைத்துப் பொருள்களும் நட்சத்திரத்திலிருந்துதான் உருவாயின. நட்சத்திரத்திலிருந்து அவை பூமிக்கு எப்படி வந்தன?

சூரியன் என்ற நட்சத்திரத்தில் இது போன்ற பொருட்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால் சூரியனில் உருவாகும் பொருள்கள் நமக்குக் கிடைக்காது. நம்முடைய சூரியனுடைய தாத்தாவாகிய முதல் தலைமுறை நட்சத்திரம் உருவாக்கி யதை நாம் அனுபவிக்கிறோம். முன் றாம் தலைமுறையைச் சேர்ந்த நமது சூரியன் உருவாக்கும் பொருள்கள் நமக்குப் பின்னால் வரும் தலை முறைக்கும், உயிர்களுக்குத்தான் உபயோகமாகும். எப்படி என்று பார்க்கலாமா?

சுமார் 1370 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றி, ஒரு பலூனைப் போல விரிவடைந்த இந்த பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் இரண்டே இரண்டு தனிமங்கள் தான் இருந்தன. அவை ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம்(சுமார் 75 சதவீதம் ஹைட்ரஜன், 25 சதவீதம் ஹீலியம்). வாயுக்களான இவை இரண்டு மல்லாமல் நாம் காணும் நட்சத்திரங்கள், கோள்கள் எதுவுமே, ஏன் எந்தத் தூசும் கூட பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் இருக்கவில்லை.

ஆச்சரியம் என்னவென்றால் அந்த இரண்டு தனிமங்கள் (வாயுக்கள்) தான் இப்போது நாம் காணும் கோடிக் கணக்கான நட்சத்திரங்களும், அதைச் சுற்றிவரும் கோள்களும், இந்த பூமியும், அதில் நாம் காணும் அனைத்துப் பொருள்களுமாக உருமாறின.

பிரபஞ்சத்தின் ஆரம்பத்தில் தோன்றிய ஹைட்ரஜன் அணுக்களின் ஈர்ப்பு விசையினால் ஏற்பட்ட பிணைப்பினால் தான் பிரபஞ்சத்தின் முதல் தலைமுறை நட்சத்திரங்கள் உருவாகின. பல கோடி வெப்பத்தைக் கொண்ட இந்த நட்சத்திரத்தின் உள்ளே, அந்த வெப்பத்தினால் ஹைட்ரஜன் அணுக்கள் இணைந்து ஹீலியம் என்ற தனிமம் புதிதாக உருவாகியது. இந்த இணைப்பில் தோன்றும் ஆற்றல் தான் ஒளியாகிறது. நட்சத்திரங்களுக்குள்ளேதொடர்ந்து பலகோடிஆண்டுகளாக இந்த இணைப்பு நடந்துகொண்டே இருக்கின்றது.

நட்சத்திரதிற்குள்ளே இரண்டு ஹைட்ரஜன் இணைந்து ஒரு ஹீலியம் அணு புதிதாக உருவாவதுபோல, கூடவே இன்னும் பல அணுச்சேர்க்கைகள் நடக்கின்றன. புதிதாக உண்டான இரண்டு ஹீலியம் அணுக்கள் இணைந்து 'பெரிலியம்' என்ற தனிமம் உண்டாகிறது. அதோடு நிற்காமல் ஒரு ஹீலியம் அணுவும் ஒரு பெரிலியம் அணுவும் சேர்ந்து உயிர்களுக்குத் தேவையான முக்கியமான தனிமம் 'கார்பன்' உருவா கிறது. புதிதாகத் தோன்றிய அணுக்களின் இணைப்பு மேலும் தொடர்கிறது. இரண்டு பெரிலியம் அணுக்கள் இணைந்து நம் உயிரின் ஆதாரமான பிராணவாயு உருவாகிறது. இரண்டு காபன் அணுக்கள் இணைந்து ஒரு 'மக்னீசியம்' அணு உருவாகிறது. இப்படிப் பற்பல அணுச்சேர்க்கைகள் நடந்து ஒன்று, இரண்டு என்று தனிமங்களை வரிசைப் படுத்திய அட்டவணையில் உள்ள 26 என்ற எண் கொண்ட இரும்பு வரை நட்சத்திரங்களுக்கு உள்ளே பெருமளவில் உற்பத்தியாகிறது.

நட்சத்திரங்களுக்குள் உள்ள சுமார் கோடி டிகிரி வெப்பத்தில் தான் இந்த அணுச்சேர்க்கைகள் நடக்க முடிந்தது. அறிவியல் வளர்ந்த இந்த காலத்தில் புதிய தனிமங்களை உண்டாக்கும் பணியில் மனிதன் இறங்கி சில தனிமங்களை உண்டாக்கி வெற்றியும் பெற்றுள்ளான். முன்னதாக பூமியில் உள்ள தனிமங்களிலிருந்து தான் அவை உருவாக்கப்பட்டன. சிறிய அளவில் தான் இவைகளை உண்டு பண்ண முடியும். பெருமளவில் பூமியில் கிடைப்பவை நட்சத்திரங்களில் உற்பத்தியானவை.

தனிமங்களின் அட்டவணையில் இரும்புக்கு மேல் உள்ள தனிமங்களான தங்கம், வெள்ளி, யூரேனியம் போன்றவை உண்டாக, நட்சத்திரங்களில் உள்ள வெப்பத்தைக் காட்டிலும் அதிக வெப்பம் தேவை. அதனால் நட்சத்திரங்களுக்குள் தனிமங்கள் உற்பத்தி, மூடப்பட்ட தொழிற்சாலை போல நின்று விடுகிறது.

### எப்படி அவை உருவாகின?


அந்த முதல் தலைமுறையான சூரியன் தன் வாழ்நாள்கள் முடிந்தபின் அதிபயங்கர மாக வெடித்துச் சிதறும். பிரபஞ்சத்தில் அது மிக அற்புதமான காட்சியாகும். அப்படி வெடிக்கும் போது உண்டாகும் அதிபயங்கர வெப்பத்தில் இரும்பு அணுக்களும் அணுச்சேர்க்கையால் இணைந்து இரும்புக்கு மேல் அணு எண் கொண்ட யூரேனியம், தங்கம், வெள்ளி போன்ற மற்றெல்லா தனிமங் களும் உண்டாகி, நட்சத்திரம் வெடிக் கும்போது, வாயுக்களாக பிரபஞ்சத்தில் தூக்கி எறியப்பட்டன. பல கோடி மைல்கள் பரந்து விரிந்து கிடக்கும், பார்க்க பரவசமூட்டும் இந்த வாயுக்கூட்டங்களை 'நேபுல்லா' என்றழைப்பர்.

பிரசவ மருத்துவமனையில் பெண்கள் அனுமதிக்கப்படும்போது எல்லோருக்கும் தெரியும், குழந்தைகள் பிறக்கப் போகின்றன என்று. அதே போல பிரபஞ்சத்தில் காணும் இந்த நேபுல்லா என்ற வாயுக்கூட்டங்களை காணும் விண்வெளி ஆய்வாளர்களுக்கு அந்த வாயுக்கூட்டத்தில் நட்சத் திரங்கள் பிறக்கப் போகின்றன என்று தெரியும் காரணம், ஈர்ப்பு விசை தன் பணியை அங்கு தொடங்கும். ஹைட்ரஜன் அணுக்கள் ஒன்றை ஒன்று இழுத்து, வெப்பமும் அடர்த்தியும் அதிகமாகி, புதிய அடுத்த தலைமுறை நட்சத்திரம் (நமது சூரியனைப் போல) உருவாகும். நட்சத்திரத்தின் தோற்றம் ஓர் அதி பயங்கர வெடிப்புடனும், அதிர்வுடனும் நடக்கும். புதிதாகத் தோன்றிய நட்சத்திரத்தைச் சுற்றி, தூசுகளும், வாயுக்களும் வெடிப்பினால் வீசப்பட்டு அவைகள் அந்த நட்சத்திரத்தை சுற்ற ஆரம்பிக்கும். அவைகளும் ஈர்ப்பு விசையால் இணைந்து, முதலில் சிறு சிறு பாறைகளாக உருவாகி, அந்தப் பாறைகள் மேலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து, அந்த நட்சத்திரத்தைச் சுற்றிவரும் கோள்களாக உருவாகும். அந்தத் தூசுகளிலும், வாயுக்களிலும் தான் எல்லா தனிமங்களும் உள்ளனவே. அதனால்தான் அந்தக் கோள் களில் ஒன்றான நமது பூமியிலும் அனைத்துத் தனிமங்களும் கிடைக் கின்றன.

சூரியனைச் சுற்றிவரும் கோள்கள் தவிர ஏனைய பாறைகளிலும் இந்தத் தனிமங்கள் இருக்கும். ஏனென்றால் சூரியன் உருவாகும்போது உண்டான கோள்களைப்போல தோன்றியதுதான் அந்த பாறைகளும். நமது சூரிய குடும்பத்தைச் சுற்றிவரும் அந்தப் பாறைகளில் தங்கம் உட்பட பல தனிமங்கள் இருப்பதை தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

சமீபத்தில் ஒரு கோள் கண்டுபிடிக்கப் பட்டது. பூமியை விட இரண்டு மடங்கு பெரிய அந்தக் கோள் முழுவதும் வைரங்கள் நிறைந்து கிடக்கின்றன. ஒருதடவை சென்று வந்தால், உலகத்தின் முதல் கோடீஸ்வரன் ஆகிவிடலாம். சிக்கல் என்னவென்றால் அந்த கோள் நாற்பது ஒளியாண்டுகள் தொலைவில் உள்ளது. எப்படியாவது முயற்சி செய்து அங்கே போய் சேர்ந்து விடலாம் என்று நினைப்போருக்கு ஒரு மோசமான தகவல் என்னவென்றால் அங்கு வெப்பம் சுமார் 4000 டிகிரி வரை உள்ளது என்பதுதான்.

பூமியில் உள்ள சத்துக்களை எடுத்து விளையும் பயிர்களைத் தின்று வளரும் மிருகங்களையும், அந்த மிருகங்களையும் பயிர்களையும் உண்டு வளரும் நாமும் அடிப்படையில் நட்சத்திரத்தில் இருந்து வந்தவர்கள் தான். இனி யாரவாது நம்மைப் பார்த்து நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டால், எந்த வித ஐயமுமின்றி 'நான் நட்சத்திரத்திலிருந்து வருகிறேன்' என்று கூறலாமல்லவா?




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.




வலி.வடக்கு. ஓக.31

ஏழாலை சிவபூதராயர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியதுடன் தொடர்ந்து பன்னிரெண்டு நாள்கள் நடைபெறும்.

தினமும் மாலை 6.45 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் 7.45 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வெளி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (ந-86)

★ ★ ★

கிளிநொச்சி, ஓக.31

கிளிநொச்சி வன்னேரிக்குளம் முருகன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் மாணவர்களுக்கான விவேக வினா விடைப் போட்டி நடைபெறவுள்ளது.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று



யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர் கந்தன் ஆலய இருபதாம் திருவிழாவான இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற் பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் "கருடபுராணம்" என்ற பொருளில் இரா.செல்வவடிவேலின் சிறப்புச் சொற்பொழிவும், அராலி கோகுலம் அறநெறிப் பாடசாலை, நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை, மட்டுவில் வேரக்கேணி கந்தசுவாமி கோயில் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும். விசேட நிகழ்வாக திருமதி புஸ்பமலர் யோகநாதனின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.

இசை அரங்கில் பாடலை செல்வி பரமேஸ்வரி கணேசன் வழங்க, அணிசேர் கலைஞர்களாக வயலின்- கே.குகபரன், மிருதங்கம்- எம்.மாதவன், முகர்சிங்- எஸ்.செந்தூரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

★ ★ ★

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு செல்விகள் சுவாமிநாதசர்மா வாசுகி, சுவாமிநாத சர்மா நந்தினி ஆகியோரின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள் ளது.

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெறும் மகாபாரத தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பாகும். பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா 'அஞ்ஞாத வாசம்' பற்றி இசைப் பேருரை நிகழ்த்துவார்.

★ ★ ★

நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று இரவு 7.15 மணிக்கு சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் 'உபநிடதங்கள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

★ ★ ★

நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டு கழகத்தினர் நடத்தி வரும் தெய்வீக பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு "சிவகதிதானே" என்னும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சொற்பொழிவு இடம்பெறும். (ந-86-7-14)



குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையத்தள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் நுட்பம் தொடர்பான பயிற்சிப் பட்டறை அண்மையில் திருச் சிலுவை முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற் துறைத் தலைவர் கலாநிதி திருமதி அனுஷா சத்தியசீலன் ஆசிரியர்களுக்கான கருத்துரையை வழங்கினார். (ஒ-14-23)

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு வவுனியாவிலிருந்து பாத யாத்திரை நேற்று ஆரம்பம்



வவுனியா, ஓக.31

வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து நேற்று ஆரம்பமாகிய பாத யாத்திரை ஏ 9 வீதி வழியாகச் சென்று அவ்வீதிகளில் உள்ள ஆலயங்களில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி நல்லூர் ஆலயத்தில் இடம்பெறும் தேர்த் திருவிழாவுடன் இணையவுள்ளது.

நாட்டில் அமைதி வேண்டியும் சாந்தி சமாதானம் வேண்டியும் இடம்பெறும் நடை பாத யாத்திரையின் ஆரம்ப நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா தெற்கு பிரதேசசபை உறுப்பினர் கதிர்காமு பரமேஸ்வரன், வவுனியா பிரதேச செயலாளர் எஸ். உதயராசா மற்றும் அடியார்கள் பலரும் கலந்துகொண்டனர்.(வ)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



நவாலி, ஓக.31

மானிப்பாயைச் சேர்ந்த சிங்கராயர் வசீகரன் சமாதான நீதவானாக யாழ். மாவட்ட நீதிவான் ஏ.ஆனந்தராசா முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளராக பணிபுரியும் இவர் யாழ்ப்பாண விஞ்ஞான சங்க ஆயுட்கால உறுப்பினரும், யாழ். பல்லைக்கழக வருகை நிலை விரிவுரையாளரும் ஆவார். (ந-100)

# குறைந்த ஆளணியுடன் செயலாற்றுவதே வினைத்திறன்மிக்க செயற்பாடாகும்

அக்கராயன், ஓக. 31

குறைந்த ஆளணியினருடன் சேவையாற்றுவதே சிறந்த வினைத்திறனான செயற்பாடாகும். வெற்றிடமாகவுள்ள் பதவிகளுக்கு ஆளணியின்ரைப் பெற்றுக்கொள்வதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதென பிரதேச சபைச் செயலாளரிடம் நாம் வினவிய போது அவர் இவ்வாறு பதிலளித்ததாக பூநகரிப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். அவர் மேலும் இது தொடர்பாகத் தெரிவிக்கையில்:

பூநகரிப் பிரதேச சபையில் திட்டமிடல், கணக்குப் பகுதிக்கு 6 ஊழியர்கள் தேவையான விடத்து ஒரு ஊழியர் மட்டுமே கடமை புரிகின்றார். ஆளணியினரை பெற்றுக் கொள்ள என்ன நடவடிக்கை மேற்கொண்டீர்கள் என செயலாளரின் தலைவர் என்ற வகையில் நான் பலமுறை கேட்டபோது குறைந்த ஆளணியினரும் சேவை செய்வதே வினைத்திறனான செயற்பாடாகும். பல இடங்களில் இவ்வாறான வினைத் திறனான செயற்பாடு இடம்பெற்று வருகின்றது.

நீங்களும் அவ்வாறு செயற்படுங்கள் என அவர் தெரிவித்தார். (க)

# தெய்வீக சுகானுபவம் 2 செப்ரெம்பர் 4 - 6ஆம் திகதிகளில்

வலி.வடக்கு, ஓக.31

இந்திய துணைத்தூதரகமும் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சும் இணைந்து நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி இரண்டாவது ஆண்டாக நடத்தும் தெய்வீக சுகானுபவம் இரண்டு நிகழ்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் இந்தியாவில் இருந்து அழைத்துவரப்படும் புகழ்பெற்ற கலைஞர்களான பாடகர் திருமதி சுதா ரகுநாதன், பரதநாட்டியக் கலைஞர் திருமதி லீலா சாம்ஸன் மற்றும் கர்நாடக சங்கீத கலைஞர் ரி. எம். கிருஷ்ணா தலைமையிலான குழுவினர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் குழவினர் இசை நடன நிகழ்வுகளை நடத்துவதுடன் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் வட மாகாண பாடசாலை மாணவர்கள் மற்றும் குரலிசை நடனத் துறைகளில் ஆர்வமுள்ள ஏனையோருக்கும் பயிலரங்கு களை நடத்தவுள்ளார்கள். (ந-86)

# பெண்மையின் பக்கங்கள் நூல் வெளியீட்டு விழா

வலி.வடக்கு, ஓக.31

திருமதி ரவிந்திரா கலாவினால் எழுதப்பட்ட பெண்மையின் பக்கங்கள் என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு உடுவிலில் அமைந்துள்ள இளையதம்பி பாலர் பாடசாலை வளாகத்தில் வண அருட்திரு இ.ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீனும் சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் பிராந்திய இணைப்பாளரும் பெண்ணியல் ஆய்வாளருமான திருமதி ரஜனி சந்திரசேகரமும் கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற கிராம அலுவலர் எஸ். ஆர்.யேசுபாலனும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நூலை செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் வெளியிட்டு வைக்க உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் முதற்பிரதியைப் பெறவுள்ளார்.

நூலின் ஆய்வுரையை உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் எஸ்.பி. சாந்தகுமார் நிகழ்த்தவுள்ளார். (ந-86)

# இறைபக்தி தமிழ் மக்களின் பண்பாட்டின் அடித்தளம்

'யாழ் மொழி' என்பது தனித்துவமானது. நரம்புகள் நகர்ந்தால் மட்டுமே இசை பிறக்கும். மானிடம், மனிதம் நோக்கிய பயணத்தின் உச்சக் கட்டமாக நாம் தெய்வீகத்தை அடைய வேண்டும் என்கின்றது. இந்த இறைபக்தி தான் தமிழ் மக்களின் பண்பாட்டின் அடித்தளமாக இருக்கிறது எனத் திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேரா சிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் தெரிவித்தார்.

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவ காரக் குழு வழங்கிய யாழ். விருதைப் பெற்றுக் கொண்டு ஏற்புரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்தை நாம் காப்பாற்றவேண்டும் என்றால் இறைபக்தி, பற்றில்லாதவனைத் தொழுகின்ற பற்றை நோக்கி நமது சமுதாயம் பயணிக்கவேண்டும். எல்லாப் பெரு மையும் பெறுபவனிலும் பார்க்க கொடுப்பவனுக்கே உரியது. காலங்கள் மாறும். மனங் களும் மாறலாம். உறவுகள் பேணப்பட வேண் டும். உற்ற சமூகத்தில் ஒன்றுபட வேண்டும். அதுதான் சமூகமேம்பாட்டுக்கு உகந்தது என அவர் மேலும் தெரிவித்தார்.(ந-7)

# நல்லூர் திருவிழாவையொட்டி மாநகர சபைக்கு வருமானம் ரூ.ஒரு கோடியே 3 லட்சம்

யாழ்ப்பாணம், ஓக.31

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவையொட்டி யாழ். மாநகர சபை மேற்கொண்ட நடவடிக்கைகளால் இதுவரை யாழ். மாநகர சபைக்கு ரூபா ஒரு கோடியே 3 லட்சம் வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் 7 ஆம் மாதக் கூட்டத்தில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. (வ-7)



கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு புதன்கிழமை நெல்லியடி, ஐயனார் ஆலயத்தில் இரவு பூசைகள் நடைபெற்றன. காலை பெருமாள் வீதியுலா வந்த அருட் காட்சி. (ஒ-422)

# மதுபோதையில் வந்த இளைஞர்களால் நொருங்கியது தொலைபேசி நிலையம்

வவுனியா, ஓக. 31

கூமாங்குளப் பகுதியில் தொலைபேசி நிலையமொன்று இளைஞர் குழுவால் அடித்து நொருக்கப்பட்டது.

கடந்த 27 ஆம் திகதி மாலை வேளையில் மதுபோதையில் அங்கு வந்த இளைஞர் குழுக்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். இதன் விளைவாக தொலைபேசி நிலையத்தின் கண்ணாடிகள் மற்றும் உபகரணங்கள் அடித்து நொருக்கப்பட்டன. இதனால் சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இழப்புக்கள் அந்த நிலையத்தின் உரிமையாளருக்கு ஏற்பட்டது.

இந்தக் கோஷ்டி மோதல் தொடர்பாக அங்கு வந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மதுபோதையில் இருந்த இளைஞர்களை விசாரணைக்கு உட்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# மல்லாவி மத்திய கல்லூரிக்கு உலக தரிசனத்தால் உதவிகள்

அக்கராயன், ஓக. 31

மல்லாவி மத்திய கல்லூரிக்கு உலக தரிசனம் நிறுவனம் கட்டில்கள், மெத்தைகள் என்பவற்றை வழங்கியுள்ளது.

மல்லாவி மத்திய கல்லூரியில் மாணவிகளுக்கென பெண்கள் விடுதியொன்று இயங்கி வருகின்றது. இந்த விடுதிக்கென கட்டில்கள் மற்றும் மெத்தைகளை உலக தரிசன நிறுவனம் வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தேசியப் பாடசாலைகளில் ஒன்றான மல்லாவி மத்திய கல்லூரியில் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்குப் பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-18)

# கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு கழகங்கள்

அக்கராயன், ஓக. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்புக் கழகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினால் பிரதேச செயலக பிரிவு ரீதியாக இந்தக் கழகங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

மேலும் பச்சிலைப்பள்ளியில் 14 சிறுவர் பாதுகாப்புக் கழகங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன. இந்த வகையில் பூநகரியில் 9 சிறுவர் பாதுகாப்பு கழகங்களும் கண்டாவளையில் 8 சிறுவர் பாதுகாப்பு கழகங்களும்செயற்பட ஆரம்பித்துள்ளன.

கிராம மட்டங்களில் சிறுவர்களின் பாதுகாப்பு மகிழ்வான சூழல், போசாக்கு ஆகிய பல விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகளை சிறுவர் பாதுகாப்பு கழகங்கள் முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# வவுனியாவில் பெய்தது மழை; ஓரளவு ஆறுதலுடன் மக்கள்

நெளுக்குளம், ஓக. 31

நீண்ட நாள்களுக்குப் பின்னர் வவுனியாவில் மழை பெய்ததால் மக்கள் தமது தண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கு விமோசனம் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் உள்ளதைக் காண முடிகின்றது.

கடந்த 3 மாதங்களாக மழை பெய்யாததால் வவுனியாவில் கடும் வறட்சி ஏற்பட்டதையடுத்து குளங்கள் வற்றியதால் வீட்டுக் கிணறுகளும் வற்ற ஆரம்பித்தன. இதனால் விவசாயிகள் உட்படப் பலரும் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஓரளவு நல்ல மழை இங்கு பெய்தது. இதனையடுத்து பெரும்போக பயிர்ச்செய்கையின் பொருட்டு வயல்களை உழுவதில் பம்பை மடு, வாரிக்குட்டியூர், நொச்சி மோட்டை, பாவற்குளம், பண்டாரிக்குளம், பூந்தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த ஆண்டு பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட பயிர் அழிவுகளை இந்த முறை ஈடுகட்டி விட வேண்டுமென விவசாயிகள் பலர் ஆலயங்களில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியதையும் காணமுடிந்தது.

மேலும் கடும் வறட்சியினால் மோசமான தண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொண்ட பகுதியைச் சேர்ந்த மக்கள் மழையைக் கண்டதும் ஓரளவு ஆறுதல் அடைந்திருக்கின்றனர். (க-402)



பூநகரி, மண்ணித்தலை புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற ஆவணி மாதத்துக்கான விசேட உற்சவத்தில் கலந்து கொண்ட பக்தர்கள் ஆலய முன்றிலில் காணப்படுகின்றனர். (க-6)

# கஞ்சாப் பாவனை கட்டுப்பாட்டுக்குள்

அக்கராயன், ஓக. 31

கிளிநொச்சி மாவட்டத்தில் கஞ்சாப் பாவனை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியின் பாரதிபுரம், திருநகர் ஆகிய பகுதிகளில் முன்னர் கஞ்சாப் பாவனை அதிகரித்துக் காணப்பட்டதாகவும் தற்போது இது கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கசிப்பு, கஞ்சா ஆகியன தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் தகவல்களை வழங்க வேண்டும் எனவும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரி கேட்டுக் கொண்டார். (க-18)

# மருத்துவமனையில் ஏ.ரி.எம். இயந்திரம் பொருத்துமாறு கோரிக்கை




கிளிநொச்சி,ஓக.31

கிளிநொச்சி பொது மருத்துவமனை வளாகத்தினுள் தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திரத்தை பொருத்துமாறு சம்பந்தப்பட்ட வங்கிகளை வைத்தியசாலைக்கு வருவோர் கேட்டுள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் மருத்துவமனைக்கு வருகின்றனர். வைத்தியச் செலவு உட்பட பல்வேறு தேவைகளுக்கு பணம் பெறுவதாயின் மருத்துவமனையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் உள்ள கிளிநொச்சி கந்தசாமி ஆலய சுற்றாடலில் உள்ள வங்கிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ள நோயாளர்கள் தமது தேவைக்கு பணம் பெறுவதற்குப் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் ஏனைய பொதுமருத்துவமனைகளில் உள்ளவை போன்று கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்திலும் தன்னியக்க பணப் பரிமாற்ற இயந்திரத்தைப் பொருத்துமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-9)

# குடும்ப வன்முறைகளுக்கு கசிப்பு உற்பத்தியே காரணம்

## கிளிநொச்சிக் கூட்டத்தில் தெரிவிப்பு

அக்கராயன், ஓக. 31

கிளிநொச்சியில் இடம்பெறும் தற்கொலைச் சம்பவங்கள், குடும்ப வன்முறைகள் ஆகியவற்றின் பின்னணியில் கசிப்பு உற்பத்தி பெரும்பங்கு வகிப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது. கிளிநொச்சியில் இடம்பெற்ற சிறுவர் தொடர்பான கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் சில இடங்களிலுள்ள வீடுகளுக்குச் சென்ற போது குடும்பத்தின் தாய், தந்தை, பிள்ளைகள் என எல்லோருமே கசிப்பு அருந்திய நிலையில் காணப்பட்டதாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

நீதிமன்றத்தில் அதிக தண்டத்தைச் செலுத்துபவர்கள் மீண்டும் அப்பணத்தைப் பெறுவதற்காக கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தபோது: "கசிப்பை ஒழிப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அதிகளவில் தேவைப்படுவதாகத் தெரிவித்தார். (க-18)

# இடமாற்றம் ரத்தானது

பூநகரி, ஓக. 31

பூநகரி பிரதேச சபையின் சிற்றூழியர்களை இடமாற்றம் செய்வதற்கு செயலாளரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை உடனடியாக ரத்துச் செய்யுமாறு பிரதேச சபைத் தவிசாளர் பணித்துள்ளார்.

சிற்றூழியர்களான பூநகரி உப அலுவலகப் பணியாளர் பொ.கருணாகரன் மற்றும் ஜெயபுரம் உப அலுவலகத்தில் பணிபுரியும் செல்வக்குமார் ஆகியவர்களுக்கே இடமாற்றக் கடிதங் கள் செயலாளரால் வழங்கப்பட்டன.

தேர்தல் காலத்தில் புதிய நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், அலுவலக தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கு வாகனங்களை உபயோகித்தல் என்பன தடை செய்யப்பட்டமைக்கான நியதிகளைச் சுட்டிக்காட்டிய தவிசாளர் இந்த இடமாற்றங்களை ரத்துச் செய்யு மாறு செயலாளரைப் பணித் துள்ளதாகத் தெரிய வருகின்றது. (க)

# போக்குவரத்து நெருக்கடிக்குள் ஆனைவிழுந்தான் மாணவர்கள்



அக்கராயன், ஓக. 31

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.

1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்தக் குடியேற்றத் திட்டத்தில் தற்போது 465 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேலும் இங்கு தரம் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புகளைக் கொண்ட பாடசாலை ஒன்று உள்ளது.

தரம் 6 க்கு மேற்பட்ட மாணவர்கள் அக்கராயன் மகா வித்தியாலயத்துக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

ஆனால் பஸ்சேவை இடம்பெறாததால் ஆனைவிழுந்தான் கிராமத்தின் மையப் பகுதியிலிருக்கும் மாணவர்கள் நடந்து சென்று பிரதான வீதியை அடைந்து பஸ்ஸைப் பிடிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இந்த நிலை நீண்ட காலமாகவே தொடர்கின்றது.

ஆனைவிழுந்தான் கிராமத்துக்கென அரச பஸ் சேவையை நடத்துமாறு நீண்ட காலமாக ஆனைவிழுந்தான் கிராம மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மேலும் 150 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தினமும் அக்கராயனுக்குச் சென்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# யூனியன்குளம் பாலம் புனரமைக்கப்படாமையால் மழை காலத்தில் அவலப்படும் கிராம மக்கள்



கிளிநொச்சி,ஓக.31

கிளிநொச்சி யூனியன்குளம் பாலம் மீள் குடியமர்வின் பின்னரும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் மாரி மழையின் போது பெரும் இடர்களை மக்கள் எதிர்கொள்ள வேண்டி வருமெனத் தெரிய வருகின்றது.

கடந்த மழையின் போது பாலம் முற்றாக உடைந்து சேதமடைந்தது. ஆனால் இது வரை அது புனரமைக்கப்படாததால் போக்குவரத்தை மேற்கொள்வதில் மக்கள் குறிப்பாக மாணவர்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் 500 குடும்பங்கள் வாழ்கின்ற இக் கிராமத்தில் இந்தப் பாலம் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது.

தற்போது இந்தப் பாலத்தில் தற்காலிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் போக்குவரத்துக்கள் இடம்பெற்று வருகின்றன. மழை ஆரம்பிக்குமேயானால் இந்தப் பாலத்தினூடாகப் போக்குவரத்துக்கள் தடைப்படக் கூடிய அவல நிலை காணப்படுகின்றது. (க-18)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்**:நீண்ட நாளாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.



**இடபம்**: வீண் பதற்றம் ஏற்படும். எதிர் பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய தொடர்புகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**மிதுனம்**: பொறுமையை இழப்பீர்கள். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட உண்மையாக வாய்ப்பிருக்கிறது. யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்ய வேண்டாம். சிறுசிறு அவமானங்கள் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.



**கடகம்**: திட்டமிட்ட காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதங்களைத் தவிருங்கள்.



**சிங்கம்**: திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளி வட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**கன்னி**: வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல் வாதிகளின் சந்திப்பு நிகழும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**நாளை**

ஆவணி-01 ஞாயிற்றுக்கிழமை 01.09.2013
திதி: ஏகாதசி பி.ப.12.25 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ.01.57 வரை
சுபநேரம்: 09.05 - 10.35 வரை
இராகுகாலம்: 04.35 - 06.05 வரை



**துலாம்**: மனக்குழப்பம் வந்து நீங்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.



**விருச்சிகம்**: சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். வியாபாரத்தில் யாரையும் நம்பிப் பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.



**தனுசு**: முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.



**மகரம்**: உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போவிர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.



**கும்பம்**: மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள்.



**மீனம்**:பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப்பேசுவீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். அயல் வீட்டாரின் அனபுத்தொல்லைகள் விலகும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். கோபம் நீங்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 5 | 1 | | | | 9 | 6 |
| 7 | | | | | 6 | 1 | | |
| 1 | 6 | | 5 | | | | 2 | |
| | 9 | | 7 | | | 6 | 8 | 3 |
| | | 6 | 9 | | 8 | 2 | | |
| 4 | 1 | 8 | | | 3 | | 5 | |
| | 5 | | | | | | 6 | 8 |
| | | 3 | 2 | | | | | 1 |
| 9 | 8 | | | | 7 | 5 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 2 | 8 | 7 | 4 | 5 | 1 | 9 |
| 1 | 7 | 5 | 2 | 6 | 9 | 4 | 3 | 8 |
| 9 | 8 | 4 | 1 | 3 | 5 | 7 | 2 | 6 |
| 5 | 9 | 7 | 4 | 1 | 2 | 8 | 6 | 3 |
| 2 | 4 | 3 | 6 | 5 | 8 | 1 | 9 | 7 |
| 8 | 6 | 1 | 3 | 9 | 7 | 2 | 5 | 4 |
| 3 | 1 | 8 | 7 | 2 | 6 | 9 | 4 | 5 |
| 7 | 5 | 6 | 9 | 4 | 1 | 3 | 8 | 2 |
| 4 | 2 | 9 | 5 | 8 | 3 | 6 | 7 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரண அறிவித்தல்

# சண்முகம் தணிகாசலம் (சமாதான நீதிவான்)



திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தணிகாசலம் நேற்றுமுன்தினம் (29.08.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான S.K. ஆறுமுகம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தநாயகியின் அன்புக் கணவரும், பாலகுமரன் (U.K), ஞானகுமரன் (U.K), ஞானசக்தி (விரிவுரையாளர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி, கோப்பாய்), செல்வக்குமரன் (U.K), ஆனந்தசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கௌரி (U.K), மேகலா (U.K), கணேசநாதன் (உடற்கல்விப் பணிப்பாளர், யாழ் பல்கலைக்கழகம்), யமுனாநிதி (U.K), ஜெனார்த்தனன் (கணிய அளவையாளர்) ஆகியோரின் மாமனும், முத்துலிங்கத்தின் அன்புச் சகோதரனும், சிவகாமி, தணிகைகுமரன், வைஷ்ணவி, சாம்பவி, விஷாலினி, நிவாஷினி, வர்ஷினி, அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும், இந்திராவதி, காலஞ்சென்றவர்களான துரைரத்தினம், பொன்னையா மற்றும் திருமதி சின்னத்தம்பி-தங்கம்மா, திருமதி. சுப்பிரமணியம்-சரஸ்வதி, பஞ்சரட்ணம், திருமதி வினாயகமூர்த்தி-பரமேஸ்வரி, திருமதி திருநீலகண்டன்-மகேஸ்வரி, காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் ஆகியோரின் மைத்துனரும், அனுசியா-தில்லைநடராசா, அனுராதா-பவளகாந்தன், சுவர்ணியா ஆகியோரின் அன்பு மாமனும், பவளகாந்தன், திருமதி பவளராணி நல்லநாதன், பவளநாதன், பவளகுமார் ஆகியோரின் ஆசையப்பாவும், மயூரன் துளசி, வித்தியா, சுரேஸ்குமார், திருமதி சுபோதினி-சிறிகரன், திருமதி சுகந்தினி-பார்த்தீபன், விஜயகுமார், வினோஜினி, செல்வக்குமார், விக்னகரன், திருமதி விஜிந்தினி-பிரபாகரன், விஜயரதனி, நிரூஜினி, நிஷாந்தினி, நிர்மலரூபன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

**528, பலாலி வீதி,**
**திருநெல்வேலி.**

**தொடர்புக்கு: 021 222 2106,**
**021 222 3822, 077 762 4475.**

(39310) (10,14)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக.31
யாழ். மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸில் 20 தொண்டர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவிருப்பதால் ஆர்வமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
யாழ். போதனா வைத்திய சாலையில் ஏற்கனவே 165 தொண்டர்கள் கடமையில் இருக்கின்றபோதும் தற்போது ஆண் தொண்டர்கள் 10பேருக்கும், பெண் தொண்டர்கள் 10 பேருக்கும் ஆள்ணிப் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது.
யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளரால் இதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் புதிய தொண்டர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆர்வமுடையவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையின் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (ந-14)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக.31
இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானப் பட்டமாணி நிகழ்ச்சித் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
க.பொ.த.உயர்தரத்தில் உயிரியல் மற்றும் கணிதவியல் பிரிவுகளில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள பிராந்திய நிலையத்தில் நேரடியாக விண்ணப்பிக்கலாம். (ந-14)

## ஆவணப்படுத்தலால் எமது சந்ததி பயன்பெறும்

### ஆவணப்பட வெளியீட்டு விழாவில் கலைப் பீடாதிபதி



யாழ்ப்பாணம், ஒக.31
"ஆவணப்படுத்தல்கள் மூலமாக அழிந்து போகும் பல சம்பவங்கள் மற்றும் பாரம்பரிய படைப்புக்களை எதிர்கால சந்ததியினருக்கு கொடுக்க முடியும்" என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்களின் "யாழ்ப் பாணக் கோட்டை சமர்களின் தளம்" ஆவணப்பட வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"மாணவர்கள் யாழ். கோட்டை சம்பந்தமான விடயங்களை ஆவணப்படுத்தியுள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயம். ஊடக மாணவர்களுக்கு சமூகத்துக்கு எது தேவையென அறிந்து அவற்றை வழங்கும் திறன் அவசியம் தேவை. அழிந்து கொண்டிருக்கும், பாதுகாக்கப்பட வேண்டிய பலவற்றையும் ஆவணப்படுத்த வேண்டும். அவற்றினூடாக ஆழ மான பல கருத்துக்களை வெளிக் கொணரவேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.
இந் நிகழ்வில், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-10)

## சிட்டிவேரம் சந்தேகநபர் பிணையில் விடுதலை

தென்மராட்சி, ஒக.31
வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் நேற்று வெள்ளிக் கிழமை சாவகச்சேரி நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஆலய தெற்கு வாசல் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அம்பாளுக்கு அணிவித்திருந்த நகைகளையும், விக்கிரகத்தை அப்புறப்படுத்தி அங்கிருந்த இயந்திரத் தகட்டையும் அபகரித்துச் சென்றிருந்தனர்.
திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் இந்த நபரைக் கைது செய்தனர்.
நீதிமன்றப் பணிப்பின் பேரில் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 70 வயது வயோதிபர் நேற்று விசாரணைக்காக நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
இவரை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. (ந-9)

## நூலக வலுவூட்டல் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஒக.31
கோண்டாவில் பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் விடுமுறைக் காலத்தில் பாடசாலை மாணவர்கள் பயனடையக் கூடியதாக நூலக வலுவூட்டல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.
மாணவர்களிடத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் முகமாக பயன்தரு நூல்களை அறிமுகப்படுத்தி அவர்களை வாசிக்கத் தூண்டும் விதத்தில் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.
இதனை நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட மாணவர்கள் பயன்படுத்திப் பயன்பெறலாம் என்று கோண்டாவில் பொது நூலகத்தின் நூலகர் அறிவித்துள்ளார். (ந-14)

## அடிக்கல் நடும் நிகழ்வு

வவுனியா, ஒக.31
வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் கலந்துகொண்டார்.
வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எம்.மகேந்திரன் மற்றும் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.
சுமார் 50 மில்லியன் ரூபா மாகாண சபையில் நிதியிலிருந்து இந்தக் கட்டடம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## வலிகாமம் வலய அதிபர்களுக்கான கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஒக.31
ஜி.சீ.ஈ சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு "எஸ்" செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்துக்கு வலிகாமம் வலயத்தைச் சேர்ந்த ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்புக்கள் உள்ள பாடசாலை அதிபர்களைக் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா அறிவுறுத்தியுள்ளார்.
மாணவர்களுக்கான கற்றல் கையேடுகள் உள்ளடங்கிய பொதி அன்றைதினம் கையளிக்கப்படவுள்ளதால் அதனை எடுத்துச் செல்வதற்குரிய ஆயத்தத்துடன் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ஒ-14)

## திறந்த பல்கலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக.31
இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள விஞ்ஞான பட்டமாணி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான இலவச கருத்தரங்கு இன்று சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு பிறவுண் வீதியில்அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ந-14)

## ஓய்வுபெற்றார்

யாழ்ப்பாணம், ஒக.31
இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தில் பிரதிப் பரீட்சைகள் ஆணையாளராகக் கடமையாற்றிய ஏ. சொலமன் அண்மையில் தமது 30 வருட அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.
1983 ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டு படிப்படியாக முன்னேறி பிரதிப்பரீட்சைகள் ஆணையாளராகக்கடமையாற்றிய அவர் தற்போது சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (ஒ-9)

A/L Chemistry
*வெளிவந்துவிட்டது.
Physical Chemistry (பூபாலசிங்கம், அன்னையில் கிடைக்கிறது)
*தவணைப் பரீட்சையில் 60% புள்ளிகளுக்கும் குறைவான மாணவர்களை 75% புள்ளிகளுக்கு மேல் உயர்த்தும் செயற்திட்டம் (உங்கள் அனைத்து ஐயங்களையும் தீர்க்கலாம்.)
ஆசிரியர் Mr.Sureshkumar B.Sc (Hons)
நியூ சயன்ஸ்-New Science Center,
Clock Tower Rd, Jaffna.
T.P- 077 555 9028
(39328)
(4.6.3)

மூளாயம்பதி
அருள்மிகு ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயமும் காயத்திரி அம்மன் ஆலயமும்
காயத்திரி அம்மன் ஆலயத்தின் கட்டட வளர்ச்சி நிதிக்காக சுடர்ஒளி பத்திரிகையின் அனுசரணையுடன் நடத்தும்
மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி
இடம்:
பொன்னாலை மான் பாய்ந்த வெளித்திடல்
காலம்:
நாளை(01.09.2013) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 01.00 மணி
ஊடக அனுசரணை - சுடர்ஒளி
(C/1167)(3.5.6)

DSI யின்
Yoga Mats
யோகா பயிற்சியில் ஈடுபடும்
ஆர்வலர்களுக்கு மிகவும் உகந்த
யோகா மற்ஸ்
தொடர்புகளுக்கு:
தயாஸ்ரீ விநியோகஸ்தர்கள்
220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 1378 (39322)(5.3.6)

குளிரூட்டப்பட்ட அறைகள்/குளிரூட்டும் இயந்திரங்கள்
AMMONIA (NH,) HFC REFRIGERANTS
BLAST FREEZERS, ICE MAKING PLANTS,
ICE - CREAM FACTORIES,
BREWERIES, SOFT DRINK PLANTS, SLAUGHTER HOUSES,
CHILLED & FROZON STORAGES, ICE RINKS,
FISHING TRAWLERS, SEAFOOD PROCESSING PLANTS ETC.

RIVACOLD REFRIGERATION EQUIPMENT
MAYEKAWA MYCOM
SAI COND Insulated Panels
தொடர்புகளுக்கு
(Chamika) : 0773 000 472
(Ishanka) : 0773 018 236
KASE ENGINEERING
K.S. TRADING (PVT) LTD
494/1, Nawala Road, Rajagiriya.
Tel : 011 2887134, 2887135,4374624 Fax : 011 4547615
Web :www.kstrading.lk E mail : kstrade@slt.lk
(C/11805) (7.6.3)

## பாங்கொக் பயணமாகிறார் மட்டு.அரச அதிபர்

தாய்லாந்தின் பங்கொக் நகரில் எதிர் வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 6ஆம் திகதி வரை நடை பெறும் இடர்களிலிருந்து மீளெழும்பலுக்கான தலைமைத்துவ பயிற்சிப் பட்டறையில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார்.
பூகோள இடர்களிலிருந்து மீளெழும்பலுக்கான தலை மைத்துவக் கற்கைநெறித் திட்டத்தின் இரண்டாவது பயிற்சிப் பட்டறையே பாங்கொக்கில் நடைபெறவுள்ளது.
இதன் முதல் கட்டம் கடந்த ஜூன் 3ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை கண்டியில் நடைபெற்றிருந்தது.
ஆசிய இடர் முன்னாயத்த நிறுவனம், அனர்த்த முகா மைத்துவ அமைச்சு, பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானக் பட்ட மேற் கற்கைகள் பிரிவு மற்றும் அமெரிக்க அனர்த்த மீளெழும் பலுக்கான தலைமைத்துவ கற்கைகள் நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தினை நடைமுறைப் படுத்துகின்றன.

**பூகோள இடர்களிலிருந்து மீளெழும்பலுக்கான தலைமைத்துவக் கற்கைநெறித் திட்டத்தின் இரண் டாவது பயிற்சிப் பட்டறையே பாங்கொக்கில் நடைபெறவுள்ளது.**

# மீனவர் நுண்கடன் திட்டம் மட்டக்களப்பில் அறிமுகம்



மட்டக்களப்பு, ஓக.31
மீனவர்களின் வாழ்வாதாரத்தை நோக்காகக்கொண்டு முதன் முறையாக மீனவர் நுண் கடன் திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பான நிகழ்வு மட்டக்களப்பு கடல்தொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நடைபெற்றது.
வடக்கு கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை நோக்காகக் கொண்டு மீன்பிடித் துறை அமைச்சு மற்றும் தேசிய மீனவர் சம்மேளனம் ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை மேற் கொண்டு வருகின்றன.
மன்னார், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் மீனவர் சம்மேளனம் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட சுமார் 50பேர் வரை இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.
மட்டக்களப்பு மாவட்ட கடல்தொழில் திணைக்கள உதவி பணிப்பாளர் ஜோர்ஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ் வில் தேசிய நுண்கடன் திட் ஆலோசகர் தயானந்த, மீனவர் மகா சம்மேளன தலைவர் திசாநா யக்க, சர்வதேச மீனவர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
மாவட்ட மட்ட மீனவர் அமைப்பு மற்றும் கிராமிய மீனவர் அமைப்புகளுக்கு இந்த நுண்கடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.
இந்த அறிமுக நிகழ்வில் நுண் கடன் திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டவர்கள் கலந்துகொண்டு நுண்கடன் மூலம் பெற்றுக் கொள்ளத்தக்க நன்மைகள் தொடர்பில் விளக்கமளித்தனர்.
குறித்த நுண்கடன் மூலம் மீனவர்கள் தங்களது மீன்பிடியை அதிகரித்து அதன்மூலம் பிற உற்பத்திகளை மேற்கொண்டு வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளமுடியும் என உதவி பணிப்பாளர் ஜோர்ஜ் தெரிவித்தார்.

## 14ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
11.09.1935
விண்ணில்
05.09.1999
(திதி: 31.08.2013)
அமரர் **வல்லிபுரம் அப்பாத்துரை**
இளைப்பாறிய ஆசிரியர், வீமன்காமம் ம. வித்தியாலயம்

*அப்பா என்றழைத்த எம் தெய்வமே*
*ஆண்டுகள் பதினான்கு ஓடி மறைந்தாலும்*
*ஆறிடுமோ எம் துயரம்*
*அன்பையும் அறிவையும் ஊட்டி வளர்த்தீர்களே!*
*பாதி வழியில் எம்மை விட்டுப் பறந்துவிட்டீர்களே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*மருதடியான் பாதம் பணிகின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அம்பலவாணர் வீதி,
உடுவில். (39200)(4.3.6)
மனைவி,மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
04 - 08 - 1980
இறப்பு
31 - 08 - 2009
அமரர் **அனிஸ்லி**

அன்பு மகளே நான்கு ஆண்டுகள் ஆனதம்மா
பல நூறாண்டு ஆனாலும் நாம் வாழும் வரை
நினைவாய் நிழலாய் என்றும் எம்முள் வாழும்
எங்கள் உயிர் நீயம்மா மலர்ந்த பூ முகம் மகிழ்ச்சி பொங்கி
நிற்கும் உன் புன் சிரிப்பும் பாசத்தை விதைத்து பலநூறு ஆசை காட்டி
வாழ்ந்த நீ பாதியிலே பேசாமல் விரைந்து போன மாய மென்ன
அன்பு மகளே எங்கள் ஆசை மகளே பல ஆண்டு
ஆனாலும் உதிரும் கண்ணீரோடு கலையிழந்து
நிலையிழந்து பாவிகளாய் நிற்கின்றோம் அம்மா
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அப்பா- நடராசா
ஊரிகாவற்றுறை. (39297) (4.6.3)
என்றும் ஏங்கி நிற்கும்
அப்பா, அம்மா, மகன், சகோதர
சகோதரிகள், உற்றார், உறவினர்

## ரயில் தண்டவாளங்களை குறுக்கறுத்து செல்லும் வீதிகளை புனரமைக்கவும்

கிளிநொச்சி, ஓக.31
கிளிநொச்சி நகரில் ரயில் தண்டவாளங்களை குறுக்கறுத்து வீதிகளில் பயணம் மேற்கொள்ளத்தக்க வகையில் புனரமைத்து வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி வரையான ரயில் வீதி புனரமைக்கப்பட்ட போதிலும் இதனைக் குறுக்கறுத்துச் செல்லும் வீதிகளின் பகுதிகளில் கற்கள் போடப்பட்டு உயரமாகக் காணப்படுவதால் இவற்றினூடாகப் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.
மேலும் சில இடங்களில் இந்த வீதிகள் சேதமடைந்தும் கற்குவியல்களால் நிரம்பிய நிலையிலும் காணப்படுகின்றன.
இதனால் இந்த வீதிகளைப் பயன்படுத்துவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே இந்த வீதிகளை உரிய வகையில் புனரமைத்து வழங்குமாறு பாதிக்கப்பட்டு வருபவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
(க-6)

## போஷாக்குக் குறைந்த தாய்மார் எண்ணிக்கை வேலணையில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.31
வேலணை பிரதேச செயலகப் பிரிவில் போசாக்கு உணவு வழங்கப்படும் தாய்மார்களின் எண்ணிக்கை மேலும் 55 பேரால் அதிகரிக்கப் பட்டுள்ளது. தற்போது 70 பேருக்கு இது வழங்கப்பட்டு வருகிறது.
சமூர்த்தி தாய்மார்களின் எண்ணிக்கை இதனால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் தெரிவித்தார்.
(வ-7)

## துயர் பகிர்கின்றோம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்
திருமதி ஞானசக்தி கணேசநாதன்
அவர்களின் பாசமிகு தந்தை
**சண்முகம் தணிகாசலம்** (J.P)
அவர்கள் கடந்த 29.08.2013 அன்று இறைவனடி எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். உறவுகளுடன் நாமும் இணைந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(39321) (7.6.3) கல்லூரிச் சமூகம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி சாந்தா ஆறுமுகம் (ஆஸ்திரேலியா)



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாந்தா ஆறுமுகம் 26.08.2013 ஆஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்தார்.
அன்னார் சிட்னியில் வசிக்கும் ஆறுமுகம் (முன்னாள் பதில் அதிபர் வசாவிளான் ம.ம.வி) - புவனேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், ராதா- சந்திரசிங் (லண்டன்), சிட்னியைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தன்- ஜெயலக்ஷ்மி, வசந்தா-ஜெயலிங்கம், மனோகரன்-சித்திரா, யசோதா-அருள்நாதன் ஆகியோரின் அன்புத் தங்கையுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.09.2013 White Lady funeral place இல் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நூலக வீதி, உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.
36, Dudley Str.,Rydalmarc Aus.
T.P : 0061 296 846 615
021 300 7781
077 598 3189 } உடுவில்

தகவல்:
திருமதி இரத்னேஸ்வரி பாலசிங்கம்
(சிறிய தாயார்)

### முத்தையா மன்னவராயன் [சின்னத்தம்பி]



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்தையா மன்னவராயன் 29.08.2013 வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா- வெள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியம்மாள், செல்லத்துரை (Newzealand), தங்கரட்ணம், பாலசுப்பிரமணியம் (Malaysia), காலஞ்சென்ற ரட்ணம்மா, நடராசா, கதிர்காமநாதன் (பெரியதம்பி), பாலசுப்பிரமணியம், மகேஸ்வரன் (Holland) ஆகியோரின் சகோதரனும், உஷா-நித்தியராஜ் (Canada), டயானா-நகுலேஸ்வரன் (Newzealand), செரீனா- சிறிஸ்கந்தராஜா (Canada), ஹேமா-நந்தா (Malaysia) ஆகியோரின் மாமனாருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.08.2013) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று (பி.ப 2.00) மணியளவில் பூதவுடல் புன்னாலைக்கட்டுவன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
சகோதரர்கள்.

## வேலணை பிரதேச சபை
## முக்கிய அறிவித்தல்

### சாட்டி புனித சித்தாத்திரை மாதா ஆலய பெருவிழா - 2013

வேலணை சாட்டி புனித சித்தாத்திரை மாதா ஆலய பெருவிழா 05.09.2013 - 14.09.2013 வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. இக்காலப் பகுதியில் ஆலயத்திற்கு வருகைதரும் யாத்திரிகர்கள் மற்றும் தற்காலிக வியாபாரம் செய்பவர்கள் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

* துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஏனைய வாகனங்களை வாகனத் தரிப்பிடங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தரித்து அவற்றுக்கான பாதுகாப்பு கட்டணங்களைச் செலுத்தி பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளவும்.
* தற்காலிக வியாபார நிலையங்கள் எமது சபையால் 06.09.2013ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு கேள்வி மூலம் வழங்கப்படும். கேள்வி கோருபவர்கள் கோரப்படும் கேள்வித் தொகை முழுவதையும் உடன் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ளவும்.
* உணவுப் பண்டங்கள் கையாளும் வியாபாரிகள் தங்களது உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்கனவே பெற்ற நிரந்தர வியாபார அனுமதிப் பத்திரத்தின் உறுதிப்படுத்திய பிரதி சமர்ப்பித்தல் வேண்டும்.
* சுகாதார வைத்திய அதிகாரியினால் உணவு கையாள்பவர்களுக்கு வழங்கப்பட்ட ஒவ்வொருவரினதும் சான்றிதழ் பிரதி உறுதிப்படுத்தப்பட்டு தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* வியாபார நிலைய உரிமையாளர், ஊழியர்கள் ஒவ்வொருவரினதும் தேசிய அடையாள அட்டையின் பிரதி உறுதிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* தற்காலிக உற்சவ கால வியாபார அனுமதி பெறுநர்கள் 03.09.2013 காலை 10.00 மணிக்கு வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.
* மேலும் உற்சவ காலத்தில் பொது ஒழுங்கு விதிகளையும், சுகாதாரத்தையும் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

சி.சிவராசா
தவிசாளர், வேலணை பிரதேச சபை

30.08.2013

(C/11674)(7.6.3)

# நவிப்பிள்ளையின் வருகையால் தமிழர்களுக்கு நம்பிக்கை

## நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.31

நவநீதம்பிள்ளையின் வருகை தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை தீர்விலே ஒரு விடிவு ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபாகணேசன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்:-

அரசு நவநீதம்பிள்ளையின் வருகைக்கு அனுமதியளித்ததன் மூலமும் அவரைச் சுதந்திரமாக சகல தரப்பினரையும் சந்திப்பதற்கு இடமளித்ததன் மூலமும் தான் குற்றமிழைக்கவில்லை என்ற செய்தியை சர்வதேசத்திற்கு காட்டக்கூடியதாக உள்ளது.

இருப்பினும் உள்நாட்டில் தமிழ் சிங்கள அரசியல் தலைமைகள் தங்களது அரசியல் இருப்புக்காக தீவிரவாதக் கருத்துக்களை வெளியிடுவதன் மூலமாக இனங்களுக் கிடையிலான முரண்பாடுகளை ஏற்படுத்தி விடக்கூடாது. போர் முடிவுற்று நான்கு ஆண்டுகளாகியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. இருதரப்பினரும்தமது தன்மானப் பிரச்சினையின் காரணமாக தீர்வை இழுத்தடிக்கின்றனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்கு இனப்பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டிய பாரிய கடப்பாடு உள்ளது.

இருப்பினும் அரசு அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். ஆனால் நவநீதம்பிள்ளையின் வருகைக்கு அனுமதி கொடுத்ததன் மூலமாகவும் சுதந்திரமாக அவருக்கு எங்கும் செல்வதற்கு அனுமதியளித்ததன் மூலமாகவும் சர்வதேச அரங்கில் நற்பெயரிரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது.

நவிந்தம்பிள்ளையின் வருகையை சிங்கள மக்கள் எந்தக் கோணத்தில் பார்க்கிறார்கள் என்பதை விட சிங்கள தீவிரவாத பௌத்த அமைப்புகள் கடுமையாக விமர்சிக்கின்றனர். நவிப்பிள்ளைக்கு புலிசாயம் பூசி ஆர்ப்பாட்டங்கள் செய்கின்றனர். இதன் மூலமாக அரசுக்கு ஏற்படும் அபகீர்த்தியை இவர்கள் கணக்கில் எடுக்கவில்லை.

இவர்களது இத்தகைய செயல்களால் எமது நாட்டிற்கு களங்கம் ஏற்படுகின்றது. இவர்களது செயற்பாட்டைத் தடுத்து சிங்கள பௌத்த வாக்குகளை இழக்க அரசு தயாராக இல்லை. இந்த நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும்.

இன்று வந்திருக்கும் நவநீதம் பிள்ளை நாளை சென்று விடுவார். ஆனால் 75வீதம் பெரும்பான்மையான சிங்கள மக்கள் மத்தியில் வாழும் தமிழர்களாகிய நாங்கள் அவர்களிடம் மண்டியிடத் தேவையில்லை. ஆனால் இணைந்து வாழ வேண்டிய கட்டாயம் இருக்கின்றது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.- என்றார். (எ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## இராமநாதன் நுண்கலைக் கழகம்

நுண்கலைமாணி (சங்கீதம், நடனம், சித்திரமும் வடிவமைப்பும்)
கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி – 2012/2013
தகுதிகாண் (செய்முறை) பரீட்சை

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண் (செய்முறை) பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கைநெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதி | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை செய்முறை | 09.09.2013 - திங்கள்<br>10.09.2013 - செவ்வாய்<br>11.09.2013 - புதன்<br>12.09.2013 - வியாழன்<br>13.09.2013 - வெள்ளி<br>16.09.2011 - திங்கள் | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| நடனம் செய்முறை | 09.09.2013 - திங்கள்<br>10.09.2013 - செவ்வாய்<br>11.09.2013 - புதன்<br>12.09.2013 - வியாழன்<br>13.09.2013 - வெள்ளி<br>16.09.2011 - திங்கள் | நடேசர் அரங்கு, இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| சித்திரமும் வடிவமைப்பும் செய்முறை | 14.09.2013 - சனி<br>15.09.2013 - ஞாயிறு<br>21.09.2013 - சனி<br>22.09.2013 - ஞாயிறு | சித்திரமும் வடிவமைப்பும் அலகு, இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப. 9.00 - பி.ப. 4.00 மணி |
| சித்திரமும் வடிவமைப்பும் எழுத்துப்பரீட்சை | 19.09.2013 - வியாழன் | 1. இராமநாதன் மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி<br>2. புதிய கலைப்பீட மண்டபம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | மு.ப. 10.00 மணி |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை அனுப்பப்பட்டவர்களது பெயர் விவரத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையிலும், www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**குறிப்பு:**
2012 க.பொத. உ/த. பரீட்சையில் இசை அல்லது நடனம் அல்லது சித்திரம் ஆகிய பாடங்களில் "C" தரத்திற்கு குறைவான பெறுபேறு பெற்றவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான ஆகக்குறைந்த தகைமை "No" எனக்கொண்டிருப்பவர்களும் தகுதிகாண் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு **தகுதியற்றவர்கள்** என்பதை கருத்திற்கொள்ளவும்.

**சித்திரமும் வடிவமைப்பும் பரீட்சைக்கு கொண்டு வரவேண்டிய பொருள்கள்**

| | | |
|---|---|---|
| *Drawing Board (Minimum size 18" x 12")* | *Ruler* | *Poster Colour* |
| *Drawing Pins* | *Sharpener* | *Water Colour* |
| *Pallet (For Water Colour)* | *Eraser* | *Water Container* |
| *Pencil (6B, HB)* | *Brushes* | |

அனுமதி அட்டைகள் தபாலில் கிடைக்காத விண்ணப்பதாரிகள் 06.09.2013ஆம் திகதிக்கு பின் உதவிப்பதிவாளர்/அனுமதிகள் உடன் 0212226714 என்ற தொலைபேசி எண் வழியாக தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
30.08.2013

(C/11673)(6.3)

## தேவை

சாவகச்சேரியில் இயங்கும் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு தரமான ஊர்க்கோழி முட்டைகள் மொத்தமாகவோ சில்லறையாகவோ உடன் தேவை. சந்தை விலையிலும் கூடுதல் விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு: 021 720 0616, 071 867 6424

(C/11806) (7.6.3)

## கடை வாடகைக்கு

339, அரசடி வீதி, நல்லூரில் பெரிய கடை ஒன்று வாடகைக்கு உண்டு

தொடர்பு:
077 968 7772
077 593 8956

(39353) (10.16.14)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 ஆம் ஆண்டு பிறந்த பரணி 3ஆம் பாதம் (கிரக பாவம் 49) அரச சேவையில் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. தொழில்புரிபவர் விரும்பத்தக்கது.

தொடர்பு:
071 1576097, 077 4345654

(39352) (10.16.14)

## Annai Nagaa Food City

### பதவி வெற்றிடம்

விற்பனை உதவியாளர்கள், அடிப்படைச் சம்பளம் 9000/= சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

நேரம்: 9 a.m - 1 pm
இடம்: 175, K.K.S. Road, Jaffna.
காலம்: 31.08.2013 - 05.09.2013

மேலதிக விவரங்களுக்கு:
077 477 3481 / 021 739 0191

(சி/11677) (10.16.14)

## பிற்போடப்பட்டுள்ளது

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் எதிர் வரும் 01.09.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற இருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட் டுள்ளது.
புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

சி.பரமேஸ்வரன்
(செயலாளர்)

(சி/11682)
(23-16-14)

## பணிநிலை வெற்றிடம்

01) தாதியர் : இருபாலாரும் - அனுபவமுள்ளவர்கள்
02) மருந்தாளர் : இருபாலாரும் - அனுபவம், பதிவுள்ளவர்கள்
03) காசாளர் : இருபாலாரும் - இரவு -பகல் சேவை செய்யக்கூடியவர்கள்
04) சுத்திகரிப்பாளர் : இருபாலாரும்
05) பாதுகாப்பு உத்தியோகத்தர் : ஆண்

இடம் : யாழ் வைத்தியசாலை
315, பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்திக்கு அருகில்.
திருநெல்வேலி.

காலம் : 02.09.2013 (திங்கள்)
முற்பகல் 10 மணி

தொடர்பு: 021 222 3533
021 222 1011

(C/11681)(10.6)


## விரல் அடையாள முறை கடவுச்சீட்டுக்கு அறிமுகம்




**பல நாடுகளில் விரல் அடையாளத்துடன் கூடிய கடவுச் சீட்டே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

கொழும்பு, ஓக.31
கடவுச் சீட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் கடவுச் சீட்டுக்காக விரல் அடையாள முறையை அறிமுகப்படுத்த அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
பல நாடுகளில் விரல் அடையாளத்துடன் கூடிய கடவுச் சீட்டே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் 679.7 மில்லியன் ரூபா செலவில் இந்த புதிய முறை முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு அவுஸ்திரேலிய அரசு 629.7 மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது. குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினூடாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும். (எ)

## நீர் மின் உற்பத்திக்கு லாபம் கிடைக்கிறது



கொழும்பு, ஓக.31
இலங்கை மின்சார சபைக்கு நீர்மின் உற்பத்தி மூலம் பெறப்படும் ஓர் அலகு மின்சாரத்திற்கு 10 ரூபா மேலதிக லாபம் கிடைப்பதாக தேசிய மின்சார நுகர்வோர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் பந்துல விஜேசேகர தெரிவித்ததாவது:-
மேலதிக இலாபம் காரணமாக 30 பில்லியன் ரூபா லாபமாக ஈட்டப்பட்டுள்ளது.
எனவே, அண்மையில் அதிகரிக்கப்பட்ட மின்சார கட்டணத்தை குறைக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.
இந்த முழு வருடத்திற்கும், நீர் மின் உற்பத்தி மூலம் 3 ஆயிரத்து 600 கெகாவோல்ட் மின்சாரம் எதிர்பார்க்கப்பட்டது. தற்போது அந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது.
எமக்கு கிடைக்கப்பெற்ற நீர் வளம் காரணமாக இதனை அடைய முடிந்துள்ளது. இந்த நிலையில், இனி வரும் காலப் பகுதியில் நீர் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொறு அலகுக்குக்கும் மேலதிகமாக 10 ரூபா லாபமாக கிடைக்க கூடியதாக இருக்கும்.
இதனடிப்படையில் மின்சாரக் கட்டணத்தை குறைக்க கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# ஆவணம் எரிக்கப்பட்டமைக்கு விசாரணை நடத்த வேண்டும்

### கொழும்பு மாநகர சபையில் சமர்ப்பித்த பிரேரணை நிறைவேறியது



கொழும்பு, ஓக.31
கொழும்பு மாநகர சபையில் இருந்த ஆவணங்கள் பல எரிக்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனக்கோரி கொழும்பு மாநகர சபையின் எதிரணி உறுப்பினர் எரிக் சந்திரசேனவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
கொழும்பு மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் மாநகர முதல்வர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நடைபெற்றது.
மாநகர சபைச் சட்டத்தின்படி நிகழ்ச்சி நிரல் தொடர்பான அறிக்கை ஏற்கனவே சபை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில் அந்நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப் பினர் எரிக் சந்திரசேனவினால் விசேட பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது.
இதற்கிணங்க, கடந்த ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான அத்தியாவசிய ஆவணக் கோவைகள் பல, பொரளை பொது மயானத்தில் தீ வைத்து அழிக்கப்பட்டன.
இச்சம்பவம் அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் அழிக்கும் பாரிய குற்றம் என்பதனால் அதனை பொலிஸ் மா அதிபர் சுயாதீன விசாரணைக்குட்படுத்த வேண்டும். மற்றும் முக்கிய ஆவணங்கள் எரித்தல் சம்பந்தமாக மாநகர முதல் வரினால் நியமிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு விசாரணை, உள்ளூராட்சி ஆணையாளரினால் நடத்தப்படும் விசாரணைகள் என்பன எவ்வித அழுத்தங்களும் இல்லாது சுயாதீன விசாரணைகளாக இருக்க வேண்டும் என்பதனால் மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர் உட்பட அதிகாரிகள் அனைவரும் இந்த விசாரணைகளுக்காக தேவையான கடித ஆவணங்களைப் பெற்றுக் கொடுத்து முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமென்ற இரு கோரிக்கைகளையும் முன் வைத்து பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தார்.
மேற்படி பிரேரணையை சமர்ப்பப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு குழுவினர் கோஷமிட்டு அப்பிரேரணையை சபையின் விவாதத்துக்கு விடாமல் தடுக்க முற்பட்டனர்.
சபையின் ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் மற்றும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து மேற்படி பிரேரணையை சபைஅமர்வில் எடுக்க வேண்டுமென கூறியதற்கிணங்க மாநகர் முதல்வர் தலைமையில் மேற்படி விடயத்தை வாக்கெடுப்புக்கு உட்படுத்தியதையடுத்து பெரும்பான்மை வாக்குகளால் அப்பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (எ)

# எதனையும் செய்ய தயங்காத அரசு



கொழும்பு.ஓக.31
இலங்கை பல்தேசிய நிறுவனங்களின் விபச்சாரியாக மாறியுள்ளதாகவும் தற்போதைய அரசு தமது பைகளுக்கு பணம் கிடைக்கும் என்றால் எதனையும் செய்ய தயங்காத அரசு எனவும் அரசின் முக்கிய கூட்டணி கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.
கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வெலிவேரிய ரத்துபஸ்வல சம்பவம் முதல் அண்மைக் காலமாக நாட்டில் ஏற்பட்ட சம்பவங்களின்போது, அரசாங்கம் பல்தேசிய நிறுவனங்களுக்கு ஆதரவாகவே செயற்பட்டது.
ஜாதிக ஹெல உறுமய அரசில் இணைந்திருந்தாலும் அரசு பல் தேசிய நிறுவனங்கள் கூறுவதையே அதிகமாக கேட்டு செவிமடுத்து வந்தது. அரசுக்குள் கசினோ வர்த்தககளே பலம்பெற்றுள்ளனர்.
வடமத்திய மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சிறுநீரக நோய் தொடர்பாக ஆராய முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. அந்த நோயினால் ஏற்படும் இறப்புக்கள் கொண்டு வரப்படவில்லை.
விவசாய நிறுவனங்கள் இன்னும் விஷக் கிருமிநாசினிகளை விற்பனை செய்து வருகின்றன. இவற்றுக்கு அரசு பதிலளிக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (எ)

## பயிற்சி பெறாத ஆசிரியர்கள் 5833 பேர்


கொழும்பு, ஓக.31
இலங்கையின் பாடசாலைகள் கட்டமைப்பில் பணியாற்றும் ஆசிரியர்களில் 5883 பேர் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
நாட்டில் பயிற்சி பெற்று வரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 2597 பேராகும். நாட்டிலுள்ள பாடசாலைகளில் 1,28,152 பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.
கிராமப் புறங்களில் உள்ள பாடசாலைகளிலேயே இவ்வாறு பயிற்சி பெறாத ஆசிரியர்கள் கற்பித்து வருகின்றனர் என்றும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-22)

## பொலன்னறுவையில் சுடப்பட்ட மூன்று மான்கள்



கொழும்பு.ஓக.31
பொலன்னறுவை நகரில் உலவிவந்த மான் கூட்டமொன்றின் மீது இனந்தெரியாத விஷமிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று மான்கள் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
கொலை செய்யப்பட்ட மான்களின் உடல்கள் பொலன்னறுவை பிரதேசத்தில் வீதி அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.
இறைச்சிக்காக இந்த மான்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்வும் பொலிஸாரின் சோதனைக்கு பயந்து வீதியில் வீசி எறியப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. (எ)

## ஒக்ரோபர் மாதம் முதல் தந்திச்சேவை நிறுத்தம்



கொழும்பு, ஓக.31
தந்திச்சேவை (டெலிகிராம் சேவிஸ்) ஒக்டோபர் மாத இறுதியுடன் நிறுத்தப்படவுள்ளதாக தொலைத் தொடர்புகள் அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.
இலங்கையில் தொழில் நுட்ப உபயோகம் வளர்ச்சியடைந்துள்ளதையடுத்து தந்திச் சேவையின் உபயோகம் வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் இதனால் அரசுக்கு பெரிய செலவினை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.
தனி நபர் கணினி பாவனை நாட்டில் அதிகரித்து வருவதையடுத்து மின்னஞ்சல் வழியாகவே தகவல்கள் பெருமளவில் பரிமாற்றப்பட்டு வருவதுடன் தந்திச் சேவையை நாடுவோரின் எண்ணிக்கை குறைவடைந்திருப்பதனாலேயே அதனை முழுமையாக நிறுத்திவிடத் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

## தேர்தலில் அரச சொத்தை பயன்படுத்துவது உச்சம்

### கண்காணிப்பு வலையமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.31
வடமேல், மத்திய மற்றும் வடக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்களுடன் சம்பந்தப்பட்டுள்ள அரச தரப்பு வேட்பாளர்களின் வெற்றி தொடர்பாக அரச சொத்துக்கள், அரச அதிகார பலத்தைப் பயன்படுத்திக் கொள்வது நாளுக்கு நாள் உச்சம் பெற்று வருகின்றது என்று மனித உரிமைகள் தொடர்பான புத்திஜீவிகள் ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.
இதனால் சுதந்திரமான மற்றும் ஜனநாயக ரீதியிலான தேர்தலொன்றை நடத்துவதற்கு அமைந்துள்ள வாய்ப்புக்கள் படிப்படியாக அருகி வருகின்றன என்று அந்தத் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
15 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள், சட்டத்தை மீறிய தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகள், சட்டத்துக்கு உட்பட்ட தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகளுக்குத் தடைகளை ஏற்படுத்திய சம்பவங்கள், அரச அதிகார பலம் தேர்தல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட சம்பவங்கள், மக்கள் கருத்துக்கு முறையற்ற விதத்திலான அழுத்தங்கள் விடுக்கப்பட்டுள்ள சம்பவங்கள், பொலிஸாரின் பக்கச் சார்பான நடத்தைகள் மற்றும் வேறும் முறைப் பாடுகள் என்றவாறு பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்று அந்தத் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு தெரிவித்துள்ளது. (ச-22)

# பெருந்தோட்ட மக்களின் உரிமைகள் இழக்கப்படக்கூடாது

## மத்திய மாகாண சுயேச்சை உறுப்பினர்

"மலையகத் தலைவர்களின் ஒற்று மையின்மையால் பெருந் தோட்ட மக்களின் உரிமைகள் இழக்கப்படக் கூடாது" - என அகில இலங்கை மக்கள் சங் கத் தலைவர் வீரையா சுப்பிர மணி விசனம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது :

"அண்மையில் திம்புல்ல பத்த னையில் இடம்பெற்ற சம்ப வத்திற்கு அகில இலங்கை மக்கள் சங்கத்தின் சார்பிலும், ஒட்டுமொத்த தமிழர்களின் சார்பிலும் எனது விசனத்தைத் தெரி விக்கின்றேன்.



இம்முறை மத்திய மாகாண சபைத் தேர்தலில் சுயேச்சை குழு இல. 9இல் முதன்மைவேட் பாளராகப் போட்டியிடும் நான், மலையகத் தலைவர்கள் இத் தேர்தலை கவனத்திற் கொள்ள வேண்டுமென நினைக் கிறேன்.

விசேடமாக பத்தனை சம்பவத் திற்குப் பதில் சொல்லவேண் டிய இரு தலை வர்களும், மலையக மக்களின் எதிர் கால உரிமைகளை வென்றெடுப்ப தற்கு அரச சின்னமான வெற்றி லையில் போட் டியிடுவதால் இவ்வாறான சர்ச்சைகள் ஏற் படும்போது அச்சின்னத்தில் போட்டி யிடும் பெரும்பான்மை இனத்தவர் களுக்குக் கூடிய விரைவில் மலைய கத்தைத் தாரைவார்க்கும் நிலை ஏற் படும். இதைக் கவனத்தில் கொண்டு இத்தேர்தலில் செயற் படுவது காலத்தின் தேவை யாகும்.

எனது தனித்துவத்தை நிலை நாட்டி அர சுடன் பேரம் பேசும் சக்தியை உருவாக்க மத்திய மாகா ணசபைத் தேர்தலை ஒரு கரு வியாகப் பயன்படுத்துவோம்.

அதற்கு மலையக மக்களின் முழுமையான ஆதரவு கிடைக் கும் என நம்புகின்றேன்" - எனத் தெரிவித்தார். (ஐ-ச)

# நெடுந்தீவு செல்வதை விடுத்து யாழில் பிரசாரம் செய்யலாமே

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் சுசில்

யாழ்ப்பாணம், ஓக.31

வெறும் ஆயிரத்து 800 வாக்குகள் உள்ள நெடுந்தீவில் பிரசாரம் செய் வதை விடுத்து 5 லட்சம் வாக்காளர்கள் உள்ள யாழ்ப்பாணத்தில் பிரசாரம் செய்யலாம்தானே என்று கேள்வி எழுப்பினார் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் யாழ். அலுவலகத்தில் ஊடகவியலாளர் களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினரால் நெடுந் தீவுக்குச் சென்று பிரசாரம் செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக அந்தக்கட்சியின் முதன்மை வேட்பாளர் துவாரகேஸ்வரன் குற்றஞ்சாட்டி யுள்ளமை தொடர்பில் கேட்டபோது:

யாழ்ப்பாணத்தின் பல்வேறு தீவுகளில் ஒரு தீவு தான் நெடுந்தீவு. அங்கு வெறும் ஆயிரத்து 800 வாக்குகளே உள்ளன. அதை விட யாழ்ப் பாணத்தில் 5 லட்சம் வாக் குகள் உள்ளன. பின்பு ஏன் அங்கு பிரசாரம் செய்ய முனைப் புக் காட்டுகின்ற னர் என்று கேட்டார் அமைச்சர் சுசில். (கு-5)

# மலையகத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்துவேன்

## ம.தே.மு. வேட்பாளர் ரிஷி செந்தில்ராஜ் உறுதி

"மலையக மக்கள் முன்னணி யின் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிடும் எனக்கு வாக்க ளிப்பதன் மூலம் மலையக அரசி யல் வரலாற்றில் புதிய ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப் பளிக்க வேண்டும்.

- இவ்வாறு மலையக தேசிய முன்னணியின் வேட்பாளர் ரிஷி செந்தில் ராஜ் தெரிவித்தார்.

ஹற்றன் மேபீல்ட் தோட்டத்தில் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலை வரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான பிரபா கணே சன் தலைமையில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரை யாற்றும்போதே அவர் மேற் கண்ட வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மலையக அரசியல் இன்று கேவல மான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள் ளது. பணம் இருந்தால் எவர் வேண்டு மானாலும் அரசியல் பிரதிநித் துவத் தைப் பெற்றுக்கொள்ள லாம் என்ற நிலையிலேயே செயற்படுகிறார்கள். நேர்மை யாக அரசியல் செய்பவர் களுக்கு மக்கள் வாக்களிப்பதில்லை. வன்முறைக் கும்பல்களுக்கும், ஊழல் பேர்வழிகளுக் குமே மக்கள் வாக்களிக்கின்றார்கள். இந் நிலைப்பாட்டிலிருந்து மக்கள் மாறு படவேண்டும்.



தேயிலைத் தோட்ட வேலை களைத் தவிர, மலையக மக்க ளின் பொருளா தாரத்தை வளர்க் கக்கூடிய வேறு எந்த வேலைத் திட்டங்களையும் மலையகத் தலைமைகள் முன்வைத்த தில்லை. ஏதோ நாட்டில் இப் போதுதான் புதிதாக மாகாண சபைத் தேர்தல் முதன் முதலில் இடம்பெறுவதுபோல் வாக்குக் கேட் கின்றார்கள். ஏற்கனவே மாகாண சபையில் இவர்கள் இருந்த போது செய்த வேலைத்திட்டங் கள் எதுவும் இல்லை. எம்மைப் போன்ற இளைஞர்களுக்கு இவர்கள் வழிவிடவேண்டும். மலைய கத்திலேயே பிறந்து வளர்ந்த எனக்கு மலையக மக்களின் கஷ்டநஷ்டங்கள் நன்குதெரியும். மலையகஇளைஞர்களை பொரு ளாதார ரீதியில் முன்னே றுவ தற்குப் பல வேலைத்திட்டங் களைப்பதவியில்இல்லாமலேயே நான் செய்து வருகின்றேன்.

தனித்துவ சின்னமான மண் வெட்டிச் சின்னத்தில் போட்டி யிடும் என்னை அடையா ளங் கண்டு இப்போட்டியிலே களமி றக்கி எனக்காக பரப்புரை களை மேற்கொண்டு வரும் நாடா ளுமன்ற உறுப்பினர் பிரபா கணே சனின்வழிகாட்டலில்இம்மாகாண சபைத் தேர்தலி லே நிச்சயமாக வெற்றி பெறு வேன். நாடாளு மன்ற உறுப் பின ரின் பாதை யைப் பின்பற்றி எதிர்காலத் தில் மக்கள் சேவையை முன்னெ டுப்பேன் - என்றார். (ஐ-சி)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழரசுக் கட்சி வேட்பாளர்
தமிழ் தேசிய கூட்டமைப்பு
வடமராட்சி கிழக்கின் மைந்தன்
துணிச்சல் மிகு இளம் ஊடக பணியாளன்
X 14
சந்திரலிங்கம் சுகிர்தன் (B.Com)
(C/11230)



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்
தமிழர் தாயகத்தில் சமஸ்டி அடிப்படையிலான
பூரண சுயாட்சித் தமிழ் அரசை நிறுவுவோம்!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
9 X



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி,பண்பாட்டு,விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.
அவர்களை ஆதரிப்போம்
X 19
(C/11220)
கல்வியின் ஊடாக அரசியல், சமூக பொருளாதார மேம்பாடு





தேர்தல் காலங்களில் மட்டும் தேசியம் பேசுபவர்கள் நாமல்ல உண்மையான
ஜனநாயக போராளியாக வடகிழக்கிணைந்த தாயகத்தின் விடுதலையை நோக்கி
வவுனியா மாவட்ட எங்கள் வெற்றி வேட்பாளர்
எம்.எம்.ரதன் ஆசிரியர்
(இயக்குனர் - ஐடியல் கல்லூரி பண்டாரிகுளம், வவுனியா)
X 8
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு
எங்கள் வாக்கு
எம்.எம்.ரதன்
ஆசிரியருக்கே
தொடர்புக்கு: 077 6165135



வடமாகாண சபைத்தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
எங்களதும், உங்களதும்
காணாமல் போன
உறவுகளுக்காக....
விடுதலையின்றி
சிறைகளில் அடைத்து
வைக்கப்பட்டிருக்கும்
அரசியல் கைதிகளுக்காக
குரல் எழுப்பி வரும்
திருமதி அனந்தி
சசிதரனை ஆதரியுங்கள்.
X 1
திருமதி அனந்தி சசிதரன்
(எழிலன்)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரேயொரு பிரதான பெண் வேட்பாளர்
வடமாகாண சபையில்
பெண்கள் மீதான அனைத்து
அடக்குமுறைகளுக்கு
எதிராகவும், வாழ்க்கைத்தரம்
உள்ளிட்ட அரசியல்
தலைமைத்துவ
மேம்பாட்டுக்காகவும் எனது குரல்
ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும்.
X 4
கே. வினுபானந்தகுமாரி
(ஆசிரியை)
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)





மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் ஆகியோர் கிளிநொச்சி மாவட்டத் தில்.வடமாகாண சபைக்கான தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (ஜ)

# தேர்தலை நோக்காகக் கொண்டு அபிவிருத்தியைச் செய்யவில்லை

## கிளிநொச்சியில் சந்திரகுமார் எம்.பி.

அக்கராயன், ஒக. 31

மக்களுக்குத் தேவை இருக்கும்வரை அபிவிருத்திவேலைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். எமது பணிஅதுதான். இதில்வேறெந்த நோக்கமும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்தார்.



வடமாகாண சபைத் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டதில்போட்டியிடும் ஐ.ம.சு.மு. வேட்பாளர்களது பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபிவிருத்தி தேர்தலைப் பின்னணியாகக் கொண்டு அமையக் கூடாது. அந்த வகையில்தான் நாம் இன்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுத்துள்ளோம்.

மீள்குடியேற்றத்தின் பின்பு அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றாலும் மக்களின் தேவைகள் அதிகமாக உள்ளன. மக்களின் வாழ்க்கை, தொழில் வாய்ப்பு என்பனவற்றில் முன்னேற்றம் தேவையாக வுள்ளது.

அந்தவகையில் மக்களது தொழில் வாய்ப்பை அதிகரிக்கக் கூடிய திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப் படுத்தி வருகிறோம்.

இந்த நேரத்தில் தான் தேர்தல் வந்துள்ளது. இதன் மூலம் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கும், இதுவரை செய்யப்பட்ட வேலைகளுக்கும் மக்கள் ஓர் அங்கீகாரம் வழங்குவார்கள் என்று நாம் நம்புகிறோம்.-என்றார். (ஐ-18)

# மக்கள் வாக்களிப்பதை தடுக்க் ஆளும் தரப்புக் கட்சிகள் திட்டம்

## சாவகச்சேரி சூட்டுச் சம்பவம் குறித்து சித்தார்த்தன் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக.31

தமிழ் மக்களிடையே பயப்பீதியை ஏற்படுத்தி வாக்களிப்பு வீதத்தை குறைக்கச் செய்யும் முயற்சியே ஆளும் தரப்பினர் தம்மிடையே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவத்தின் பின்னணி என்று குற்றஞ்சாட்டியுள்ளார் புளொட் அமைப்பின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை வேட்பாளருமான தர்மலிங்கம் சித்தார்த்தன்.



> வடமாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன. அரச கட்சியைச் சேர்ந்தவர்கள் தம்மிடையே துப்பாக்கிச்சூடு நடத்துமளவுக்கு வன்முறைகள் அதிகரித்துள்ளன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை வேட்பாளர்களான இ.அங்கஜன் மற்றும் சர்வானந்தா இடையே சாவகச்சேரி நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து அவரது அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:

வடமாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன. அரச கட்சியைச் சேர்ந்தவர்கள் தம்மிடையே துப்பாக்கிச்சூடு நடத்துமளவுக்கு வன்முறைகள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் வடக்கில் நீதியான தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகத்தை எமக்கு தோற்றுவித்துள்ளது. தேர்தலை நடத்த விடாமல் செய்வதற்கான ஆரம்பக் கட்ட முயற்சி யாகவே இதைக் கருத வேண்டியுள்ளது.

ஜனநாயக வழியில் எமது மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்வு செய்வதைத் தடுக்கும் வகையில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்களைத் தூண்டி விட சிலர் முயற்சிக்கின்றனர்.

ஆளும் கட்சியினர் தமக்கிடையே மோதிக்கொள்வது, மக்கள் மத்தியில் வாக்காளர்கள் மத்தியில், ஒரு வித பயப் பீதியை உருவாக்கி, வாக்களிப்பு வீதத்தை குறைப்பதற்கான முயற்சியே. இது குறித்து தமிழ் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்-என்றுள்ளது. (ஐ-5)

# வேட்பாளர் வீட்டின் மீது கழிவு ஒயில் வீச்சு

யாழ்ப்பாணம், ஒக.31

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை வேட்பாளர் பொ.ஐங்கரநேசனின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது.



திருநெல்வேலியில் அமைந்துள்ள அவரது வீட்டின்மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் வீட்டுச் சுவர் மற்றும் மதில்கள் மீது கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது. அத்து டன் வீட்டு கேற் முன்பாக பூசணிக்காய் வெட்டி வைக்கப்பட்டிருந்தது. (ஐ-5)







## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### சுட்டார் சர்வானந்தா

இராமநாதன் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டார். இதன்போது அவர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஜானக ரணசிங்க, வேட்பாளரான சர்வானந்தா மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தரான முதியான் சலாகே திஸநாயக்க தினேஸ் என்பவர் காயமடைந்தார் என்றும், அவர் தனது வாக்கு மூலத் தில் எந்த இடத்திலும் தன்னைச் சுட்டது யார் என்பது பற்றி குறிப்பிடவில்லை எனவும் சர்வானந்தா துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை கண்ட 6 சாட்சிகள் உள்ளனர் என்றும் நீதிமன்றில் தெரிவித்தனர். இதனையடுத்தே சர்வானந்தாவிடம் விசாரணை நடத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை,கைது செய்யப்பட்டுள்ள இராமநாதனை எதிர்வரும் செப்ரெம்பர் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான சர்வானந்தாவின் ஆதரவாளர்கள் மீது துப்பாக்கச்சூடு நடத்திய குற்றச்சாட்டில் இராமநாதன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் மீது பொலிஸார் கொலை முயற்சி வழக்கு பதிவு செய் துள்ளனர். அவர் நேற்று சாவ கச்சேரி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இதன் போது இராமநாதனின் சட்டத்தரணிகள் அவருக்கு பிணை வழங்குமாறு கோரி மன்றில் மனு சமர்ப்பித்தனர். இதனைப் பரிசீலித்த நீதிவான், இவ் வாறான குற்றச்சாட்டுக்களில் கைதானோருக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதிவான் நீதிமன்றுக்கு இல்லை என்று கூறி பிணை மனுவை நிராகரித்தார். அத்துடன் அவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை, தனது பெயருக்கு பங்கம் விளைவிக்கும் நோக்குடனேயே திட்டமிட்டு இந்த துப்பாக்கிச் சூட்டுக் குற்றச்சாட்டு தன் தந்தையின் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும், தாங்கள் ஆயுதங்கள் எதுவுமற்றே யாழ்ப்பாணத்தில் நடமாடுவதாகவும் பத்திரிகையாளர் சந்திப்பின் போது அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். (த-4-8-9)

### நவநீதம்பிள்ளையுடன் பேசியவர்களுக்கு மிரட்டல்

நவநீதம் பிள்ளையிடம் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த செவ் வாய், புதன்கிழமைகளில் வடக்கு - கிழக்கு பகுதிகளுக் குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது முல் லைத்தீவில் மக்கள் சந்திப்புகளை மேற்கொண்டதுடன், சிவில் சமூக குழுக்களையும் சந் தித்துப் பேசியிருந்தார்.

நவநீதம்பிள்ளையிடம் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறியவர்களுக்குப் புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக மிரட்டல் விடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த விடயத்தை, நவநீதம் பிள்ளையுடனான நேற்றைய சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (த-5)

### முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை முறையிட்ட கூட்டமைப்புக்கு பாராட்டு

இந்த முறைப்பாட்டை தன்னிடம் தெரிவித்தமைக்காக கூட்டமைப்புக்கு நவநீதம்பிள்ளை பாராட்டுத் தெரிவித் துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடன் நேற்றுக் கொழும்பில் நடத்திய சந்திப்பின்போதே முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துக் கூறியுள்ளது.

இதுதொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,

இலங்கையில் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை, முஸ்லிம் பெண்களின் பர்தா உடை பிரச்சினை தொடர்பில் நவநீதம்பிள்ளையிடம் விளக்கமளித்தோம்.

அதற்கு பதிலளித்த நவநீதம்பிள்ளை, "முஸ்லிம் மக்கள் பிரச்சினை குறித்து நீங்கள் என்னிடம் கூறியமைக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன். அவர்களுடைய பிரச்சினையை பேசுவதற்கு யாரும் முன்வராத நிலையில் நீங்கள் இதனை என்னிடம் தெரிவித்தமைக்கு நான் பாராட்டுகிறேன்" என்று கூறினார் - என்றனர். (த-சி)

### காணாமற்போனோர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை எட்ட உதவுவேன்

சம்பவம் அங்கிருந்து எல்லோரையும் கண்கலங்க வைத்தது. இந்தச் சந்தர்பத்தில் நவிப்பிள்ளை அம்மையார் அழுத தாய்மாரைக் கட்டியணைத்து ஆறுதல் தெரிவித்தார்.

இறுதியில் உரை நிகழ்த்திய அவர், காணாமற்போனோரின் உறவுகளின் வலியை தான் அறிந்துள்ளதாகவும், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை எட்டுவதற்கு தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தார். (த-5)

### காணாமற்போனோர் விசாரணை ஐ.நா. குழுவை அனுமதியுங்கள்

பின்னரும் காணாமற்போன சம்வங்கள் முழு இலங் கையையும் பாதித்துள்ளன. தங்கள் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய உண்மையைப் பலகுடும்பங்கள் இன்னமும் தேடுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில் போர் காலத்தின் போதான காணாமற்போதல்களை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதியினால் ஆணைக் குழு நியமிக்கப்பட்டதை ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் கொள்கின்றது. இந்த நடவடிக்கையைச் சர்வதேச தர விசாரணைக்கு ஒத்ததாக -நம்பத் தகுந்த வகையில் சுயாதீனத்துடன் முன்னெடுக்க வேண்டும்.இந்த நடவடிக்கைக்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பை இலங்கை அரசு பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் எதிர் பார்க்கின் றது. அத்துடன் காணாமற்போதல்கள் மீதான ஐக்கிய நாடுகள் செயற்குழு இங்கைக்குப் பயணம் செல்வதற்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்து வரு கின்றது. இதனை அனுமதிப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பலவந்தமாகக் காணாமற்போதல்களை குற்றவியல் குற்றமாக்கும் சட்டத்தை நிறைவேற்ற அரசு முழுக் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த கால காணமற்போதல்களைக் கையாள்வதும் மற்றும் புதிதாகக் காணாமற்போதல் களைத் தடுப்பதும் நாடு முன்னோக்கி நகர உதவும் என்றுள்ளது. (த-5)

### போர்க் குற்ற விசாரணை நடத்தியே தீர வேண்டும்

மாறு:- "ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி கொழும்பில் வைத்து கூட்ட றிக்கை ஒன்றை வெளியிட்ட னர். அந்தக் கூட்டறிக்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும், அதிகாரப் பகிர்வு மூலம் தமிழருக்கு அரசியல் தீர்வு வழங்கப்படும், இடம்பெயர்ந்த மக்கள் ஆறு மாத காலத்திற்குள் அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றப்படுவர் என்பனவே அந்த வாக்குறு திகளாகும். ஆனால், இவற்றில் எதனையும் ஜனாதிபதி நிறைவேற்றவில்லை. இது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் எடுத்துரைத்தோம்.

இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் இதுவரை சுயாதீன விசாரணை நடத்தப்படவில்லை. திருகோணமலை மாணவர்களின் படுகொலை, மூதூர் தொண்டர் நிறுவனப் பணியாளர்கள் படுகொலைகள் தொடர்பில் இது வரையில் நீதியானதும் நியாயமானது மான விசாரணைகள் நடத்தப்படவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அரசு முறையாகச் செயற்படுத்தவில்லை. அரசால் உள்நாட்டில் அமைக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் சரியாகச் செயற்படவில்லை.

காணாமற்போன தமிழர்கள் தொடர்பிலும், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு இதுவரை எடுக்கவில்லை.

எனவே, இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றச்சாட்டுகள், மனித உரிமை மீறல்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணை நடத்தப் படவேண்டும். அப்போதுதான் உண்மையைக் கண்டறியலாம் என்று நவநீதம் பிள்ளையிடம் வலியுறுத்தினோம்.

உள்நாட்டு விசாரணைகளில் எமக்கு நம்பிக்கை இல்லை. இந்த விசாரணைகள் நீதி, நியாய மற்று நடத்தப்படும் என்றும் அவரிடம் சுட்டிக் காட்டினோம்.

இவை தவிர, போருக்குப் பின்னர் அரசால் வடக்கு, கிழக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் அவை எமது மக்களைச் சென்றடையவில்லை. இராணுவ தேவைகளுக்காகவும் அரசியல் நோக்கங்க ளுக்காகவுமே இந்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப் படுகின்றன.

அதேவேளை, போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்கு இராணுவமயமாக்கப்பட்டுள்ளதுடன், அங்கு இராணுவத்தின் ஆட்சிதான் நடக்கின்றது. இதனால் இவ்விரு மாகாணங்களையும் சேர்ந்த மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். காணி அபகரிப்பு, பொதுமக்களின் விவசாயக் காணிகளில் இராணுவம் விவசாயம் செய்தல், தமிழ்ப் பெண்கள் மீது இராணுவத்தினர் மேற்கொள்ளும் பாலியல் துஷ்பிரயோகங் கள், கலாசார சீரழிவுகள் என பல்வேறு பிரச் சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, வடக்கு, கிழக்கில் மக்கள் குடியிருப்புகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும் என்றும் நவநீதம்பிள்ளையிடம் எடுத்துரைத்தோம்.

தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு அரசால் இதுவரையில் நியாயமானதொரு அரசியல் தீர்வு முன்வைக்கப்படவில்லை. அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைத்த யோசனைகளையும் அரசு கண்டு கொள்ளவில்லை. சரியானதொரு பதிலையும் இதுவரையில் அரசு வழங்கவில்லை. இதனால் தான் அரசு நியமித்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் நாம் பங்கேற்காமல் உள்ளோம் என்றும் நவநீதம்பிள்ளையிடம் தெரிவித்தோம்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நாளுக்குநாள் அதிகரித்து செல்கின்றது. இவை இடம் பெறாமல் பாதுகாத்துக்கொள்ள ஐ.நா. மனித உரிமை அலுவலகம் ஒன்று இலங்கையில் நிரந்தரமாகத் திறக்கப்பட வேண்டும் எனவும் நாம் நவநீதம்பிள்ளையிடம் வலியுறுத்தியுள்ளோம்.

அதேவேளை, அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கிடையில் நடைபெற்றுவந்த அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சை அரசுதான் குழப்பியது என்றும் நவநீதம்பிள்ளையிடம் எடுத்துக் கூறினோம்.அவரிடம் தெரிவித்த கருத்துகளை அறிக்கை வடிவிலும் சமர்ப்பித்துள்ளோம்.

நாம் தெரிவித்த கருத்துக்களுக்கு நவநீதம்பிள்ளை பதிலளிக்கையில், "எனது இலங்கை சுற்றுப்பயணத்தின்போது பல்வேறு தரப்பினர்களிடமிருந்து திரட்டிய தரவுகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐ.நாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் மீளாய்வுக் கூட்டத்தொடரில் அறிக்கையாகச் சமர்ப்பிக்கவுள்ளேன். அத்துடன் இது தொடர்பில் அங்கு வாய்மூலமாக குரல் கொடுக்கவும் உள்ளேன். அடுத்த வருடம் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின்போது இலங்கை நிலைமை தொடர்பில் பூரண அறிக்கையொன்றையும் சமர்ப்பிக்கவுள்ளேன். அத்துடன் எனது இலங்கை பயணம் தொடர் பில் ஐ.நா. அரசியல் குழுவிடம் தெளிவாக எடுத்துரைப்பேன்" என்று கூறினார்" - என்றனர். (த-சி)

### சட்ட விரோத ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளனவா?

சகர் இதனைக் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் அங்கஜனின் தந்தையான இராமநாதன் என்பவர் கொலை முயற்சிக் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் பொலிஸ் அத்தியட்சகரிடம் கேள்வி எழுப்பப் பட்டது.

இதற்குப் பதிலளித்த அத்தியட்சகர் பத்திநாயக்க, இராமநாதன் சட்ட ரீதியாக வைத்திருக்கும் துப்பாக்கி கொழும்பில் உள்ளது என்று விசாரணையின் போது அவரே தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் நடத்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இராமநாதனே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும் கூறி இரண்டு பேர் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

இராமநாதனிடம் இருந்து துப்பாக்கி மற்றும் சில சான்றுப் பொருள்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அவை பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளன என்றார்.

இராமநாதனின் சட்ட ரீதியான துப்பாக்கி கொழும்பில் என்றால் இங்கு சட்ட விரோத ஆயுதப் பயன்பாடு உள்ளதா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, பொலிஸார் பதில் தரவில்லை. விசாரணை மேற்கொள்வதாகவே தெரிவித்தனர். (த-4)




**காணி விற்பனைக்கு**

பலாலி வீதியில் உள்ள விவசாயக் கல்லூரிக்கு அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:

077 173 7144

(39355) (10,16,14)

**LAP TOP மலிவு விற்பனை**

DELL 18750/= மட்டுமே

*FREE-HEAD PHONE/4GB PEN*

ஒரு வருட உத்தரவாதம்

ST.ANTONY'S

187, K.K.S. ROAD, JAFFNA TOWN

021 222 4865, 075 069 8608

(C/11650) (7,8,3)







கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட மகளிர் சதுரங்கப் போட்டிகளில் ஸ்ரீ சண்முகா இந்துக் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு அணி முதலாம் இடத்தையும், 15 வயதுப் பிரிவு அணி 3ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டன. இந்தப் போட்டிகள் அண்மையில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியில் நடைபெற்றன. (ற-422)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக.31
சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு-III கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் அங்கத்துவக்கழகங்களுக்குஇடையே நடத்தும் தகுதிகாண் கிரிக்கெட் ஆட்டம் இன்று சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் காலிறுதியாட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(ற-23)

---

யாழ்ப்பாணம்,ஒக. 31
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின்50ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப.4 மணி
கருணாகரன் விளையாட்டுக் கழகம் எதிர் பொற்பதி 'பி' அணி.
பி.ப.4.45 மணி
பொற்பதி 'ஏ' அணி எதிர் அண்ணா சிலையடி. (ற-23-422)

---

யாழ்ப்பாணம்,ஒக. 31
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன்ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சூசைப்பிள்ளை ராஜ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.45 மணி
வளர்மதி விளையாட்டுக் கழகம் எதிர் றோயல் விளையாட்டுக் கழகம்.
பி.ப.4.45 மணி
சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

---

யாழ்ப்பாணம்,ஒக. 31
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:
பி.ப. 3 மணி
விண்மின் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம்.
பி.ப.4 மணி
ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் எதிர் சென்.நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம். (ற-23)

---

யாழ்ப்பாணம், ஒக.31
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணியின் விவரம்:
இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் எதிர் அறிவொளி விளையாட்டுக் கழகம். (ற-23-288)

---

யாழ்ப்பாணம், ஒக. 31
வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் யூனிபைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)



# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

**நவசக்தி வி.க.**
**உதைபந்துத் தொடர்**

யாழ்ப்பாணம், ஒக.31
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம், பாரதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றன.
பொமர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணிக்கும், மைக்கல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா விளையாட்டுக்காக அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.
நாமகள் விளையாட்டுக் கழகத்துக்கும் அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெறவிருந்த ஆட்டத்தில், நாமகள் அணி சமூகமளிக்காத காரணத்தால் அல்வாய் பாரதி விளையாட்டுக்கழகம்வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.(ற-23)

**யங்கம்பன்ஸ்**
**உதைபந்துத் தொடர்**

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
சென். சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றதை அடுத்து வெற்றி, தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் சென்.சேவியர் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக மதன் தெரிவானார். (ற-23)

# விசேட தேவை உடையோரின் விளையாட்டு போட்டி இன்று


வவுனியா, ஒக.31
வவுனியாவில் விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களின் திறன் வெளிப்பாட்டு விளையாட்டுப் போட்டி இன்று காலை 9 மணி முதல் பி.ப. 1 மணிவரை வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.
வவுனியா மாவட்டத்தில் விசேட தேவைகளுக்குட்பட்டவர்களின் அபிவிருத்திக்காகச் செயற்பட்டு வரும் 'சீட்' வலுவூட்டல் நிறுவனத்தால் இந்த விளையாட்டுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
(ற-402)




# பதக்கம் வென்றார் உசைன் போல்ட்

ஷூரிஸ் டமண்ட் லீக்கின் 100 மீற்றர் ஓட்டத்தில் ஜமேக்காவின் முன்னணி வீரர் உசைன் போல்ட் வெற்றிபெற்றுள்ளார். 27 வயதான உசைன் போல்ட் போட்டித் தூரத்தை 90 செக்கன்களில் கடந்தார்.
சக நாட்டு வீரரான நிக்கேல் அஸ்மேட்டி இரண்டாம் இடத்தையும் அமெரிக்காவின் ஜெஸ்டின் கட்லின் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.
அண்மையில் நடைபெற்ற உலக மெய்வல்லுநர் சம்பியன் ஷிப் போட்டிகளில் 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டங்களில் உசைன் போல்ட் தங்கப் பதக்கங்களை வெற்றி கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ற)

# பின்ச் அதிரடியில் அடங்கியது இங்கிலாந்து



சுற்றுலா ஆஸ்திரேலிய அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையிலான முதலாவது '20/20' ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 39 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

த றோஸ் போல் மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 248 ஓட்டங்களைக் குவித்தது. '20/20' சர்வதேச ஆட்டத்தில் அதிக ஓட்ட எண்ணிக்கையான இலங்கையின் 260 ஓட்டங்களை விட இது 12 ஓட்டங்கள் குறைவானதாகும்.

முதலாவது இலக்கை 11 ஓட்டங்களுக்கே இழந்த ஆஸ்திரேலிய அணி, அதன் பின்னர் அதிரடியாக ஆடியது.

இரண்டாவது இலக்குக்காக 114 ஓட்டங்களும் 3ஆவது இலக்குக்காக 101 ஓட்டங்களும் குவிக்கப்பட்டன.

துடுப்பாட்டத்தில் ஆரொன் பின்ச் 63 பந்துகளில் 156 ஓட்டங்களைக் குவித்தார். 11 நான்கு ஓட்டங்கள், 14 ஆறு ஓட்டங்கள் உள்ளடங்கலாகப் பெறப்பட்ட இந்த ஓட்ட எண்ணிக்கை '20/20' சர்வதேச ஆட்டங்களில் பெறப்பட்ட அதிகூடிய தனிநபர் ஓட்டங்களாகும்.

தவிர, ஷேன் வொட்சன் 16 பந்துகளில் 37 ஓட்டங்களையும், ஷோன் மார்ஷ் 21 பந்துகளில் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேட் டேர்பக் 34 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஸ்டீவன் பின், ஸ்ருவேர்ட் புரோட், டானி பிறிக்ஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

249 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்று 39 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பத்தில் வேகமாகத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 3 பந்துப்பரிமாற்றங்களில் 33 ஓட்டங்களைக் குவித்த போதிலும், அதன் பின்னர் இலக்குகளை வேகமாக இழந்து 5 இலக்குகள் இழப்புக்கு 137ஓட்டங்களுடனும் தடுமாறியது. எனினும் ஜோ றூட் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக ஜோ றூட் 49 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 90 ஓட்டங்களையும் ரவி போப்பாரா 29 பந்துகளில் 45 ஓட்டங்களையும் ஜொஸ் பட்லர் 17 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஜோன்சன், ஜொஸ் ஹேஷல்வூட் இருவரும் தலா 2 இலக்குகளையும், ஷேன் வொட்சன், ஜேம்ஸ் போள்க்னர் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஆரொன் பின்ச் தெரிவானார். (ற)



# அதிர்ச்சித் தோல்வியுற்றார் வீனஸ் வில்லியம்ஸ்

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. அதில் இரண்டு முறை சம்பியன் பட்டத்தை கைப்பற்றி இருந்த (2000, 2001) வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா) 2ஆவது சுற்றிலேயே அதிர்ச்சிகரமாக தோற்றார். சீனாவை சேர்ந்த ஜி செஜிங் 6:3, 2:6, 7:6 (7:5) என்ற செற் கணக்கில் வீனஸ் வில்லியம்சை தோற்கடித்து 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

வீனஸ் கடந்த 2 ஆண்டுகளாக அமெரிக்க ஓபனில் 2ஆவது சுற்றிலேயே வெளியேறினார். இந்த முறையும் தொடர்ந்து 3ஆவது ஆண்டாக 2ஆவது சுற்றில் வெளியேறினார்.


> **வீனஸ் கடந்த 2 ஆண்டுகளாக அமெரிக்க ஓபனில் 2ஆவது சுற்றிலேயே வெளியேறினார். இந்த முறையும் தொடர்ந்து 3ஆவது ஆண்டாக 2ஆவது சுற்றில் வெளியேறினார்.**

3ஆம் நிலை வீராங்கனையான ரட்வன்ஸ்கா (போலந்து) 6:0, 7:5 என்ற நேர்செற் கணக்கில் ஸ்பெயினை சேர்ந்த மரியாவை தோற்கடித்து 3ஆவது சுற்றுக்கு நுழைந்தார்.

மற்ற ஆட்டங்களில் நா லீ (சீனா), கர்லா சுவாரஸ் (ஸ்பெயின்) ஆகியோர் வென்று 3ஆவது சுற்றில் நுழைந்தனர்.

ஆண்கள் பிரிவில் நடப்பு சம்பியனும் உலகின் 3ஆம் நிலை வீரருமான அண்டி முர்ரே (இங்கிலாந்து) தொடக்க சுற்றில் மைக்கேல் லோட்ராவை எதிர்கொண்டார். இதில் முர்ரே 6:2, 6:4, 6:3 என்ற நேர் செற் கணக்கில் வென்று 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

2009ஆம் ஆண்டு சம்பியனும், 6ஆம் நிலை வீரருமான டெல் போட்ரோ (ஆர்ஜென்டினா) 6:3, 6:7, (5:7), 6:4, 7:6 (9:7) என்ற செற் கணக்கில் கடும் போராட்டத்துக்கு பிறகு லோபசை (ஸ்பெயின்) தோற்கடித்தார். (ற)





# சிம்பாப்வேயை வீழ்த்தி பாகிஸ்தான் அசத்தல்

சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிம்பாப்வே சென்றுள்ள பாகிஸ்தான் அணி மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி 1:0 என்று முன்னிலை வகித்தது.

இரண்டாவது ஆட்டம் ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது. நசிர் ஜாம்ஷெத் 32 ஓட்டங்களும், உமர் அமின் 59 ஓட்டங்களும் எடுத்தனர். முகமது ஹபீஸ் 5 சிக்சருடன், 9 பவுண்டரியுடன் சதம் கடந்து 136 ஓட்டங்களும், அப்ரிடி 39 ஓட்டங்களும் எடுத்தனர். சிம்பாப்வே சார்பில் பிரையன் விடோரி 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.



300 ஓட்டங்களுடன் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 42.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 209 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

ஹாமில்டன் மசகட்சா 24 ஓட்டங்களையும், வில்லியம்ஸ் 37 ஓட்டங்களையும், அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர் 79 ஓட்டங்களையும், வோலர் 40 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் ஜுனைட் கான் 4 இலக்குகளையும், அப்துர் ரெஹ்மான், சயீத் அஜ்மல் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

சதம் கடந்த பாகிஸ்தானின் முகமது ஹபீஸ் ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

இந்த வெற்றியின் மூலம், மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் 1-1 என்று சமநிலை வகிக்கிறது. மூன்றாவது மற்றும் கடைசி ஆட்டம் ஹராரேயில் இன்று நடைபெறவுள்ளது. (ற)

# சாதனை படைத்தார் பின்ஞ்

இங்கிலாந்து அணிக்கு எதிரான '20/20' ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் ஆரொன் பிஞ்ச் 63 பந்துகளில் 156 ஓட்டங்கள் எடுத்து புதிய உலக சாதனை படைத்தார்.

ஆஸ்திரேலிய சுற்றுலா அணிக்கும்-இங்கிலாந்து அணிக்கும் இடையேயான '20/20' தொடரின் முதல் ஆட்டம் நேற்று சவுதம்டனில் நடந்தது. இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர்களாக டேவிட் வோர்னர், ஆரொன் பிஞ்ச் களம் இறங்கினர்.

வோர்னர் ஒரு ஓட்டத்திலேயே ஆட்டமிழக்க, ஆரொன் பிஞ்ச் அதிரடி ஆட்டத்தை தொடர்ந்தார்.

26 பந்தில் 50 ஓட்டங்களை தொட்ட ஆரொன், 9ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஹாட்ரிக் சிக்சர் அடித்து அசத்தினார். 13ஆவது பந்துப்பரிமாற்றத்தில் பிஞ்ச் சிக்சர் அடித்து சதத்தை பூர்த்தி செய்தார். அவர் 47 பந்தில் 100 ஓட்டங்களை எட்டினார். இதில் 8 சிக்சர், 9 பவுண்டரிகள் அடங்கும். இது '20/20' கிரிக்கெட்டில் 2ஆவது அதிவேக சதமாகும். தொடந்து 63 பந்துகளில் 156 ஓட்டங்களை எட்டிய நிலையில் ஆட்டமிழந்தார். இதில் 14 சிக்சர், 11 பவுண்டரிகள் அடங்கும். சர்வதேச '20/20' கிரிக்கெட்டில் ஒரு ஆட்டத்தில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற சாதனையை படைத்திருக்கிறார்.



விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

TATA 207DI Single Cap விற்பனைக்கு
PR-xxxx இலக்கம், பிற்பகுதி கொழும்பு அலுமினியம் பொடி (Body), 18000k.m, வெள்ளைநிறம் மிக நல்ல நிலையில் உள்ளது.
தொடர்பு: 077 630 6733, 021 225 0186 (39277) (7.6.3)

விசேட விலைக்கழிவு 30%
வாடிக்கையாளர்களின் நன்மை கருதிய விலைக்குறைப்பு
டிஜிற்றல் பனர்கள்
ஸ்டிக்கர்கள்
பெயர்ப் பலகைகள்
லஜிற் போர்ட்க்கள்
print city
A9, சங்கத்தானை, சாவகச்சேரி.
021 320 7552 078 3016 100 078 8363 503
சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்

# சம்பியன்ஸ் லீக்கிலும் மலிங்க இல்லை



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரிலும் பங்குபற்றமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள சம்பியன்ஸ் லீக் '20/20' தொடருக்கான மும்பை இந்தியன்ஸ் அணியிலும் லசித் மலிங்க இடம்பெறாத காரணத்தினாலேயே இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தனது இரண்டாவது குழந்தையை எதிர்வரும் செப்ரெம்பரில் லசித் மலிங்க எதிர்பார்க்கும் நிலையில், குழந்தை பிறக்கும் காலத்தில் தனது மனைவியுடன் இருப்பதற்கு லசித் மலிங்க விரும்புகின்றார். அதையடுத்தே சிம்பாப்வே தொடரிலிருந்தும், மும்பை இந்தியன்ஸ் சார்பான சம்பியன்ஸ் லீக் '20/20' தொடரிலிருந்தும் அவர் விடுப்புக் கோரியிருந்தார்.

சிம்பாப்வே தொடரில் பங்குபற்றாமல் விடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை அணியின் பிரதம தேர்வாளர் சனத் ஜெயசூரிய நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். இந்த நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சம்பியன்ஸ் லீக் '20/20' தொடருக்கான மும்பை இந்தியன்ஸ் அணியிலும் லசித் மலிங்க இடம் பெறவில்லை.

அண்மையில் நிறைவடைந்த கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் பின்னர் தொழில்முறை கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்ற ரிக்கி பொண்டிங்கும் இந்த அணியில் இடம் பெற்றிருக்கவில்லை.

மும்பை இந்தியன் அணித் தலைவராக றோகித் சர்மா செயற்படவுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள அணி றோகித் சர்மா, சச்சின் டெண்டுல்கர், டினேஷ் கார்த்திக், பிரக்ஜான் ஓஜா, ஹர்பஜன் சிங், அம்பத்தி ராயுடு, றிஷி தவான், ஆதித்தியா தரே, அக்ஷர் பட்டேல், அபு நெச்சிம் அஹமட், கெரான் பொலார்ட், டுவைன் ஸ்மித், நேதன் கோர்ட்டர் நீல், மிற்சல் ஜோன்சன், கிளென் மக்ஸ்வெல்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
af
பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்தவர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. ஏனெனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். இன்றே பதிவுசெய்யுங்கள்
புதிய வகுப்பு: விரைவில்...
61, Kachchery-Nallur Road, Jaffna T.P.021.222.8093
கச்சேரி பஸ்தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டடம்

அரிய வாய்ப்பு 02.09.2013 வரை மட்டுமே
2 இலட்சம் வேதனம், உணவு, இருப்பிடம் இலவசம்
ஐரோப்பிய நாடான Holand (நெதர்லாந்தில்)
படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை.
எல்லா நாள்களும்
காலை 8 முதல் இரவு 6.30 வரை
(39271)(10.6)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

IIS வழங்கும்
கணனி, முகாமைத்துவ, ஆங்கில கற்கை நெறிகளுக்கான விஷேட சலுகைகள்
சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்
2013 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!!
உங்களுக்காகவே கணனி, முகாமைத்துவ, ஆங்கில கற்கை நெறிகளுக்கான விஷேட பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது. இப்பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் Flash Memory ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும்.


ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளுங்கள்....
புதிய பிரிவுகள் ஆரம்பம்
07.09.2013
09.09.2013
12.09.2013
காலை 10.00 மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4 922 741
INSTITUTE OF INFORMATICS STUDIES
100 CLOCK TOWER ROAD, JAFFNA
T.P : 021 222 2831/021 492 2741 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

இலவச வைத்திய ஆலோசனை
வல்வெட்டித்துறையில்....
பொது வைத்திய நிபுணர் Dr.S.கேதீஸ்வரன் அவர்களால் வல்வெட்டித்துறை மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையத்தில் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டும்...
காலை 8 மணியில் இருந்து பி.ப. 4மணிவரை
பதிவுகளை மேற்கொள்ள 021 2055105/ 0774656428
மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்
யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த வைத்திய நிபுணர்களை ஒன்றிணைத்த தினசரி வைத்தியசேவை.
வருகை தரும் வைத்திய நிபுணர்கள்

- குழந்தை வைத்திய நிபுணர்கள்
- சத்திர சிகிச்சை நிபுணர்கள்
- தோல் வைத்திய நிபுணர்கள்
- கண் வைத்திய நிபுணர்கள்
- காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள்
- உளநல வைத்திய ஆலோசனை
- பொது வைத்திய நிபுணர்கள்
- மகபேற்றியல் நிபுணர்கள்
- இதய சிகிச்சை நிபுணர்கள்
'First to Care'

ECG ஸ்கான்
இரத்தப் பரிசோதனை
Mathujan Medical Consulting Center
மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்
மருதடி வல்வெட்டி, யாழ்.வீதி, வல்வெட்டித்துறை.
தொ.பே: 021 205 5105
(சி-4491)

நல்லூரில் எமது உற்சவகால பணிமனை!
திருமண அழைப்பிதழ்களுக்கு அதிரடி விலைக்கழிவு 20%
இதற்குரிய கூப்பன்களை எமது நல்லூர் உற்சவகால பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்
ANDRA
WEDDING CARDS


திருமண அழைப்பிதழ்களின் சாம்ராச்சியம்
Tel : 0212228929, 0217200000
Mob : 0776622981, 0777481696.
பருத்தித்துறை வீதி, நல்லூர். (றியோ கிறீம் ஹவுஸ் அருகாமையில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.